
அமுதசுரபி


ஏப்ரல் '92
விலை ரூ. 5



கேப்டவுனில்...



மகாத்மா காந்தி
வெள்ளையர்களால்
தூக்கியெறியப்பட்ட பீட்டர்
மேரிட்ஸ்பர்ட் ஸ்டேஷன்.



டர்பன் ஹரே ராதா ஹரே
கிருஷ்ணா கோயிலின்
உள்ளே...



தென் ஆப்பிரிக்க இந்தியப்
பெண்கள்...

போட்டோ நிபுணரின் பார்வையில்
தென் ஆப்பிரிக்கா





டர்பனில் ஹரே ராதா ஹ
கிருஷ்ணா கோயிலில்...

அமுதசுரபி

மேலட்டை விளக்கச் சிறப்புக் கட்டுரை,
("ஒரு போட்டோ கிராபரின் பார்வையில் தென்னாப்பிரிக்கா")
'மே' இதழில் வெளிவருகிறது.

ACC. NO. 10588

● ஏப்ரல் – 1992 ● ஆங்கிரஸ – சித்திரை ● மலர் : 44 ● இதழ் : 12

● ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன் ● பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா

● கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி.சுப்பிரமணியன் ஐ.ஆர்.டி.எஸ்.

● மேலட்டை வண்ணப் படங்கள் : யோகா ● இதழ் ஆப்செட் அமைப்பு : சிவகுமார்

நன்றி தெரிவிக்க நல்ல வாய்ப்பு

தமிழுக்குப் பெருமை: ஐம் பெருங்காப்பியங்கள், திருக் குறள், கம்ப இராமாயணம்.

ஐம்பெருங்காப்பியங்களுள் தலைசிறந்த சிலப்பதிகாரமும், சீவக சிந்தாமணியும் தமிழ் மக் கள் பயில முடியாமல் இடைக் காலத்தில் மறைந்திருந்தன.

தமிழ்த் தாத்தா உ.வே. சாமி நாத ஐயர் சங்க இலக்கிய ஏடு களைத் தேடிப் பதிப்பித்தது போல் சிலப்பதிகார, சீவக சிந்தாமணி ஏடுகளைத் தேடிப் பதிப்பித்து தமிழ் மக்களுக்கு அளித்து நம் பெருமையை உலகம் அறியச் செய்தார்.

ஏடுகளைத் தேடிப் பிடிக்க அவர் பட்டபாடு கொஞ்ச நஞ்ச மன்று. அவற்றைப் பதிப்பிப்ப தற்கு அவர் எடுத்த முயற்சியை அவருடைய 'என் சரித்திரத்' தில் விரிவாகப் படிக்கலாம்.

தமிழ்த் தாத்தா, சிலப்பதி கார ஏட்டைப் பதிப்பித்தது 1892 ஆம் ஆண்டில்.

நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரம் நமக்குக் கிடைத்து நூறாண்டுகள் ஆகின்றன. கருவூலம் பெற்ற நிகழ்ச் சியை நாம் சிறப்பாகக் கொண் டாட வேண்டும்.

சிலம்பின் பெருமையை மக்கள் அறியச் செய்தவர்கள் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுபிள்ளை, சிலம்புச் செல் வர் ம.பொ.சி., இருவருமாவர்.

டாக்டர் ம.பொ.சி. பாமர னுக்கும் புரியும் வகையில் சிலப் பதிகாரத்தைப் பட்டி தொட்டி களில் பரவச் செய்தார். அத னால் அவருக்குப் பேரறிஞர் ரா.பி. சேதுபிள்ளை சிலம்புச் செல்வர் என்ற புகழ்ப் பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

சிலம்புச் செல்வர் சிலப் பதிகாரத்தை ஒலிக்கச் செய்து அரை நூற்றாண்டுகள் ஆகின் றன. தமிழ்த் தாத்தாவையும், சிலம்புச் செல்வரையும் தமிழ கம் தக்க முறையில் சிறப்பிக்க வேண்டும்.

தமிழ்ப் பல்கலைக் கழகத் திற்குத் தமிழ்த் தாத்தாவின் பெயரைச் சூட்ட வேண்டும் என்று நாம் நான்கு ஆண்டு களுக்கு முன்பு எழுத்தாளர் மாநாட்டில் தீர்மானமாக நிறை வேற்றியபோது சாதிப் பெய ரைக் குறிப்பிட்டுச் சீறியவர் பலர். ஆனால் இன்று காங் கிரஸ் தலைவர் வாழப்பாடியார் போன்றவர்கள் பல்கலைக் கழகத்திற்குத் தாத்தா பெய ரைச் சூட்டுவதை ஆதரிக் கின்றனர். சிலம்பு கிடைத்த நூற்றாண்டு விழாவைத் தமிழ் மக்கள் சிறப்பாகக் கொண்டாட வேண்டும்.



மனம் மாற வேண்டும்

கர்மயோகி

அன்னைக்கு வேண்டிக் கொண்டால் பலிக்க வில்லை என்பதில்லை. பெரும்பாலான பிரார்த் தனைகள் உடனேயும், மற்றவை காலம் தாழ்ந் தும் நிச்சயமாகப் பலிப்பதுண்டு. மனத்தின் நிலையும், பிரார்த்தனையும் தொடர்புள்ளவை. சில சமயம் மனம் அலை பாய்வதுண்டு. அளவு கடந்தும் அலை பாய்வதுண்டு. அந்தச் சமயங் களில் எந்தக் காரியமும் கூடி வராது. ஒருசில சமயங்களில் மனம் சலனமற்றிருக்கும். அப் பொழுது செய்யும் காரியங்கள் அனைத்தும் கூடிவரும். பழைய பாக்கியான காரியங்களும் எதிர்பாராமல் பூர்த்தியாகும். இதனால் மனத் திற்கும், செயலுக்கும் உள்ள தொடர்பைக் காண்கிறோம்.

அன்னையிடம் பிரார்த்தனை செய்யும் பொழுது காரியம் பூர்த்தியாவது அன்னையை மட்டும் பொறுத்தது என்ற சமயங்களுண்டு. மற்ற சந்தர்ப்பங்களையும் பொறுத்தது என்ற நிலையும் உண்டு. மனத்தைப் பொறுத்தது என்பதும் உண்டு. இவற்றுள் மனநிலையைப் பற்றிய கட்டுரை இது.

பிராமிசரி நோட் மீது பணம் கொடுத்தால் அதை வாங்கிக் கொடுக்க கோர்ட்டிற்கு உரிமை யுண்டு என்பது உண்மையானாலும், எழுதிய 3 வருஷத்திற்குள் கோர்ட்டிற்குப் போக வேண்டும். சட்டம் சாதகமாக இருந்தாலும், அதற்குரிய (rule) முறையையும் பொறுத்தது பலன் என்று தெரிகிறது. இதுவரை தீராது, உலகில் இதற் கெல்லாம் தீர்வு இல்லை என்ற பிரச்னை களுக்கு அன்னை தீர்வு அளிக்கின்றார். என் றாலும், அதைப்பெற மற்ற சந்தர்ப்பங்களும், நம் மனநிலையும், சிறு சிறு காரியங்களில் நம் மனப் போக்கும் பலனைப் பெற ஒத்துழைக்க வேண்டும். இதுவே முழு உண்மை என்றாலும், பக்தர்களுக்கு மாறான அனுபவமும் உண்டு. எனக்கு இனி வழியேயில்லை என முடிவு செய்து என் பிரச்னையை மறந்து 5 வருஷமான பிறகு அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டு, ஆசிரமம் சென்று திரும்பும்போது, புதிய நிலை உருவாகி, என் தீராத பிரச்னை தானே தீர்ந்ததை என்னால் நம்பவே முடியவில்லை. நானே எதுவும் செய்யவில்லையே என்பவரும் உண்டு. இனி வழியேயில்லை என்று நாம் கைவிட்ட விஷயங்களை நாம் மறந்தது போல், உலகமும் மறந்திருக்கும். அன்னையை அழைத்தவுடன், அவர் மின்னல் போல் செயல் படும்பொழுது நம் மனம் குறுக்கே நிற்காது, எந்தச் சந்தர்ப்பமும் நம்மை நினைக்காததால் அன்னைக்குத் தடையாக இருக்காது. அதனால் விஷயம் கூடிவரும். நாம் நாடிச் செல்லும் விஷயங்களை மனம் இதுபோல் மறந்திருக்காது. மற்ற சந்தர்ப்பங்கள் தடை ஏற்படுத்த முனைந் திருக்கும். அதனால்தான் அன்னையின் சக் திக்குத் தடை ஏற்படுகிறது. மனத்தால் ஏற்படும் தடையைப் பற்றிய கட்டுரை இது. மனம் நெகிழ்ந்த நிலையில் பக்தர்கள் இருப்பதுண்டு. அப்படியிருப்பதை ஒருவர் வர்ணித்திருப் பதைக் கீழே எழுதுகிறேன்.

"மனம் மகிழ்வோடு இருக்கிறது. அவ்வப் போது அன்னை மணம் கமழ்கிறது. மலர் பலவகைகளும் நிறையக் கிடைக்கின்றன. எதிரே வருபவர்கள் இனிமையாகவும், நல்ல வார்த்தை களையும் கூறுகின்றனர். அதிகாரிகளும் மேல் நிலையில் உள்ளவர்களும் அன்பைச் சொரி கின்றனர். முன் எப்பொழுதும் காணா அமைதி பரிமளிக்கின்றது. அன்னையை அழைத்துக் கொண்டேயிருக்கின்றேன். தியானத்தைக் காட் டிலும் அழைப்பு இனிமையாகவும், இயல் பாகவும் உள்ளது. அன்னை அவர்கள் Priority Basis இல் என் குறைகளைத் தீர்த்து வருகிறார்".

நம் பிரார்த்தனை பூர்த்தியாக நம் மனத்தின் அபிப்பிராயங்கள் தடையாக இருப்பதுண்டு.

கணவனை அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்கும் பழக்கமில்லாத மனைவி அவ ராகக் கொண்டுவரும் நகை, புடைவைகளை மட்டும் பெற்றுக் கொள்ளும் பழக்கம் உடையவர். ஆசையில்லை என்பதில்லை. ஆனால் கேட்டுப் பெறும் குணம் இல்லாதவர். வீட்டில் வசதி சற்று அதிகமாகும் நிலை. கைவளையல் ஒடிந்து போனதை ரிப்பேர் செய்ய வேண்டும். பழைய புடைவைகள் எடுத்து நாளானதால், புதுத் துணி எடுக்க வேண்டும். பெண்ணின் தாயார், மற்ற உறவினர்கள் வரும் பொழுது அவர் உள்ள நிலையைக் கண்டு, ஏன் இப்படி யிருக்கவேண்டும், உனக்கு வேண்டியதைக் கேட்டு வாங்கிக் கொள்வதில் என்ன தவறு என்று சொல்லும்பொழுது அவர்கள் சொல்வது சரி என அவருக்குப் பட்டது. ஆனால் நீண்ட நாளைய நல்ல குணத்தை விட மனமில்லை. தேவையைப் பூர்த்திசெய்யும் ஆசையும் அடங்க வில்லை. மனம் போராடியது. கேட்டால், கணவர் உடனே வாங்கிக் கொடுத்துவிடுவார். பிரசினையேயில்லை. கேட்பது தவறில்லை. அன்னை சட்டப்படி தேவையைக் கேட்பது சரி. நானும் கேட்கவில்லை. கணவர் மனத்தில் இத் தேவைகள் படவில்லை. மனத்தோடு போராடிய வருக்கு ஒரு கேள்வி எழுந்தது. பிரச்னை என்ன? புடைவை, வளையலா? அல்லது கேட்க லாமா, கூடாதா என்பதா? இதற்கு அன்னை முறை என்ன? இந் நிலையில் கேட்பது சரி என்பது அன்னை முறையானாலும், அதைவிட உயர்ந்த ஒருமுறையையும் அன்னை சொல்லி யிருக்கிறார் அல்லவா? நான் கேட்காமலிருந் தாலும், மனம் ஆசைப்படுகிறதல்லவா? ஏன் அந்த ஆசையை அழிக்க முற்படக் கூடாது என்று அவருக்குத் தோன்றியது. அதை மேற் கொண்டார். அந்தப் போராட்டம் மனத்தில் பல ஆயிரம் தவிப்புகளை ஒன்றரை நாளாக ஏற்படுத்தியதை உணர்ந்தவரே எழுதினால் அது உலகப் பெருஇலக்கியத்தில் இடம்பெறும். முடிவாக ஆசை அடங்கியது. அன்று மாலை கணவர் 3 புடைவைகளை எடுத்து வந்தார். உன் வளையல்களைக் கொடு, மாற்றிக் கொண்டு வருகிறேன் என்றார். மனம் அடங்கியவுடன், பிரச்னை தீர்ந்தது அவருக்குப் புதியதில்லை என்றாலும், வியப்பைக் கொடுத்தது.

புதுவீடு குடிபோனபொழுது வீட்டுக்காரர் ஓர் அலமாரி செய்து தருவதாகச் சொன்னார். அது வரும்வரை எல்லாப்பொருள்களையும் தரையில் வைத்திருந்தார் பக்தர். 5 மாத வாடகையை அட்வான்ஸாகப் பெற்றுக் கொண்டவர் மாதங் கள் கடந்தும் அலமாரி செய்து தரவில்லை. அடுத்தவர் ஒருவரிடம் தான் அலமாரி செய்யப் போவதில்லை என்றும் அறிவித்ததைக் கேட்டுக் குடியிருக்கும் பக்தருக்கு எரிச்சல் வந்தது. சரி, அலமாரி வந்தால்தான், இந்த மாதம் வாடகை கொடுப்பது என்று முடிவு செய்தார். தொடர்ந்து செய்திகள் வந்தபடி இருந்தன. கொஞ்சம் சாமான்கள்தானே, தரையில் இருந் தால் என்ன என்று ஒரு செய்தி. இந்த மாதம் வேறு செலவு இருக்கிறது என்று மற்றொரு செய்தி. அலமாரி கொடுப்பது எங்கள் இஷ்டம், நிர்ப்பந்தமில்லை என்று மற்றொரு செய்தி. பக்தர் சரி செய்திகள் வரட்டும், வாடகை கொடுத்தால்தானே, என்ன செய்வார் பார்க்க லாம் என்று தீவிரமாக முடிவு செய்தார். அதன்பின் யோசனை பிறந்தது. வாடகையை நிறுத்திக் காரியத்தைச் சாதித்தால்,எனக்குப் பிடிப்பில் நம்பிக்கையிருக்கிறது. அன்னைமீது நம்பிக்கையில்லை என்றாகிறதல்லவா என்ற நினைவு வந்தது. தேதி வந்தவுடன் வாடகை யைக் கொடுக்க முடிவு செய்தார். நம்பிக் கையை அன்னைமீது வைத்தார். வாடகையைக் கொடுத்தார். அடுத்த நாள் அலமாரி வந்திறங் கியபோது அவருக்கு ஏற்பட்ட ஆச்சரியம் பெரியது.

பாத்ரூமில் தண்ணீர் தேங்கியுள்ளது என்று வீட்டுக்காரரிடம் சொன்னால் 'சில நாள் பொறுத்துக் கொள்ளுங்கள். அதுவரை எதிர் வீட்டில் போய் குளித்துக் கொள்ளுங்கள். பிறகு ரிப்பேர் செய்கிறேன்' என்ற பதில் முனி வருக்கும் கோபத்தை ஏற்படுத்தும். வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு, கோபம் வரக் கூடாது என்று பிரார்த்தனை செய்துவிட்டு ஆபீஸுக்குப் போய் திரும்பி வந்தால் ஆட்கள் பாத்ரூம் வேலையைச் செய்து கொண்டிருந் தனர்.

அன்னைக்குள்ள முறைகளைத் தவறாமல் பின்பற்றினால் பிரார்த்தனை பலிப்பதில் தாமதமிருக்காது. அன்னையின் சக்தி பலிப்ப தற்கு நம் மனமும் அவர்கள் முறையை ஏற்றுக் கொண்டு ஒத்துழைக்க வேண்டும். ❖

விக்கிரமன்

20. மனக்கோயில்

வட்ட முழுமதியின் பின்னணியில், தஞ்சைக் கோயிலின் தட்சிண மேரு என்றழைக்கப்படும் விமானம் கம்பீரமாகக் காட்சியளித்தது.

கோயிலின் திருச்சுற்றில், ஏராளமான மக்கள் அமர்ந்திருந்தனர். இரண்டு நாள்களுக்கு முன்பு இராசேந்திர சோழருக்குத் தில்லைச் சிற்றம்பலத்தில் முடிசூட்டு விழா கோலாகலமாக நடைபெற்றது. சோழ நாட்டின் குறுநில மன்னர்கள் அனைவரும் அங்கே குழுமியிருந்தனர். இராசராச சோழ தேவர் தன் பட்டத்தரசியுடன் வருகை புரிந்து முடிசூட்டு விழாவைச் சிறப்பாக நடத்தி வைத்தார்.

அந்த வைபவம் தஞ்சையிலும் மக்களால் கொண்டாடப்பட்டது. தங்கள் வீட்டில் நடைபெற்ற சிறப்பு விழா போல் மக்கள் கொண்டாடினர். ஒவ்வொரு நாளும் தஞ்சைப் பெரிய கோயிலின் விசாலமான திருச்சுற்றில் இசையும், நடனமும், பாட்டும், கூத்தும் இரவு நடுச் சாமம்வரை நீடித்து நடந்தது.

தஞ்சைக்கு மிகத் தொலைவில் பட்டி தொட்டிகளிலிருந்து மக்கள் வந்து குழுமியிருந்தனர். நிகழ்ச்சிகளைக் காண தஞ்சையிலுள்ள தங்கள் உறவினர் இல்லங்களில் தங்கியிருந்தனர்.

அரச குடும்பத்து மகளிர், திருச்சுற்றிலுமுள்ள மாடங்களில் அமர்ந்து, கூத்து நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர்.

உயரமான மேடை மீது இராசேந்திரன் அமர்ந்திருந்தார். ராஜராஜ விஜயம் நாடகத்தைக் காண நாள்தோறும் அவர் வந்தார். ஆனால் அவரிடம் உற்சாகமில்லை.

விவரிக்க முடியாத கவலை அவர் உள்ளத்தில் நிறைந்திருந்தது என்பது அவர் அவ்வப்போது விழிகளை மூடி ஏதோ சிந்தித்தவாறிருப்பதிலிருந்து தெரிந்தது.

மாடங்களில் அமர்ந்திருக்கும் இளவரசிகள் நாடகத்தைப் பார்க்காமல் தங்களுக்குள் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

தில்லைச் சிற்றம்பலத்தில் நடைபெற்ற மகுடாபிஷேக விழாவைப் பற்றியும் அவர்கள் பேசினார்கள். தான் ஜீவியவந்தராக இருக்கும்போதே இராசராச சோழர் தன் புதல்வனுக்கு முடிசூட்டியதன் காரணத்தைப் பற்றியும் ஒவ்வொருவர் தங்களுக்குத் தெரிந்ததைத் தெரிவித்தனர். சக்கரவர்த்திகளின் புதுமையான செயலைக் குறித்து வியப்பையும் தெரிவித்தனர். அவர்களிடையே கருத்து வேற்றுமை நிலவினாலும், ஒன்றில் மட்டும் அவர்கள் ஒருமனதாகக் குதூகலத்துடன் ஒப்புக் கொண்டனர்.

இராசேந்திர சோழ தேவர் மிகச் சிறப்பாக ஆட்சி புரிவார் என்று மகிழ்ச்சியுடன் பேசினார்கள்.

போர்க் களத்தில் அவர் பெற்ற வெற்றியையும் வீர தீரங்களைப் பற்றியும் புகழ்ந்தவர்கள், அவரது கம்பீரத் தோற்றத்தைப் புகழ்ந்தார்கள்.

"எல்லாம் சரிதான், அவர் வீரம்மாளை-எளிய குடும்பத்துப் பெண்ணை மணந்து கொண்டதைத்தான் நம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை" என்று ஓர் இளவரசி தன் வேதனையைத் தெரிவித்தாள். இளவரசியின் இடத்தினின்று, அரசியின் இடத்துக்குப் பதவி உயர்ந்தவர்கள் அவர்கள்.

"வீரம்மாள் என்று சொல்லாதீர்கள், வீரமாதேவி என்று சொல்லுங்கள்" என்று, அரசியருள் ஒருத்தி திருத்தினாள்.


"நான் ஏற்க மாட்டேன். அவளுக்கு அரசி என்ற பதவி அளிப்பதாக நம் அரசர் முடிவு செய்திருந்தால்,

முடி சூட்டும் விழாவிற்கு அவளை அழைத்திருப்பார்".

கங்காபுரிக் காவலன்

"எங்கே அழைத்து விடுவாரோ என்று நான் மிகவும் பயந்தேன் தேவி" என்று அவர்கள் பேச்சில் கலந்து கொண்டாள் செல்வாக்கு மிகுந்த பணிப்பெண் ஒருத்தி.

தொலைவில், நாடகத்தைக் கண்டு களித்தவாறிருந்த இராசேந்திர சோழர் அருகே வீற்றிருந்த பஞ்சவன்மாதேவியைச் சுட்டிக் காட்டிய ஒருத்தி,"எனக்குக்கூட மனத்தில் அச்சம்தான். அந்த இளம் அழகியைத் தன்னருகே அரியணையில் அமர வைத்து விடப் போகிறாரே நம் அரசர் என்று முதல் நாள் வரையில் பயந்தேன். ஆனால், பட்டத்தரசிக்கு மஞ்சள் நீராட்டி, வேத கோஷம் முழங்க, தேவாரப் பண் ஒலிக்க, வீணை ஒலிக்க, குழல் ஒலிக்க பஞ்சவன்மாதேவியை யானை மீதேற்றி அழைத்து வரும்போது தான் உறுதியாயிற்று" என்று கூறிப் பெருமூச்சு விட்டாள்.



"உனக்கு இருந்த அச்சம் எனக்கு இல்லை. நான் என்றோ முடிவு செய்து விட்டேன், பஞ்சவன்மாதேவிதான் பட்டத்தரசி என்று. நாற்பது வயதைத் தாண்டிக் கொண்டிருக்கும் அவளுக்கு வரப்போகும் அதிர்ஷ்டத்தைப் பற்றி நாள்தோறும் அவளிடம் புகழ்ந்து கொண்டிருந்தேன். அரசிக்குரிய கம்பீரம், நடை, உடை பாவனையைக் கற்பித்தேன்" என்று ஒருத்தி பெருமிதத்துடன் சொன்னாள்.

"உனக்கு எப்படித் தெரியும்?"

"தெரியும். எப்படி என்று கேட்காதே. கர்வம் பிடித்த அந்த இளம் அழகியை முடிசூட்டு விழாச் சூழ்நிலையிலிருந்தே ஒட்டி விடுவதற்குத் திட்டமிட்டவளே நான்தான்."

இவ்வாறு கூறவும் எல்லோரும் அவள் முகத்தையே பார்க்கத் தொடங்கினர்.

"அவள் எங்கே போய்விட்டாள்? இந்த நாட்டைவிட்டே போய் விட்டாளாமே?" என்று ஆவலுடன் கேட்டாள் ஒருத்தி.

மிக மெல்லிய குரலில் ஒருத்தி கேட்டாள் : "பாண்டிய நாட்டிற்குச் சென்றிருப்பதாக ஒற்றர்கள் மூலம் செய்தி. அவ்வாறு சென்றிருந்தால் ஆபத்து உண்டு. அங்கே சென்று கலகம் செய்வாள். அங்கே சுந்தரன் இருக்கிறானே மறந்துவிட்டாயா?" என்று கூறிக் கண் சிமிட்டினாள் ஒருத்தி.

"உச்... பட்டத்தரசியின் செவிகளில் வீழ்ந்து விடப் போகிறது. சுந்தரன் திருந்தி விட்டான். பாண்டிய மண்டலத்துக்கே அர சன் என்று அவனை மதுரையில் அமர்த்தி யிருக்கிறார்கள்."

"இருக்கட்டுமே, வீரமாதேவி சாகசம் மிக்கவள். தந்திரம் மிகுந்தவள். மாய மந் திரம் தெரிந்தவள். தில்லைச் சிற்றம் பலத்தில், இளவரசரைச் சந்தித்து மயக் கித் திருமணம் செய்து கொண்டதை மறந்து விட்டாயா? நம் அழகு குறைந்து வருகிறது என்பதைப் புரிந்து கொண்டு அப்போது இளவரசராயிருந்தவர், இளமையும் அழகும் நிறைந்த வீரம்மாளை விரும்பியதில் வியப் பில்லை. அதற்குமேல் கலை உணர்வு மிக்க இளவரசர், வீரம்மாளிடம் நிறைந்திருந்த கலைப்புலமையை உணர்ந்து கொண்டா நாட்டை விட்டு வீரம்மாளை அனுப்ப ஒ போதும் அவர் ஒப்புக் கொள்ள மாட்டா என்று பேசி முடித்தாள்.

ராஜராஜ விஜயம் நாட்டிய நாடகம் மு யும் தருணத்தை நெருங்கி விட்டதும் தூக்க கலக்கத்துடன் மாளிகையை நோக்க சென்றனர். வீரமாதேவி எங்கு சென்றிரு கிறாள் என்று ஒருவராலும் அறிந் கொள்ள முடியவில்லை.

தங்களுக்குப் போட்டியாக வந்த வீரம தேவி எங்கோ சென்றுவிட்டாள் என்பது அவர்களுக்கு நிம்மதி.



வீரமாதேவி எங்கே என்று பேரரசர் இராசேந்திர சோழரைக் கேட்பதற்கு ஒரு வருக்கும் துணிவு இல்லை.

வீரமாதேவி, கானகத்தின் நடுவே இருந்த சின்னஞ்சிறு கிராமத்து இயற்கைச் சூழலில் நடனம், இசை என்று பொழுதை இன்பமாகக் கழித்தாள்.

கதிரவன் உதிப்பதற்கு முன்பே எழுந்து விடுவாள். புளளினங்களின் சேர்ந்திசை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அந்த வனத்தின் ஒற்றையடிப் பாதைகள் அவளுக்குப் பழக்கப்பட்டு விட்டன.

•

உயர்ந்த மரங்களின் இடைவெளி வழியே கதிரவன் எட்டிப் பார்க்கும்போது குடிலொன்றின் வெளியே 'கிளிங் கிளிங்' என்று சிற்றுளி எழுப்பும் ஓசை கேட்டது.

வீரமாதேவி அங்கு சென்றவுடன் அந்த இளைஞன் பரபரப்புடன் எழுந்து முகமன் கூறி வரவேற்று அங்கு இருந்த பாறை ஒன்றில் அமருமாறு கேட்டுக் கொண்டான்.

சிற்பங்கள் சிலவற்றை உருவாக்கும் பணியை அவனிடம் அளித்திருக்கிறார் அரசர் என்பதை வீரமாதேவி அறிந்து கொண்டாள்.

"கலைமகள், திருமகள், ஆடவல்லார் சிலைகளை உருவாக்க வேண்டும். அதற்கு முன்மாதிரியாக இங்கு நான் சிறிய அள வில் சிற்பங்களை அமைப்பதில் முனைந் திருக்கிறேன்" என்றான் இளைஞன்.

வீரமாதேவி சுற்று முற்றும் பார்த்தாள். சிறு சிறு பாறைகள் அங்குமிங்கும் கிடந் தன.

"இந்தப் பாறைகளை எப்படிக் கொண்டு வந்தீர்கள்?" என்று கேட்டாள் வீரமாதேவி.

"சிற்பத்திற்கேற்ற பாறைகள் சோழ நாட்டிலில்லை. பல இடங்களில் தேடிக் கொண்டுவரப் படாதபாடு பட்டுவிட்டோம். பாண்டிய நாட்டில் சமீபத்தில் போரொன்று நடந்தது. போரிலே சிறை பிடிக்கப்பட்ட பாண்டிய வீரர்களைப் பயன்படுத்தி இந்தச் சிறு பாறைகளைக் கொண்டு வந்தோம். உங்கள் திட்டப்படிக்கோயில் கட்டுவதென் றால் ஏராளமான பாறைகள் தேவைப்படும்" என்றான் இளம் சிற்பி.

திரும்பி வரும்போது, வீரமாதேவி மௌனமாக நடந்து வந்தாள். ஏதும் பேசா மல் மௌனமாக வீரமாதேவி வருவது பொன்னரசிக்கு வியப்பாக இருந்தது.

அவள் மௌனமாக இல்லை. அவள் மனத்தில் வருங்கால நிகழ்ச்சிகள் பல வட்டமிட்டன.

குடிலுக்கு வந்த பிறகு அவளிடம் பெரும் மாறுதலைப் பொன்னரசி கண்டாள். சில போது, வீரமாதேவி தனக்குள்ளே சிரித்துக் கொள்வாள். சில சமயம் அவள் யாரையோ பார்த்து எச்சரித்து விட்டுத் தன் புருவத்தை உயர்த்திக் கொள்வாள். யாரையோ பார்த் துப் பேசுவதுபோல் கரங்களை அசைப் பாள். கானகப் பகுதிக்கு விரைந்து சென்று சுற்றுமுற்றும் பார்ப்பாள். காலடி எடுத்து வைத்து அளப்பதுபோல் நடப்பாள்.

பொன்னரசி ஒரு நாள் வீரமாதேவி யிடமே அவளிடம் ஏற்பட்டுள்ள மாற்றத் தைப் பற்றிக் கேட்டேவிட்டாள்.

"பொன்னரசி உன்னிடம் மனம் விட்டுச் சொல்வதற்கு என்ன தயக்கம் இருக்கிறது. நான் உறுதியான முடிவு ஒன்றுக்கு வந்து விட்டேன். என்னைத் துரும்பென நினைத்த மற்ற இளவரசியரிடையே தேக்குத் தூண் என நிமிர்ந்து நிற்கப் போகிறேன். அரிய செயல் ஒன்று செய்யப் போவதாக முன்பே நான் சபதம் செய்திருப்பது உனக்கு நினை விருக்கலாம். அந்தச் சபதத்தை எவ்வாறு நிறைவேற்றப் போகிறேன் என்று நீ நினைக்கலாம். மற்றவர்கள் நினைக்கக்கூட மாட்டார்கள். தன் ஆசையை நிறைவேற்றிக் கொள்ள இளவரசர் மணந்த ஓர் எளிய குடிமகள் என்ற எண்ணத்தில் என் பேச்சை நினைவிலும் வைத்திருக்க மாட்டார்கள். என் இதயத்தில் நிலைத்துவிட்ட என் இள வரசர், இந்த நாட்டின் சக்கரவர்த்தியாக மகுடமணிந்த பிறகு நீண்ட நெடுங்காலம் ஆட்சியை நடத்தி அவர் புகழ் அழியாது என்றும் நிலைத்து நிற்க ஏதாவது செய்ய வேண்டும் என்பதுதான் என் ஆசை" என்று சொல்லி நிறுத்தினாள்.

பொன்னரசி மிகவும் பணிவாக, "தேவி! என்மீது கோபிக்காதீர்கள். நம் இள வரசரின் கரம் பிடித்த மற்ற இளவரசிகள் புகழ் பெற்ற அரச குலத்தைச் சேர்ந்த

நான் தெரிந்துகொண்ட நம்பிக்கையான வழி



**என் மனைவி-
நிதி
மந்திரியும்
கூட!**

வங்கியில் பணிபுரியும் நான் சென்னையிலிருந்து மாற்ற லாகி கல்கத்தாவுக்குப் போக வேண் டியிருந்தது. மகளின் படிப்புக்காக மனைவி மட்டும் அவளுடன் சென் னையிலேயே தங்கிவிட்டாள். மாதச் செலவுக்கு 2000 ரூபாய் கண்டிப் பாய் அனுப்ப வேண்டும் என்று அவள் எனக்கு கூறியபோது எதுவுமே புரியவில்லை. சொந்த ஃப்ளாட்டில் வசிக்கும் இருவருக்கு இவ்வளவு தொகை எதற்கு என்று நான் கேட்டபோது,விலைவாசியைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது என்று கூறிவிட்டாள்.

இப்போது பெண்ணின் படிப்பு முடிந்து நாங்கள் அனைவருமே கல் கத்தாவில். இங்கும் அவள் வீட்டுச் செலவுக்குக் கேட்ட தொகை அதிகம் என்றே தோன்றியது. விவரம் கேட்ட போது முன்கூறிய அதே பதில் தான் கிடைத்தது. ''உங்களுக்கு விலை வாசிகளைப் பற்றி எதுவுமே தெரியாது''.

கல்கத்தாவிலேயே வசித்து வரும் என் தங்கை சின்னதாக ஒரு ஃப்ளாட் வாங்க வேண்டும் என்று விரும்பி னாள். அனைவரும் கலந்து ஆலோ சித்தோம். கணக்குப் போட்டுப் பார்த் ததில் கொஞ்சம் தொகை துண்டு விழுந்தது. எதுவும் உதவ முடியாத



நிலையில் இருந்ததால் நான் வாயே திறக்கவில்லை.

அன்று வீடு திரும்பும்போது என் மனைவி சொன்னாள். ''உங்கள் தங் கைக்கு 20,000 ரூபாய் வரை ஏற் பாடு செய்து தருவதாகச் சொல்லியி ருக்கிறேன்.''

அதைக் கேட்டபோது அப்படியே அதிர்ந்து போனேன். மயக்கம் போட்டு விழாத குறை.

''அது என்ன சாமான்யமான தொகையா, நினைத்தவுடன் புரட்டு வதற்கு?''

''வீட்டுச் செலவுக்கென்று உங்களி டம் அதிகப் பணம் கேட்டு, அதில் 1000 ரூபாய் ஸ்ரீராமில் சீட்டுக் கட்டி வருகிறேன். அடுத்த மாத ஏலத்தில் அதைத் தள்ளியெடுத்து உங்கள் தங் கைக்குக் கொடுத்து உதவலாம் என்று திட்டம். அதனால்தான் அப்படி வாக் களித்தேன்''.

என் காதுகளை என்னால் நம்ப முடியவில்லை. நினைத்தவுடன் ஆயிரக்கணக்கில் பணம் புரட்ட இப் படியொரு வழியா? மனைவி சொல் லித்தான் தெரிந்து கொண்டேன்!

எம். ராஜாமணி,
கல்கத்தா - 700 027.

வர்கள். அவர்களால் முடியாததை நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"செய்யப் போகிறேன். பொறாமை பிடித்த அவர்கள் கனவிலும் நினைக்காத செயலொன்றைச் செய்யப் போகிறேன். அடர்ந்த இந்தக் காட்டின் நடுவே நான் புதுமை புரியப் போகிறேன்."

"தேவி! என்ன சொல்கிறீர்கள்? உங்கள் திட்டம் எனக்குப் புரியவில்லை. இங்கே உள்ள கலையரசி காட்டில் ஒரு சிறு ராஜாங்கமே நடத்துகிறார்கள். உங்களுக்குப் பிடித்தமான இசையும், கூத்தும் இங்கே நடைபெறுகின்றன. இளவரசருக்கு மிகவும் வேண்டியவர்கள்போல் தோன்றுகிற அவர்கள் இட்டது சட்டம் என்று புரிகிறது. அவர்களுக்குப் போட்டியாக நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?"

வீரமாதேவி மெல்ல நகைத்தாள். "பொன்னரசி! உனக்குப் பழைய கதைகள் தெரியாது. நீ சொல்வதுபோல் சிறிய அரசாங்கமே நடத்தும் கலையரசியின் கடந்தகால வாழ்க்கைக் கதையைப் பிறகு சொல்கிறேன். எனக்கு அத்தை முறையான அவர்களுக்குப் போட்டியாக நான் ஏதும் செய்யக் கனவிலும் நினைக்க மாட்டேன். அவர்களைப் பார்த்த பிறகுதான் எனக்கு நம்பிக்கை பிறந்தது. அவர்களுடைய ஆசியுடனும் உதவியுடனும் நான் நினைக்கும் கலைக் கூடத்தை இந்தக் கானகத்தில் நிர்மாணிப்பேன்" என்றாள்.

"கலைக் கூடமா? காலையில் நீங்கள் சென்று பார்த்தீர்களே, சிறு சிறு சிற்பங்களைச் செதுக்கிக் கொண்டிருந்தார்களே, அந்தக் கலைக் கூடத்தை தானே சொல்கிறீர்கள்?"

"இல்லை; இல்லை. என் திட்டமே வேறு. பெரிய கோயில் ஒன்றை நிர்மாணிக்கப் போகிறேன். அங்கே கலைதேவி களிநடனம் புரிவாள். இதோ பார்... என் உள்ளத்திலுள்ளதை வரிவடிவமாக்கி இருக்கிறேன்" என்று கூறி அவளை அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றாள். அங்கே சுருட்டி வைக்கப்பட்டிருந்த துணிச் சுருள் ஒன்றை விரித்தாள்.

வெள்ளைத் துணியில் செங்கோடுகளால் வரையப்பட்டிருந்த அந்தச் சித்திரத்தைப் பார்த்து விழிகள் விரித்தாள் பொன்னரசி.

வீரமாதேவி எப்போது இந்தச் சித்திரத்தை வரைந்தாள்? அங்கே செங் குழம்புகள் உள்ள கிண்ணங்கள் இருந்தன.

நாட்டியக் கலையில் திறமை வாய்ந்த இவளுக்குச் சித்திரம் வரைவதில் ஆர்வம் எப்போது ஏற்பட்டது? ஒருவேளை சிறு வயதிலேயே சித்திரக் கலையில் ஆர்வம் தோன்றியிருக்கலாம்.

"பொன்னரசி! பார்த்தாயா? இதுதான் என் இலட்சியக் கலைக் கோயில்."

"இந்தச் சித்திரத்தைப் பார்த்தால் வேறு ஒரு கோயிலின் நினைவு வருகிறது. நெஞ்சில் இருக்கிறது; ஆனால் சொல்ல வரவில்லை."

"அப்படியென்றால், எனக்கு வெற்றிதான். ஏதோ கிறுக்கியிருக்கிறீர்கள் செங்கோடுகள் என்று சொல்லாமல் அப்படிச் சொன்னது எனக்கு வெற்றிதான். இந்தத் துணியில் வரையப்பட்டிருப்பது தஞ்சைப் பெரிய கோயிலைப் போன்ற ஒரு விமானத்தின் தோற்றம். ஆனால் அந்தக் கோயிலைவிடப் பெரிய கோயில் ஒன்றை இங்கே கட்ட வேண்டும். அந்தக் கோயிலில், தஞ்சையில் உள்ள சித்திரக் கூடத்தைவிட மிகப் பெரிய ஓவியக்கூடம் அமைக்க வேண்டும். பல அற்புதச் சிற்பங்களை அங்கே நிலைபெறச் செய்ய வேண்டும். தந்தையை விட மகன் படைத்த மகத்தான பெரிய கோயில் என்ற பெருமை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு நின்று நிலவ வேண்டும்" என்றாள்.

இதைக் கூறும்போது, வீரமாதேவியின் விழிகள் பளபளத்தன. வார்த்தைகளிலே இலட்சிய வெறி ஒலித்தன.

தன் இதயம் கவர்ந்த இளவரசருக்கு அண்மையில் தஞ்சையில் முடிசூட்டு விழா நடைபெற்றச் செய்தி வீரமாதேவிக்குத் தெரிந்திருக்கவில்லை. அவளும் சோழ நாட்டு அரசியருள் ஒருத்தி!

அந்தக் கானகம் மறைந்து அங்கே மிகப் பெரிய கோயிலும், விமானமும் உருவாகி நிற்பதுபோல் அவளுக்குத் தோன்றியது.

(தொடரும்)

ஆன்மிகச் செல்வர் பாலபாரி பாலசுப்ரமணியம்

— ஜனகன்



பி. பாலசுப்பிரமணியம்



பா.பாரி

வேத மந்திர ஒலி, ஸ்தோத்திரப் பாடல்களின் சங்கீத சப்தம், பக்திப் பாடல்கள் இவற்றைக் கேட்பதன் மூலம் மனத்திற்குள் அதிர்வுகள் நிகழ்வதாகக் கருதுகிறார் ஒருவர். எப்படி இசைப் பாடல்களினால் பயிர்கள் செழித்து வளரும் என்றும், பசுக்கள் நிறையப் பால் தரும் என்றும் நம்பப்படுகிறதோ, அதேபோல் தெய்வப் பாடல்களைச் செவி வழி நுகரும்போது மனித மனம் வளம் பெறுகிறது; சீலம் அடைகிறது எனக் கருதுகிறார் ஒருவர். ஆன்மிகத்தின் மீதும், நமது தொன்மையான பக்தி இலக்கியத்தின் மீதும் அளவிடற்கரிய ஆர்வமும் ஈடு இணையற்ற ஈடுபாடும் உள்ள அந்தப் பிரமுகர்தான் பால பாரி ரியல் எஸ்டேட் நடத்தும் திருவாளர் பி.பாலசுப்ரமணியம் அவர்கள்.

இவர் போட்டிருக்கும் 'லே அவுட்'டில் வேத பாடசாலைக்காக நான்கு கிரௌண்டும், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி ஆகியவற்றைக் கற்பிப்பதற்காக நான்கு கிரௌண்டும் ஒதுக்கியிருக்கிறார். இவருடைய 'லே அவுட்'டில் குடியமர்பவர்கள் தேமதுரத் தெய்வத் தமிழோசையை எப்பொழுதும் கேட்டு ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது இவருடைய ஆசை.

இவர் மனை விற்பதுடன் கூட, வீடு கட்டித்தரும் கூடுதல் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறார். அவரவர் வசதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப 'ஏ.பி. சி.டி.' என நான்கு வகை (டைப்) வீடுகள் கட்டித் தருகிறார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து பன்னிரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் வத்திராயிருப்பு கிராமத்தில் பிறந்த பாலசுப்ரமணியம் மதுரையில் கல்லூரிக் கல்வி பெற்றவர். பின்னர் ராணுவத்தில் 'சிக்னல்' பிரிவில் சேர்ந்து நாட்டுக்காகவும் சிறிது காலம் சேவை செய்தார். தேசியப் பாதுகாப்பு அகாடமியில் 'ரேடியோ மெக்கானிசம்' கற்றுத்தந்த அனுபவமும் இவருக்கு உண்டு. பின்பு மீண்டும் மதுரை வந்த இவர், "பூங்கா பாலு" என அனைவராலும் புகழப்பட்டவர். இளைஞராக இருந்தபோது, பொதுநல சேவையில் நாட்டம் இருந்தது. ஏழை எளியவர்களுக்குத் தொண்டு செய்ததால், அந்தக் காலத்தில் மதுரையில் இவர் ஒரு பிரபல இளைஞர்.

ஈரோட்டில் சில நண்பர்களுடன் கூட்டாகச் சேர்ந்து, எண்ணெய் மற்றும் எண்ணெய் வித்துக்கள் வியாபாரம் செய்தார். மிகச் செழிப்பாக நடந்து வந்த வியாபாரம், பாகஸ்தர் ஒருவரின் வித்தியாசமான அணுகுமுறையால் நஷ்டமடைந்து விட்டது.

இந்தத் திடீர்ச் சரிவு, இவர் வாழ்க்கையின் திசையை மாற்றி விட்டது. துயரக் கடலில் ஆழ்ந்திருந்த மனத்திற்குச் சாந்தி தேட, திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயிலில் போய் அமைதியுடன் உட்கார்ந்து விட்டார். நாளைய பொழுதிற்கு இறைவனே வழி சொல்லுவார் என்ற நம்பிக்கை.

அந்தச் சமயத்தில் கல் உடைத்துப் பிழைப்பு நடத்தும் ஒரு ஏழைக் கல்யாண கோஷ்டி, கோயிலுக்கு வந்து கொண்டிருந்தது. அங்கு திருமணம் செய்து கொள்ள அவர்கள் வந்திருந்தனர். திடீரென்று அந்தக் கும்பலில் 'கசமுசா' என்று கூச்சல். பரபரப்புடன் அந்தக் கூட்டம் காணப்பட்டது. திரு. பாலசுப்ரமணியம், இறுக்கமாகிப் போயிருந்த மனத்தை இலேசாக்கிக் கொள்ள, அவர்கள் இருந்த இடம் சென்று எட்டிப் பார்த்தார். எடுத்து வந்த பணத்திற்கு மேல் எதிர்பாராத விதமாகக் கூடுதல் பணம் தேவைப்பட்டதால் செய்வதறியாது தவித்தனர் அந்த ஏழைகள்.

விஷயத்தைக் கேள்விப்பட்டவுடன் பையில் இருந்த பணத்தைக் கொஞ்சம்கூடத் தயக்கம் காட்டாமல் எடுத்துக் கொடுத்தார், பாலசுப்ரமணியம். கல்யாணம் இனிது

ு.ந்தது. கல்லுடைக்கும்
ந்த ஏழை நெஞ்சங்கள்
யம் நிறைந்த நன்றியுடன்
கூப்பி வாழ்த்தின.

பலன் கருதாத இந்த நற்
ரி, பாலசுப்ரமணியத்திற்கு
றம் தந்த திருப்புமுனையாக
மைந்தது.

ஈரோட்டில் இருந்து
ன்னைக்கு வந்து ரியல்
ஸ்டேட் வியாபாரத்தைத்
ாடங்கினார்.


அன்று முதல் ஆன்மிகப்
ணியும் அறப்பணியும் இவரது
ந கண்களாயின. ஆரவாரம்,
ளம்பரம் ஏதும் இல்லாமல்
ல காரியங்கள் செய்து
நகிறார்.

நங்கநல்லூரில் உள்ள ஸ்ரீ
கவேந்திர சுவாமி பிருந்தா
னம் மற்றும் பல்வேறு
ன்மிக அமைப்புகளுக்கு இவருடைய பங்கு பணி இருக்கும். ஆனால் விளம்பரம் மட்டுமே இருக்காது.

1330 திருக்குறளையும் சிறிய வயதிலேயே மனனம் செய்து வைத்திருக்கிறார், இவர். பகவத் கீதையைக் கடந்த பதினெட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து திரும்பத் திரும்பப் படிப்பது இவருக்கு மிகவும் பிடித்தமான பொழுது போக்கு. தெய்வப் பாடல்கள் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்பது இவரது ஆசை.

தன்னுடைய பெயரின் முதல் இரண்டு எழுத்தையும் தனது மகன் பாரியின் பெயரையும் இணைத்து 'பாலபாரி' என்ற பெயரில் ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் திருவாளர் பாலசுப்ரமணியம் ஒரு ஆன்மிகவாதி.


"மாண்புடைய இல்லாள் கிடைத்திருப்பது இறைவன் எனக்களித்த வரம்" என்று பெருமையுடன் குறிப்பிடும் பாலபாரி பாலசுப்ரமணியத்திற்கு ஆறு மக்கட் செல்வங்கள். குழந்தைகள் மனம் கோணாதபடி நடந்து கொள்ளுவதால் இவர் மிக்க மகிழ்ச்சியுடன் தன் செல்வங்களைப் பற்றிப் பேசுகிறார். மனைவியோ, இவர் குறிப்பறிந்து நடந்து கொள்ளுபவர். இத்தகைய இனிய குடும்பத்தின் தலைவரான இவர், மனநிறைவோடு, ஆன்மிகப் பணி, அறப்பணி என்று மகிழ்ச்சியுடன் தனது பணிகளைச் செய்து வருகிறார். ஃ



நாரதகான சபை அரங்கில் தவத்திரு சுவாமி சுகபோதானந்தா அவர்கள் 'கீதை வழி ஆக்கம்' என்ற தலைப்பில் அருளுரை ஆற்றினார். டாக்டர் நல்லி குப்புசாமி அவர்களுக்குப் பாராட்டுப் பரிசு வழங்கினார்.

ஸ்ரீராம் குருப் கம்பெனியார்
ர்கள் புதிய தயாரிப்பான "டீப்
பிரிங்" (Deep Spring) எனும்
யகுடிநீரை (மினரல் வாட்டர்)
றிமுகப்படுத்தும் விழா சமீ
த்தில் நடைபெற்றது. ஸ்ரீராம்
நப் நிறுவன சேர்மன் திரு.
ர். தியாகராஜன் வந்தவர்
ளை வரவேற்றுப் பேசினார்.

1 லிட்டர் மற்றும் 1.2 லிட்டர்
கொள்ளளவுள்ள, சுமார் 2 லட்
ம் பாட்டில்கள் ஒவ்வொரு மாதமும் தயாரிக்கப் படுகின்றன. தொழிற்சாலை மகாபலிபுரம் செல்லும் வழியில் உத்தண்டி என்னும் இடத்தில் அமைந்துள்ளது.



நலவாழ்வு விரும்பும் மக்களுக்கு, குறிப்பாகச் சுற்றுலாப் பயணிகளுக்கென்றே தயாரிக்கப்பட்ட இந்தத் தூய குடிநீர் (PET) 'பெட்' எனப்படும் பாட்டில்களில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளது. இதை ஒரு வருடம் வரையில் உபயோகிக்கலாம்.

உடற்பயிற்சி மற்றும் வயிற்றுப் போக்கினால் ஏற்படும் நீர் இழப்பைத் தடுப்பதுடன், ஜல தோஷத் தடுப்பு மருந்தாவும் மற்றும் உடல் நோவுகளிலிருந்து நம்மை விடுவிக்கும் ஒரு சிறந்த வலி நிவாரணியாகவும் இந்தத் தாது நீர் இருக்கும் என்று பத்திரிகையாளர்களை வரவேற்ற ஸ்ரீராம் நிறுவனத் தலைவர் திரு. ஆர். தியாகராஜன் கூறினார்.

பாட்டிலைச் சுற்றிய லேபிளில் நீரின் பயன்கள் பல மொழிகளில் அச்சிடப்பட்டு இருந்தாலும், தமிழிலும் இருந்தால் சிறப்பாக இருக்கும்.

— ஆர். புவனா



நால் மனிதர்கள்

சுஜாதா ஃபிலிம்ஸ் லிட்.,நிறுவனமும்,
அமுதசுரபி வெளியீட்டாளர்கள்
ஸ்ரீராம் டிரஸ்டும் இணைந்து நடத்திய
போட்டியில் ரூ. 5,000 பரிசு பெற்ற நாவல்

பாப்ரியா

4

செக்காபட்டி –

சின்னாளப்பட்டி பேருந்து நிலையத்திற்குள் நுழைந்து வேப்பமரங்கள், புளியமரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் தனித்தனியாய் நின்று கொண்டிருந்த பனைமரங்களையும் சந்தித்துவிட்டு நேர்வழியாகத் 'தறிபாவு' போட்டு உலர்த்திக் கொண்டிருக்கும் பூ.ரெ.ரெ. தெருப் பக்கம் நுழைந்து இடது பக்கமாய் பட்டணம் பொடி கடையைப் பார்த்துவிட்டுத் திரும்பிப் பத்துப் பதினைந்து மாட மாளிகைக் கணக்காய் உயர்ந்து நிற்கும் பணக்காரர்களின் வீடுகளையும் தாண்டி மறுபடியும் 'நெசவாளர் கூட்டுறவு நாணயச்சங்கம்' கடையைத் தாண்டி கடை பரப்பி வைத்திருக்கும் காய்கறிகள், தேய்காய், கொடைரோடு திராட்சை என்று மொத்தமாய் 'சந்தை' என்று சொல்லுமிடத்தையும் கடந்து செக்காரர் பட்டியையும் ராயல் சினிமா தியேட்டர் ரோட்டையும் ஊருக்குள் துண்டுபோடும் கால்வாயின் வழிமேலே பத்தடிக்கு நீளப்போக்கில் இருந்த பாலத்தையும் மீறி நடந்து போனால் 'செக்காரர் பட்டி'க்கு வழியுண்டு.

இந்த வழிமட்டுமில்லாமல் இன்னொரு வழியும் உண்டு. பேருந்து நிலையத்திலிருந்து வலப் பக்கமாகவே இருக்கும் கோட்டை மைதானம் பக்கமாய் குறுகிய சந்தில் போனாலே போதும். 'வெங்கடேஸ்வரா ரைஸ்மில்'லைக் கடந்து இடப் பக்கமாகத் திரும்பினால் செக்காரர்பட்டியின் எல்லை மிகவும் சமீபித்து வீடும்.

பெண் கட்டியதோடு சரி, இந்தச் செக்காபட்டிக்கும் இவருக்கும் இருந்த தொடர்பு. உள்ளூரிலேயே ஆள் இருந்தாலும், அந்தப் பக்கம் வேலை என்று போவது என்னவோ மிகவும் அரிதான விஷயமென்றுதான் சொல்ல வேண்டும். ஊர் பஞ்சாயத்துத் தலைவர் ஆன பின்னால்தான் அங்கங்கே நடக்கும் நல்லது கெட்டது சம்பவங்களுக்காக ஆட்கள் வந்து கூப்பிடும்போது தவிர்க்க முடியாமல் இந்த செக்காபட்டிக்கு வந்து போவதை நினைத்துக் கொள்வதோடு சரி.

இப்போது இந்தப் பகுதிக்குக் காலெடுத்து வைக்க வேண்டிய நிர்ப்பந்தம். விடியல் காலையில் பட்டுப்பாவை உலர்த்த வீதியில் 'முளைக் கம்பினை' அடிக்குமுன் வாசல் கதவைத் தட்டி ஒரு ஆள்.

'மிட்டாய்க்காரக் கிழவி' செத்துப் போனதாய் சாவு செய்தி சொல்லிவிட்டுப் போனதுதான் காரணம்.

"ராஜம்... கொஞ்சம் செக்காபட்டிவரை போயிட்டு வர்றேன். முடிஞ்சா நீயே பட்டுப்பாவு உலர்த்தி முறுக்குசிட்டம் போட்டுவை. அங்கே எப்படி ஏதுன்னு நிஸ்கரமா சொல்ல முடியாது. ஏன்னா, ஆதரவு இல்லாத பெரிய ஜீவன். ஒருவேளை 'ஜாதிக்கார சங்கத்திலிருந்து'



ாவை எடுக்க தீர்மானம் செஞ்சி வச்சாங்களா ான் கடைசி வரை மயானத்திலே இருந்து ானே அவனும். உனக்குத் தெரியாம இல்லே, இதுமாதிரி விஷயமெல்லாம் புதுசா ன்ன?"

ராஜத்தோட பதிலைக்கூட எதிர்பார்க்காமல் செக்காபட்டிக்குள் அவர் நுழைந்தபோது நறிப்பிட்ட 'இராமர் கோவில்' சந்துக்குள் மைந்து திரும்பியபோது, அந்தச் சின்னக் நடிசையின் முன் அதன் சுற்றுப்புற வாசிகள் கசமுசா'வென்று பேசிக்கொண்டும் சோகத் தின் சாயலை முகங்களில் வாங்கிக் கொண்டும் இருந்ததைப் பார்க்க முடிந்தது.

பெண்கள் பலரும் அந்த நேரத்தில் பட்டுப்பாவை' உலர்த்தும் வேலையிலிருந்து பாசலுக்குச் சாணநீர் தெளித்துக் கோலம் போடும் வரை இதர அன்றாட விஷயங்களை றுத்திவிட்டு, குடிசைக்குள் சிலரும் வெளியே லருமாக நின்று கொண்டிருந்தனர்.

"என்னாங்க தலைவரே... கிழவியை அனாதைங்கற பட்டத்தோட இதுநாள் வரைக்கும் நாம கண்டுக்காம விட்டதோட சரி. இப்போவாச்சும் கடைசியா நல்ல மரியாதை யாடு ஜாதிக்காரங்க அடக்கம் பண்ணும் ஏற்பாடு செய்யுங்க. உங்களோட முடிவுக்காகத் நான் காத்துகிட்டு இருக்கோம்".

"சரிப்பா, ஜாதிக்காரங்க பணத்துலே இருந்து நூறு ரூபா எடுத்துத் தர்றேன், வேண்டிய காரியங்களைக் கவனிங்க. சீக்கிரமா காரியத்தை முடிச்சிட்டா, மத்தவங்க பொழுப்புக்குத் தொந்தரவு இல்லாமே இருக்கும்".

"சரிதான் தலைவரே! எல்லா ஜனங்களும் இதுக்குச் சம்மதம்னு நேத்து ராத்திரியிலே பிருந்து பேசிக்கிட்டிருந்தாங்க. இந்தப் பகுதியிலே இந்தக் கிழவிகிட்டே கைநீட்டி மிட்டாயும் உதிரி திராட்சை, சீனி மிட்டாய்ன்னு வாங்காத கைங்க இங்கு ரொம்ப கொறச்சல் தானே. எல்லாமே பரிதாபப்பட்டுப் பேசறாங்க தலைவரே!"

கூட்டத்தில் ஒரு நடுத்தர மனிதர் சொல்லும்போது தன்னையுமறியாமல் தலையை ஆட்டிவிட்டுக் 'கையில் வரும் வழியில் வாங்கி வந்த சிறிய மாலையைக் குடிசைக்குள் போய் கிழவியின் உடலின் மீது போட்டுவிட்டு வெளியே வந்து குடிசைக்கு அந்தப் புறமாய் போடப் பட்டிருந்த ஒரு பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டு தலைக்கு மேல் கிளைகள் விரித் திருந்த முருங்கை மரத்தின் பூக்கொத்துகளை அண்ணாந்து பார்த்துவிட்டு அப்போதுதான் சூடாகப் புறப்பட்டு மண்ணைத் தொட பூக்கொத்துகளில் ஊடுருவி வந்த சூர்ய கிரணங்களின் உஷ்ணத்தைத் தாங்க முடியாது தலையைக் கீழே போய்ப் பின் செக்காலைப் பக்கம் பார்வையைத் திருப்பும்போது, பழைய நினைவுகள் அவரை அவரது சின்ன வயசுக் காலத்தை நினைவு படுத்திவிட்டது.

பெருமூச்சுடன் ஒருமுறை குடிசைக்குள் தன் பார்வையைச் செலுத்தி நிலைக்கு வந்தபோது, கூட்டத்தில் இருந்த ஒருவர் எல்லோரையும் குடிசையின் முன்னாலிருந்து விலக்கிக் கொண்டிருந்தார்.

"ஆம்பளைங்க எல்லாம் கொஞ்சம் அந்தப் புறம் நகந்தா... தண்ணி குளிப்பாட்டலாம். எங்கே பொம்பளைங்க நாலஞ்சு பேரு சீலைங்களை பெஞ்சியைச் சுத்திப் பிடியுங்க" என்று சொல்லிவிட்டு இரண்டு மூன்று பெரிய மனுஷிகள் சிவப்புச் சேலையைப் 'படுதா' மாதிரி பெஞ்சியைச் சுற்றிலும் கையில் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார்கள்.

ராஜப்பாவின் கண்களில் கண்ணீர் துளிர்த்து அவரையும் அறியாமல் வழிந்து கொண் டிருந்தது. ஒருமுறை இந்தக் கிழவியிடம் தன் நண்பன் கற்றுக் கொண்ட அனுபவத்தை இப்போது மீண்டும் நினைவில் பகிர்ந்து கொண்டதுபோல், திண்ணைப் பள்ளிக்கூடம் பக்கம் பார்வையைச் செலுத்தினார்.

திண்ணைப் பள்ளிக்கூடம் பக்கம் இப்போது கொடியும் கிளையுமாய் விரிந்திருந்த பூவரசு மரத்தின் அடியில்தான் இந்தக் கிழவியின் வியாபாரம் நடக்கும். பள்ளிக்கூட மணி அடிக்கும் முன்பும் சரி, இடைவேளை விடும் நேரத்திலும் சரி, மதியச் சாப்பாட்டுக்கு

ஆன்மா எங்கும் சமமாகவே ஒளிவீசும்
அதுவே எல்லாவற்றிற்கும் ஒளியூட்டுகிறது.

விடும்போதும் சரி... எப்படியும் குழந்தைகள் ஒன்றிரண்டு பேராவது இல்லாமலிருக்க மாட்டார்கள்.

"என்ன சாமி, சாவை எரிக்கிறதா பொதைக்கிறதாங்கறது இப்ப பிரச்னை. சிலரு சொல்றாங்க பொதச்சறலாம்னு. சிலருக்கு இதுலே மனசு சங்கடம். கடைசியிலே நீங்க சொல்ற மாதிரி செய்யுங்கன்னு 'பிராது' கொடுத்துட்டாங்க. நீங்க என்ன சொல்றீங்க சாமி?" கட்டியிருந்த முண்டாசைக் கழற்றி இடுப்பில் சுற்றிக் கொண்டு பயபக்தியுடன் கேட்டான் வெட்டியான்.

"ஊரு வழக்கம் என்னவோ அதை மாதிரி செஞ்சிருப்பா. எதுக்கு இப்ப புதுசா விவகாரம் வேண்டிக் கிடக்குது. சம்பிரதாயங்க இருக்கு தில்ல. அதை மீறியா செய்யணும்? அதுவும் செத்த பின்னாலே இப்படிப் பேசிகிட்டு ஏட்டிக்குப் போட்டியா... சே... இதெல்லாம் பாக்கறப்பதான் நம்ப ஜனங்களோட பலவீனமே மத்தவங்க பாத்துப் பேசற மாதிரி ஆயிறுது".


"சரிங்க சாமி. ஆவுட்டுங்க. நம்ப வழக்க மாதிரியே செஞ்சிடறேனுங்க".

எமகண்டம் - ராகுகாலம் எல்லாம் போகட்டும் என்று ஜனங்கள் காத்திருந்து பின்பு ஆண்கள் சாவைச் சுமந்து கொண்டு செல்லும் போது பகல் மணி மூன்றுக்கு மேலாகி விட்டது. சேகண்டியும் சங்கும் ஊர்வலம் புறப் பட்டதைத் தெரிவித்துக் கொண்டிருந்தன நான்கு திசைகளிலும்.

ராஜப்பா தன்னுள் நினைத்துப் பார்த்துக் கொண்டார். சோகமான இந்தச் சூழ்நிலையில் கூட மெதுவாய் சிரித்துக் கொண்டார்.

சிறுபிள்ளையாய் இருக்கும்போது சிநேகிதர் வீட்டில், சமயங்களில் தன் மாமன் வீட்டில் ராத்திரி நேரங்களில் முறுகலான தோசையுடன் 'கவுச்சு' சாப்பிட்டுப் போகும்போது தனக்குப் பயம் உண்டாக்கி உறவினர்களின் மீது தனக்கு வெறுப்பு ஏற்பட வைத்த கிழவியின் சாதுர்ய மான குணாதிசயத்தை மனதுக்குள் பாராட்டிக் கொண்டார்.

ஆலமரத்து முனி ராத்திரி பன்னிரண்டு மணிக்கு மேல் வாயில் சுருட்டுடன் 'கங்குகள்' கனிந்திருக்கும் வாளியைக் கையில் பிடித்துக் கொண்டு பூமிக்கும் வானத்திற்குமாய் நடந்து கொண்டிருக்கும். கவுச்சு குழம்பு சாப்பிட்டுப் போகிறவர்களைப் புடனியில் போட்டு வாயில் ரத்தம் கக்க வைத்துவிட்டுச் சாகடித்துவிடும் என்ற கதையைக் கிழவி கண்டித்துப் பேசி யிருக்கிறாள்.




"சுருட்டு குடிச்சிச்சாம் சுருட்டு! சுருட்டே கண்டுபிடிக்காத காலத்துலே எதைக் குடிச்சிச் சாம் இந்த முனி? பெரிய மனுஷங்க நீங்க எல்லாம் சேந்து கொழுந்தா இருக்கற கொழந் தைங்களே பேடியாக்கிறீங்க... போங்க... போங்க... குழந்தைங்களைக் கண்டிச்சிப் பயமுறுத்தி வளக்கணும்னா பயப்படற கதை மட்டும் உங்களுக்குப் போதும்னு நெனச்சா தப்பு. எப்படிச் சொல்லணுமோ அப்படிச் சொல்லிக் குழந்தைங்களை வளக்கணும். இதை வுட்டுட்டு... சகட்டு மேனிக்கு இப்படியா...?" ராஜப்பாவின் நினைவுகளில் 'கிழவியும் அந்த ஆலமரத்து முனி'யும் வந்து தன்னை விவேக மாய் வளர்த்த சூழ்நிலையை நினைத்துக் கொண்டு தெருக்கோடியை அடைந்தபோது,

'சாவுக் கூட்டம்' மயானத்தில் நுழைய, ராஜப்பா வெட்டி வைக்கப்பட்டிருந்த குழியின் பக்கம் போனார். பின்னால் திரும்பிப் பார்த் தார். அந்தப் பக்கம் 'ராயல் டாக்கீஸ்'ஸில் பகல் காட்சிக்காக ஜனங்கள் வரிசையாக நின்று கொண்டிருந்தனர்.

காக்காய் முள் செடிகளும் கருவேல மரங்களும் கூடவே இறந்துப் போனவர்களின் எலும்புத் துண்டுகளும் என்று சிதறிக்கிடக்க, தரையில் கிடந்த குச்சி ஒன்றை எடுத்து அப்புறப்படுத்திவிட்டு உள்ளே போய் சில கஜதூரம் போனவுடன் திரும்பி வந்தார்.

வெட்டியான் மயான நுழைவு வாசலில் 'அரிச்சந்திரன் சுலோகம்' பாடிக்கொண் டிருந்தான். ஒரே குரலில் உச்ச ஸ்தாயியில் இரண்டு தடவை; சேகண்டி ஒலி நின்றது.

"காளியம்மா கதவைத் திற
அரிச்சந்திரா காப்பாத்து
காளியம்மா கதவைத் திற
அரிச்சந்திரா காப்பாத்து".



5

" ஏங்க பாவா... ஒங்களைத்தான்..."

சிறுமலைப் பக்கம் தன் பார்வையை நிலை குத்தச் செய்திருந்த ராஜப்பா குரல் கேட்டுத் திரும்பினார். என்ன விஷயம் என்று கேள்வி கேட்பது போலிருந்தது அவரது பார்வை. தொடர்ந்து வந்து முடிந்த சம்பவங்கள் தன்னை ஆசுவாசப்படுத்தாமல் குழப்பம் செய்து கொண் டிருப்பதாக அவருக்கு எண்ணம் போல இருந்தது.

"நீங்க வெளிய காரிய விஷயமாக நல்லது பொல்லதுன்னு போறதப் பத்தி நான் ஒன்னும் சொல்றதுக்கு இல்லை இனி. நீங்க இதுக்கு மேலேயா திருந்தப் போறீங்க. அதில்ல விஷ யம். முதலாளி வீட்டிலே இருந்து ஆள் வந்துட்டு போச்சு. உங்களைக் கையோட கூட்டியாறச் சொல்லி. இந்த மாதிரி 'சாவு' விஷயமாகப் போயிருக்காங்க, வந்தவுடன் அனுப்பி வைக் கிறேன்னு சொல்லி அனுப்பிச்சிருக்கேன். எதுக்கும் ஒரு நடை போயிட்டு வந்திட்டா நல்லதுன்னு மனசுக்குப் படுது. 'சொல்லி வச்ச மாதிரி 'சேலை'யைச் சொன்னபடி கொண்டு வந்து கொடுத்திடற ஆளு, இப்படி அக்கம் பக்கம்னு போயிட்டா, எப்படி நம் தொழில் செய்யறதுன்னு கேட்டுட்டு வரச் சொன்னாரு முதலாளி'ன்னு வந்த ஆளு ஒரு மாதிரியா பேசிட்டுப் போறாரு. இதுக்கு மேலே உங்க இஷ்டம்... ஆமா..."

"அப்படியா ராஜம், போயிட்டு வர்றேன், பட்டு - பாவு இன்னும் சேலை நெய்யறதுக்கு சகல சம்பத்துக்களையும் தந்து சேலை நெஞ்சி தரலேன்னா, நம்மைப் பேசத்தாம்மா செய்வாரு. தப்பு அவருமேலே சொல்லமுடியுமா... என்ன? காரியமா இந்த முறை சொணங்கியாச்சி கொஞ்சம். விவரம் அவருகிட்டே சொல்லிட்டு வந்துடுறேன். இன்னிக்கு உடம்பு அலுப்பா இருந்தாகூட 'ஜாம ஆட்டம்' விடறதுக்குள்ளே மிச்சம் மீதியிருக்கறதை நெசஞ்சி விடிய காத்தாலே அறுத்து எடுத்துப்போய் கொடுத் துடலாம்".

சொல்லிவிட்டு, மயானத்துக்குப் போய்விட்டு வந்து குளித்த அலுப்பு தீருவதற்கு முன்னமேயே தோளில் துண்டை எடுத்துப்போட்டுக்கொண்டு விடுவிடுவென்று முதலாளியின் வீடு இருக்கும் வீதிப் பக்கம் நடந்தார். தெரு விளக்குகள் அங் கொன்றும் இங்கொன்றுமாக எரிய ஆரம்பித்துக் கொண்டிருந்தன.

'முதலாளி' வீட்டிற்குள் நுழையும்போது நன் றாகவே இருட்டிவிட்டிருந்தது.

"முதலாளி.."

குரல் கொடுத்துவிட்டு ஓரமாக ஒதுங்கி நின்று கொண்டார் ராஜப்பா. ஏதோ யோசனை யில் இருந்த முதலாளி தலையை நிமிர்த்திவிட்டு,

"வாங்க ராஜப்பா, சொல்லியனுப்பியிருந் தேன்னு வீட்லே சொன்னாகளா... உக்காருங்க."

"ஆமாங்க..., பரவாயில்லீங்க... இருக் கட்டுங்க.."

"உங்களோட தறிலே சேலைங்க வர்றாமே, மதுரைக்கு அனுப்பவேண்டிய ஆர்டர் சரக்கு

அனுப்ப முடியாமே சொணங்கிப் போச்சு பார்த்திங்களா? நல்ல வேலைக்காரரு... சொன்னா சொன்னபடி சேலையைக்கொண்டு வந்து கொடுக்கற ஆசாமி, தொழில் மேலே பக்தி வச்சிருக்கறவர்ன்னுதானே, நான் உங்களுக்கு என்னென்னமோ சலுகை தர்றேன். நீங்களே இப்படிச் செஞ்சா எப்படி, சொல்லுங்க?"

"இல்லீங்க..., தவிர்க்க முடியாமே இப்படி ஆயிருச்சு, இனிமே பாத்துக்கறேன் இப்படி ஆகாமே".

"ராஜப்பா, சொணக்கம் ஆகறது சகஜம்தான். ஆனா ஒண்ணே ஒண்ணு. யோசிச்சுப்பாருங்க, இந்தச் சுணக்கம் எதுனாலே ஆகுதுண்ணு."

"நீங்க என்னத்தைச் சொல்ல வர்றீங்கன்னு எனக்குத் தெரியுதுங்க முதலாளி".

"ராஜப்பா... உங்களுக்கு நான் சொல்லித்தான் புரிய வைக்கணும்ங்கற வயசா உங்களுடையது? எல்லாமே உங்களுக்குப் புரியும். உங்க மாதிரி சேலையைச் சுத்தமா செய்யறவங்க எல்லாம் எதுக்கு இந்தப் பஞ்சாயத்து, கச்சேரின்னு போயிட்டு உங்களைப் பாழ்படுத்திக்கிறீங்கன்னு எனக்குப் புரியலே...

நான் இப்போதுதான் தொழிலுக்குப் புதுசா வந்தவன். என்னோட அப்பா செத்துப் போன துக்குப் பிறகு தானே தொழிலுக்கு வந்தேன். என்னோட அனுபவத்தை வச்சி நான் பேசறேன். கைநிறைய சம்பாதிச்சு நாலு காசை மிச்சம் பண்ணி, எங்கப்பாகிட்டே நீங்க உங்க பையனைப் படிக்க 'ஒத்தி' வச்சிருக்கற வீட்டைத் திருப்ப முயற்சி செய்யலாமில்லே.

நீங்க எனக்குப் பெரியவங்க. அப்பா ஸ்தானத்திலே இருக்கறவங்க. அப்பா உங்க மேலேயும், நீங்க தொழில் மேலே வச்சிருந்த மதிப்பையும் வச்சி கொடுத்த மரியாதையும் இன்னும் என்னோட கண்ணுக்கு முன்னாலே தெரியுது. அப்பெல்லாம் நான் சின்னப் பையன்... உங்க தம்பிங்கதான் பொறுப்பில்லாமே நடந்துக்கறாங்கன்னா... நீங்களும் இப்படிச்செய்யறது சரியில்லேன்னு எனக்குப் படுது."

"சின்ன முதலாளி, அதெல்லாம் ஒண்ணுமில்லேங்க. எங்க பரம்பரையிலே ரத்தத்தோட ரத்தமா ஊறி வந்த மத்தவங்களுக்காகவும் ஒழைக்கணும்ங்கற எண்ணம்தான். இதுலே எங்களுக்குப் பெரிய இழப்பு வந்துரும்னு என்னைக்குமே யாரும் நெனைச்சதில்லே".

"சரிங்க அப்படியே வச்சிக்கங்க. பஞ்சாயத்து தலைவர்னு உங்களை ஜனங்க வச்சிருக்காங்க ஏழை பணக்காரன்னுகூட பார்க்காமே. இதுக்கு மேலே நீங்க எதுக்கு 'நெசவாளிகள் கூட்டுறவு சங்கம்'னு தொடங்கியிருக்கீங்க? இது இப்போ அவசியம்தானா, கொஞ்சம் யோசிச்சிப் பாருங்க".

வந்த விஷயம் திசை மாறிப் போவதாய் உணர்ந்து கொண்டார் ராஜப்பா. இருந்த போதிலும், இந்த மாதிரி சமயத்தில்தான் 'சங்கத்தின்' போக்கைப் பத்தியும் நெசவாளிகளின் எதிர்காலத்தைப் பத்தியும் பேசமுடியும் என்ற எண்ணத்தில் பேசத் தொடங்கினார் ராஜப்பா.

"முதலாளி என்ன சொல்ல வர்றீங்கன்னு தெரியுதுங்க. ஆனா, நீங்க நெனைக்கிற மாதிரி இல்லே. நெசவாளிங்க எல்லாமே பசியும் பஞ்சமும் இல்லாமேயா வாழ்க்கையை நடத்துறாங்க? இல்லே இந்த ஊர்லே ஒவ்வொரு நாளையும் தங்களோட வாழ்க்கைக்காகக் கட்டாயமா தியாகம் பண்ணிட்டு இருக்காங்க, நான் நல்லாதொழில் செய்யறதா, பாராட்டிப் பேசுறீங்க, நான் மட்டும்தானா நல்லா தொழில் செய்யறேன் இந்தக் கிராமத்திலே? நெறையப் பேர் இருக்காங்க. ஆனா, அவங்களுக்கு நான் உங்ககிட்ட தொடர்பு வச்சிருக்கிற மாதிரி அவங்க முதலாளிங்ககிட்டே தொடர்பு வச்சிக்க முடியலே. இன்னும் சொல்லப் போனா வக்கில்லே, வழியில்லே. தரகருன்னு ஊருக்குள்ளே ஒவ்வொரு முதலாளிங்களும் ஆளை வச்சிகிட்டு முதலாளிக்கும் தொழிலாளிக்கும் நேரடியா உறவு வச்சிக்க முடியாதபடி செய்றீங்க."

"ராஜப்பா நீங்க சொல்றதுலே நியாயம் இருக்கறதா எனக்குத் தோணலே, ஊர் ஜனங்களைப் பத்தி நெனைச்சிகிட்டு நீங்க உங்க வாழ்க்கையைப் பாழாக்கப் போறீங்க.. ஆமா".

"இல்லீங்க, நிச்சயமா இல்லே. உண்மையைத்தான் நான் சொல்றேன், தரகருங்ககிட்டே தான் சின்னச் சின்ன நெசவாளிங்க 'விதி'யே இருக்குது.

காண்ட்ராக்டர், இந்தத் தரகருங்க உங்க மாதிரி முதலாளிங்ககிட்ட பேசி முடிச்சிடறாங்க. சேலைக்கு இன்னதுன்னு 'ரேட்' பேசி முடிச்சிக்கிறாங்க. ஆனா, சேலைக்கு இவங்க நெசவாளிக்கு எவ்வளவு தர்றாங்க தெரியுங்களா? பாதிக்குப் பாதி கொடுத்துட்டு கமிஷன் அடிச்சிக்கிறாங்க. உங்ககிட்டேயும் காண்ட்ராக்டிலே லாபம், இப்படியும் லாபம், ஆனா

ஆன்மாவே நீ எனும் உண்மை அறிந்தால்
ஆனந்தம் நிரந்தரமாகப் பெற்றுவிடுவாய்

வயிறு காயுறது யாரு? ஏழை நெசவாளிங்க தானே? இதை இப்படியே இருக்கவிட்டா எதிர் காலத்திலே இந்தக் கிராமத்திலே நெசவாளிங்களே இருக்க மாட்டாங்க. உழைப்புக்குத் தகுந்த ஊதியமில்லாமே, சொல்லப் போனா வேறே வழியே இல்லாமே ஜனங்க செத்துப் பொழச்சிக்கிட்டிருக்காங்க. சமயத்திலே முதலாளிங்க சரக்கு விலையாகலேன்னு பட்டுப்பாவு கொடுக்கறதை நிறுத்திக்கிறீங்க. அப்போ எல்லாம் என்ன செய்ய முடியும் நெசவாளிங்க? சாணா முழமா நெசவு செஞ்சி செஞ்சி வயித்தைக் கழுவற ஜாதியா இருக்காங்க நெசவாளிங்க.

இந்த மாதிரி நெருக்கடியான காலத்துலே ஜனங்க வயித்துக்கு எங்க போவாங்கன்னு நெனச்சீங்களா முதலாளி.. இதைப் பத்தியெல்லாம் உங்களுக்கென்ன கவலை? வாரத்துக்கு அத்தனை சேலை உற்பத்தியாகி வரணும்ங்கற கவலை மட்டும்தானே உங்க மாதிரி இருக்கறவங்களுக்கு.

தமிழ்நாடு பூரா சின்னாளப்பட்டி சேலைங்க விலையாகணும். பத்தாத குறைக்கு காரைக்குடிக்கு சரக்கு அனுப்பி அங்கேயிருந்து பினாங்கு – சிங்கப்பூர் – மலேயான்னு காரைக்குடியிலே இருக்கற சொந்தக்காரங்க எல்லாம் வியாபாரம் செய்ய தோது செய்யணும்.

அப்படித்தானே முதலாளி?

என்னோட போறாத காலம்... உங்க அப்பா கிட்டே வீட்டை 'ஒத்தி' வச்சி பணம் வாங்கினது. எனக்கு நம்பிக்கையிருக்குது, எந்த வீட்டை இப்படி அடமானமா வச்சி என்னோட பையனைப் படிக்க வக்கிறேனோ அவன் ஒரு நல்ல வேலையிலே வந்தப்புறமா நான் திருப்பிக்கத் தான் போறேன்... அப்படியே விட்டுறப் போறது இல்லே. ஏன்னா, இது பாட்டனார் வழி வந்த வீடு. இதை இப்படியே விட்டுட்டா வர்ற தலை முறை என்மேலே பழி சொல்லிடும். சரி... உங்களுக்குத் தெரியாத விஷயம் ஏதுமில்லே. நான் அதிகமா பேசப் போறது இல்லே. ஜனங்களுக்கு வேலை தர முடியாமே பட்டு நூலு கொடுக்கறதை நிறுத்தறதைப் பத்திச் சொன் னீங்க. கொஞ்சம் யோசிச்சுப் பாத்தா உங்களுக்குப் புரியாத விஷயம் இல்லே. கூலி அதிகம் கொடுத்து உற்பத்தியாகற வேலைங்க இங்கே தேங்கிப் போச்சினா, வெளியூர்லே வியாபாரம் செய்ய முடியாமே எப்படி பணம் வரவு வராமே தொழில் செய்ய முடியும்?

வெளியூர் பக்கம் சேலைங்க அழிஞ்சாதானே உற்பத்தியை அதிகம் பண்ண நாங்க ஆசைப்பட முடியும். இதுகூடவா உங்களுக்கு நான் சொல் ணும், ஞாபகப்படுத்தணும்..?"

"போதும் ராஜப்பா... போதும். பிரச்னை இல்லாமே எந்தத் தொழிலும் இருக்காது. எங்க பக்கம் நாங்க சரியாதா இருக்கோம். நீங்க சங்கம் அது இதுன்னு போய் வீணா உங்களோட வாழ்க்கையைக் கெடுத்துக்காதீங்க, சொல் றதை நான் சொல்லிட்டேன். 'தரகரிட்டே அடிமைத்தனமா இல்லாமே சுயமா முதலாளி கிட்டேயே நிறையக்கூலி வாங்கற ஒரே மனுஷ இந்த ஊர்லே நீங்க மட்டுந்தான். என்னோட அப்பாவுக்கு நான் கொடுத்த உறுதியிலே சலுகை இது. 'சங்கத்தோட' போக்கு பிடிக்க லேன்னா.... நான் நிச்சயமா உங்களுக்கு வேலை தர்றதா உத்தேசம் இல்லே... அப்புறம் நீங்களும் ஏதாவது ஒரு மாஸ்டர் வீவர்கிட்டே கைகட்டி நின்னு 'பட்டுப்பாவு' வாங்க வேண்டிய சூழ்நிலையை நீங்களே உருவாக்காதீங்க ஆமா... கடைசியா சொல்லிட்டேன். கையிலே

இருக்கற சேலைகளை நாளைக்கு ராத்திரிக்குள்ளே இங்கே கொண்டுவந்து கொடுத்துட்டுப் போங்க".

ராஜப்பாவின் கண்கள் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த பெரிய முதலாளியின் படத்தில் நிலை குத்திப் பின் சின்ன முதலாளி பக்கம் திரும்பியது.

"முதலாளி நீங்க என்னைப் பயமுறுத்திப் பாக்கலாம்னு நெனைக்கிறீங்க. நிச்சயமா முடியாது. ஏன்னா வாழ்க்கைங்கறதுலே உங்களை விடக் கஷ்ட நஷ்டங்களை அதிகமாக அனுபவிச்சவன் நான். எந்தக் காரணம் கொண்டும் இந்தக் கிராமத்திலே நெசவாளிங்ககிட்டே ஒரு மாற்றத்தை உண்டாக்காமே இருக்கப் போறதில்லே. இதே நெசவுப் பிரச்னையே 'இயந்திர மய மூலமா' தீர்க்க முடியும்னு எல்லாத்துக்கும் சொல்லிக் கொடுக்கப் போறேன். இதுலே ஆயிரம் கஷ்டம் வந்தாலும் எனக்கு ஒய்வுமில்லே, உறக்கமும் இல்லே. நாளைக்கோட உங்களுக்கும் எனக்கும் உள்ள கணக்கு தீந்துபோகும், வீட்டுப் பிரச்னை...காலம் அதுக்குப் பதில் சொல்லும் நிச்சயமாய், நான் உயிரோடு இருந்தாலும் இல்லாவிட்டாலும் தம்பிகள் இருக்காங்க".

தன் மனதில் வேரோடிப் போயிருந்த எண்ணங்களை வெளிப்படுத்த இப்படியொரு சந்தர்ப்பம் கிடைத்ததே என்ற மகிழ்ச்சியில் வேறு எதைப் பற்றியும் மனதில் போட்டுக் குழப்பிக் கொள்ளாமல் விடுவிடு என்று வீதியிலிறங்கி நடக்கத் தொடங்கினார் ராஜப்பா.

வரும் வழியில், தெரிந்த நண்பர்கள் வெகுவும் அக்கறையாக 'முதலாளி' வீட்டிற்கு இவ்வளவு நேரத்தில் போய்விட்டு வருவதைக் கேட்கவே, எல்லாவற்றையும் சங்கத்தில் தெளிவாகச் சொல்லுவதாகச் சொல்லிவிட்டு நடந்தார். இரண்டாவது ஆட்டம் சினிமா விட்டுக் கூட்டம் சிதறிக் கொண்டிருந்தது. கூட்டத்தில் தானும் ஒருவனாக கலந்துகொள்ள நினைக்காமலிருந்தாலும் சிந்தனைகளால் தாமதப்பட்ட நடையினால், சினிமாவுக்குப் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டது போல ஆகிவிட்டது.

அவரைச் சுற்றியும் முன்புறமும் பின்புறமாக கூட்டம் சமீபத்து விட்டதை வீட்டிற்குப் போகும் முக்கில் 'தனியாக' ஒதுங்கி நடந்த போது தெரிந்து கொண்டார். தன்பின்னால் எதிர்காலப் பிரச்னைகளில் இப்படி ஜனங்கள் திரண்டு வரவேண்டும் என்ற ஆசையுடன் வீட்டின் கதவைத் தட்டினார் ராஜப்பா.

(தொடரும்)



"திடநம்பிக்கை"

டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியன்

அண்மையில் வெளிவந்த பாரத வரவு செலவுத் திட்டத்தில் "தன்னம்பிக்கை" தலை தூக்கி நிற்கிறது என்று பொருளாதார வல்லு நர்கள் கூறுகின்றார்கள். நாம் இன்று ஒரு பள்ளத்துள் இருக்கிறோம். வெளியே வர வழி தெரியாமல் முழித்துக்கொண்டு நின்ற காலம் மலையேறிவிட்டது. நாம் தன்னம்பிக்கையுடன் வெளியேற முயற்சி செய்யவேண்டும். அதற்குத் திடநம்பிக்கை வேண்டும் என்கிறார் மாண்புமிகு மன்மோகன் சிங்.

திடநம்பிக்கை இன்றி எதையுமே சாதிக்க முடியாது. இன்று மாபெரும் மனிதர்கள் என்று உலக வரலாற்றில் இடம் பெற்றவர்கள் வாழ்க்கையில் அவர்களைக் கைதூக்கி விட்டதே இந்தத் திடநம்பிகைதான்.

தன்னம்பிக்கை, திடநம்பிக்கை என இரண்டு சொற்கள் வருகின்றனவே என்கிறீர்களா? ஆம். தன்னம்பிக்கை ஆதாரம். அது திடநம்பிக்கை யாக இருக்க வேண்டும்.

மகான் அரவிந்தர் திடநம்பிக்கை பற்றிக் கூறுகிறார்:

"விடா முயற்சியின்றி எதையும் சாதித்துவிட முடியாது. நம் எண்ணத்துக்கு விரோதமாக ஏதாவது நிகழ்ந்தால் நம் மனம் இடிந்து விடுகிறது. சஞ்சலப்படாமல் அதை அமைதி யாக வைத்திருக்க நாம் சாதனை பழக வேண்டும். இது வெகு முக்கியம்".

"பேரருளை நம்பு. எல்லாக் கஷ்டங்களில் இருந்து அதிசயமாக நீ விடுபடுவாய்".

"ஆத்திரப்படாதே. செய்வதைத் திருந்தச் செய்வேன் என்ற துணிந்த திடமான உள்ளம் உன்னிடம் இருக்கட்டும்!"

"உன் முன்னேற்றத்தை அவ்வப்போது ஆணவம் தடுக்கப் பார்க்கும். நீ திடமாக இருந்தால் ஆணவம் உனக்குத் தலைவணங்கி விலகும். உடனே திடநம்பிக்கை உன்னுள் துளிர்விட ஆரம்பிக்கும். அச்சம் தொலைந்து போகும். பின் உன்னால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை என்ற திடநம்பிக்கை தலைதூக்கி உன்னை உயர்த்தும்".

எப்படிப் படிப்படியாக நாம் உயர அரவிந்த மகான் வழிகாட்டுகிறார் பாருங்கள். விவேகா னந்த அடிகளார் நமக்கு – இந்தியருக்கு இப் போது தேவையானது எவை, எவை என்று கூறுகிறார் பாருங்கள்.

"What our country now wants, are muscles of iron, nerves of steel, gigantic wills, which nothing can resist, which can penetrate into the mysteries and secrets of the universe and accomplish their purpose and fashion even if it meant going down to the bottom of the ocean, meeting death face to face".

- Swami Vivekananda

பார்த்தீர்களா?

"இன்றைய பாரதத்தின் மொத்த உரு" என்று ஜவஹர்லால் நேரு பெருமான் வர்ணித்தாரே அந்த விவேகானந்த அடிகளார் கூறுகிறார், ஆணித்தரமாக இன்று பாரதம் வேண்டுவது அரிதாரம் பூசிக்கொண்டு அட்டைக் கத்தியுடன் "ஆஹா ஓஹோ" என்று பாய்ந்து பாய்ந்து சமரிடும் சமர்த்தர்கள் அல்ல. பரம ஏழையாக நடிக்க, ஐம்பது லட்சம் சம்பளம் வாங்கும் வீரர்கள் அல்ல. பல நாட்கள் பட்டினி போடப் பட்டு, முக்கால் உயிரிழந்து இருக்கும் சிங்கத் துடன், மக்கள் கைதட்ட காமிரா முன்பு சிங்கத்தைக் குத்தும் மனிதச் சிங்கங்கள் அல்ல.

ஆனால் இவர்களைத்தானே நாம் இன்று பூசனை செய்கிறோம். தனது பெற்ற அன்னை யின் பிறந்த நாளை அறியாத மறத்தமிழன்

கடவுளே பக்தரைத்தேடு கின்றாரேயன்றி
கடவுளைத் தேடுவதாகக் கூறுபவர் பக்தரல்லர்!

இந்த அட்டைக் கத்தி வீரர்களின் பிறந்த நாட்களை ரத்ததானத்துடன் அல்லவா கொண்டாடுகின்றனர். இன்றைய மாவீரர்கள் இவர்கள் தானே என்கிறீர்களா?

ஆம். மேல்வாரியாகப் பார்த்தால் நமக்கு அப்படித்தான் தோன்றுகிறது. பள்ளி, கல்லூரியிலே உள்ள மாணவமணிகட்கு "மகாத்மாக்களாக" இவர்கள் காட்சி அளிக்கிறார்கள். உண்மையான மகாத்மாவை மறந்த நம் இளைஞர்கட்கு இந்த அட்டைக் கத்திகள்தான் மகாத்மாவாகத் தெரிகிறார்கள்.

ஆனால் சிகாகோவில் சென்று நம் இந்து மதத்தைப் பற்றிக் கர்ஜித்து அமெரிக்கர்கள்கூட இவர் சாதாரண மனிதர் அல்ல, "மற்றொரு கிரகத்தில் இருந்து வந்த தேவன்" ("Angel from another Planet") எனப் புகழப்பட்ட விவேகானந்த அடிகளார் நாமெல்லாரும் வீரர்களாக வேண்டுமென விரும்பினார். எப்படிப்பட்ட வீரர்கள்? இரும்புத் தசைகள் கொண்டு, எஃகு நரம்புகள் கொண்டு, அசைக்க முடியாத எண்ணங்கொண்டு, எதையும் எதிர்த்து வெற்றி கொள்ளும் மனப்பான்மையும், திடமும் கொண்ட இந்தியா இன்றையத் தேவை என்றார் அடிகளார்.

கடலில் அடிவரை சென்று மரணத்தின் முகத்தில் மிதிக்கும் பேராற்றல் பெற்ற இந்தியர் தேவை இன்று என்றார். நம் பாரதி சின்னப் பாப்பாவுக்கே சொன்னான் "மோதி மிதித்து விடு பாப்பா" என்று.

வெற்றி, எதிலும் தோல்வி என்பது நம் வரலாற்றில் இல்லை என்று கூறும் விவேகானந்தரின் இந்தியனை எப்படி உருவாக்குவது?

இதுவே இன்றையப் பிரச்னை. பெற்றோர்களைக் கேளுங்கள். ரிக்ஷா இழுக்கும் குப்பன் வீட்டிலிருந்தும், மேட்டுக்குடி சேட் வீட்டிலிருந்தும் ஒரே பதில்தான் வருகிறது. பிள்ளைகளைப் பெறுவதே எங்கள் வேலை. நன்றாக சொல்லைக் கவனியுங்கள். "பெற்றோர்" - குழந்தைகள் பெறுவதுதான் எங்கள் பணி. பெறுவது மட்டுமே எங்கள் வேலை. அதனால்தான் பெற்றோர் என்று பெயர். பின் மற்றவை எங்கள் வேலையல்ல. பின் இது யார் வேலை? ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்பார்கள். சரி இது ஆசிரியரின் வேலை. இரண்டு மூன்று குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள நம்மால் வீட்டில் இயலவில்லை. "சபா, கச்சேரி, பாராட்டு விழாக்கள், சொற்பொழிவுகள், பஜனைகள், அரசியல் கூட்டங்கள், பெண்ணுரிமை இயக்கங்கள், கிரிகெட் விளையாட்டு, நாடகங்கள், அலுவலகம், வீட்டில் பல வித உலக கலர் டிவிகள், இவ்வளவுக்கும் பிறகுதான் குழந்தைகள் வரமுடியும்" என்கிறார்கள். இது என் கூற்றல்ல, அண்மையில் பூனாவில் நடந்த ஒரு மகளிர் மாநாட்டில் தலைமையுரையாற்றிய ஒரு மாண்புமிகு அம்மணியின் கூற்று.

"உலகம் ஆரம்பித்ததிலிருந்து பெண்கள் குழந்தைகளுடன் அல்லாடி விட்டார்கள். அவர்கள் வாழ்க்கையில் பாதி நன்றிகெட்ட குழந்தைகளை வளர்ப்பதில் போய்விடுகிறது. மீதி வியாதியில் போய் விடுகிறது. இவர்கட்கு விடுதலை வேண்டாமா? கட்டாயம் வேண்டும்" என்கிறார் இப்பெண்மணி. நாம் பூரணமாக இதை ஏற்கிறோம்! எனவே தாய்க்குப் பின் தாரம் என்ற பழமொழி போய், தாய்க்குப் பின் ஆசிரியர் என வருகிறது. பழைய கதைக்கே மறுபடி வருவோம். இரண்டு மூன்று குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள நேரமற்றவர்கள் எல்லாப் பிள்ளைகளையும் பள்ளிக்கு அனுப்ப, ஆசிரியர் இந்த பாரத்தை ஏற்கிறார். சுமக்கிறாரா, சுமையுடன் நடக்கிறாரா, உலகம் வேகமாக ஓடுகிறதே இவரும் ஓடுகிறாரா என்பதெற்கெல்லாம் யாரும் பதில் சொல்ல முடியாது.

ஓராசிரியர் பள்ளிகள் ஆயிரக்கணக்கில் நம் நாட்டில் உள்ளன. ஒவ்வொரு அரசும் வந்த உடன் இவற்றை ஈராசிரியர் பள்ளிகளாக மாற்றுவதே எங்கள் வேலை என்று கடந்த கால் நூற்றாண்டுகளாகச் சொல்லி வருகிறார்கள். அவர்கள் நல்லெண்ணத்தைப் பாராட்டுவோம்.

ஓராசிரியர் பள்ளி என்றால் என்ன? ஐந்து வகுப்புகள் இருக்கும். ஐந்து பாடங்கள் இருக்கும். ஐந்து "டைம் டேபிள்கள்" இருக்கும். ஆயினும், ஆசிரியர் ஒருவரே இருப்பார். நம் வீட்டில் ஐந்து கார்கள் இருக்கின்றன, ஓட்டத் தெரிந்த டிரைவர் ஒருவர்தான். இதுதான் ஓராசிரியர் பள்ளி. இதில் பணக்காரக் குழந்தைகள் படிக்காது. பரம ஏழைக் குழந்தைகள் படிக்கும். ஆசிரியர் 1 ஆம் வகுப்பில் "ஆனா ஆவன்னா" என்று கத்திவிட்டு, இரண்டாம் வகுப்பில் "கைவீசம்மா கைவீசு" என்று வீசிவிட்டு, மூன்றாம் வகுப்பில் ABCD என எழுதிவிட்டு, நாலாம் வகுப்பில் 1,2,3, என்று கூறிவிட்டு, ஐந்தாம் வகுப்புக்குள் போவதற்குள் மதிய உணவு வேளை வந்துவிடும். பிறகு

கற்ற கல்விக்கழகு நற்குணம் வளர்த்தலே
குணமற்றவர் ஏட்டுக் கல்வி கற்றும் கல்லாதாரே

5,4,3,2,1 என்று அவர் தட்டா மாலை சுற்றி வரவேண்டும்.

இச்சூழ்நிலையில் பிள்ளைகளுக்குப் பாடம் புரிந்ததா என்ற கேள்விக்கே இடமில்லை. ஆசிரியர் இதற்குப் பிறகு உடல் திடமாக இருக்கிறாரா என்பதே கேள்வி?


மற்றய பள்ளிகளில் வகுப்புக்கு 70 அல்லது 80 பிள்ளைகள் உள்ள பள்ளிகள் பல. கடும் இடப் பற்றாக்குறை, கரும்பலகைகள்கூட நிறம் மாறி வெறும் பலகைகளாகக் காட்சி அளிக்கும் நிலை, பெண் ஆசிரியர்கட்குக்கூடக் கழிப்பிட வசதி இல்லாத அவல நிலை, நூலகமே அற்ற அலங்கோலம், விஞ்ஞானத்தைப் பற்றிக் கூறவே வேண்டாம், 'எல்லாம் அவன் செயல்' என்று மெஞ்ஞானத்தை ஆசிரியர் நாட வேண்டிய நிலை.

இதனால்தான் ஆசிரியரை இறைவன் ஸ்தானத்துக்கு ஏற்றம் செய்தார்கள். "வேண்டுதல் வேண்டாமை இலானாக" ஆசிரியர் இருந்தாலன்றி, கடவுள் போல் எல்லாவற்றையும் கடந்து இருந்தாலன்றி அவரால் வேலை பார்க்க முடியாது.

இவர்கள்தான் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளவேண்டும். கடவுள் குழந்தையை கைவிட முடியுமா? கூடாது - கூடாது. "இப்பை தோற்கின் எப்படை வெல்லும்" எனப் பெய பெற்ற நம் தமிழக ஆசிரியர்கள் பேரறிஞ அண்ணா கூறிய தாரக மந்திரத்தைக் கடை பிடிக்கிறார்கள். அவர்களுக்கு "எதையு தாங்கும் இதயம் உண்டு".

இவர்களாலும் விவேகானந்த அடிக கண்ட 'Men with Nerves of Steel'ஐ உருவாக் முடியவில்லை. பள்ளிகளிலும் சரி, கல்லூ களிலும் சரி.

அன்றொரு கூட்டத்துக்கு அழைப்பின்றி ஒரு நண்பரின் உந்து வண்டியில் ஏறிவிட் படியால் செல்ல நேரிட்டது. நான் கீழே அமர் திருந்தேன். முதல் வரிசையில் மேடையிலே என் நண்பர். அறிஞர், தமிழ் மேதை ஒ துணை வேந்தர், இப்போதுதான் முன்னே வந் கொண்டிருக்கும் ஒரு துணை நடிகை, நடுத்தர தில் உள்ள ஒரு நடிகர் (Star, Super Star, Silv Star, Five Star எந்த ரகத்திலும் சேராதவ இவர்கள் இருந்தார்கள். துணைவேந்தர் பே



எழுந்தவுடன் விசில்கள், கூச்சல் குழப்பம், உட்கார் உட்கார் சப்தங்கள் வந்தன. யாரிட மிருந்து? கூட்டத்தில் இருந்த இளைஞர் பெரு மக்களிடமிருந்து. நிச்சயம் அதில் பாதிப்பேர் மாணவர்களாகத்தான் இருக்கவேண்டும். இத் துணைக்கும் அத்துணைவேந்தரை, பெரும் தமிழறிஞர் பேரறிஞர் மு.வ.வழிவந்தவர் என்றெல்லாம் அறிமுகப்படுத்தினார்கள். மு.வ.வா? யார் என்று கேட்கும் ஒரு கூட்டத்தில் அவர் என்ன பண்ண முடியும்? உடனே அவர் பேசாமல் அமர்ந்து விட்டார். அவர் உட்கார்ந்து விட்ட உற்சாகத்தில் கூட்டம் கைதட்டி அவரைப் பெருமைப்படுத்தியது. என் நண்பர் ரொம்பவும் சங்கடப்பட்டார். நடிகரும், நடிகையும் ஒரு 'டூயட்" பாடினார்கள். இந்தியா சுதந்திரம் அடைந்த 1947 ஆகஸ்ட் 15 இல் எவ்வளவு ஆனந்தம் கொண்டோமோ அந்த ஆனந்தம் அப்பெருங்கூட்டத்தில் இந்த டூயட்டுக்கு ஏற்பட்டது. அவர்கள் பாடியது ஒரு பிரபல சினிமாப் பாட்டாக இருக்கவேண்டும். ஏனெ னில் கொச்சை வசனங்களும், இருபொருள் சொற்களும் மலிந்து இருந்தன. பாட்டு என்று சொல்லப்பட்ட இந்த "சொல்லடுக்கில்".

துணைவேந்தரின் கையைப் பற்றிக் கொண்டு, நல்ல காற்றுக்காக அந்த மன்றத்தை விட்டு வெளிவந்து நண்பரது காரைவிட பல்லவனே நல்லவன் என நானும் நண்பரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் பேருந்து நிலையத்தை நோக்கி நடந்தோம்.

நான் கூறினேன்: "ஐயா உங்களது பேச்சைக் கேட்கவே வந்தேன்" என்றேன். அதற்கு அவர் சொன்னார்: "மாணவர்கள் வகுப்பறை போல் தானே மன்றத்திலும் நடந்து கொண்டனர்" என்று சிரித்தார். அப்போது வேறொரு சம்பவம் எனக்கு ஞாபகம் வந்தது.

டில்லியில் நடந்தது இது. என் பழைய நண்பர் டில்லிப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மேதை டாக்டர் மூனிஸ் ராசா ஒரு கூட்டத்திலே இரண்டாண்டுகளுக்கு முன்பு டில்லியில் கூறினார். நான் அக்கூட்டத்தில் தலைமை வகித்தேன். அவர் கூறினார் – ஆங்கிலத்தில் "I am proud my University has succeeded where even the Father of the Nation Mahatma had failed. The Mahatma wanted a "Classless Society" in India. He could not succeed. But we have achieved this in the Univerisity. As no Students attend we have no classess at all and so we have a classless University" என்றார். இது வேடிக்கையாகச் சொல்லப்பட்டாலும் இஸ்லாமிய அறிஞர் மூனிஸ் ராசாவை எவ்வளவு தூரம் இந்நிலை பாதித்திருக்கிறது எனத் தெரிந்தது?

இந்தச் சூழ்நிலையில் மாணவச் சிங்கங் களை எப்படி உருவாக்குவது?

இனி நாம் பேசிக் கொண்டிருப்பதில் பல னில்லை.

பெருங்கல்வியாளர், அருங்குணத்தோர், ஆழ்ந்த சிந்தனையாளர் நம் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.சி.அரங்கநாயகம் ஒரு கூட்டத் தில் அண்மையில் கூறினார்: "மாண்புமிகு புரட்சித்தலைவி முதல்வர் அவர்கள் தரமான கல்வியைத் தமிழகத்துக்கு அளிக்க விரும்பு கிறார்கள். நான் அவர்கள் எண்ணத்தை நிறை வேற்றப் பாடுபடுவேன். ஆனால் ஆசிரியர் மாணவர் ஒத்துழைப்பு கிடைத்தாலன்றி என்னால் இதைச் சாதிக்க முடியாது" என்றார்.

மாண்புமிகு அரங்கநாயகம் அவர்கள் முன் னாள் கணித ஆசிரியர். அவர் மனைவியார் தமிழாசிரியர், நேர்மையாளர், நெறியாளர். அவர் ஆளுகையில் பல ஆண்டுகள் நான் கல்வி இயக்குநராக இருந்தவன். பல முன்னேற்றங் களைச் செய்தவர் அமைச்சர். எப்படி விவேகானந்தர் கனவு கண்ட "மனிதச் சிங்கங் களை" நாம் உருவாக்குவது என்பது பற்றி அவர் நமக்கு வழிகாட்ட வேண்டும்.

நான் கட்டுரை ஆரம்பத்தில் கூறியபடி நம் நிதி அமைச்சர் பட்ஜெட் உரையில் கூறியது போல் "There are no more soft options". இனி சதா மருந்துகள் நம் வியாதியைத் தீர்க்க முடியாது. களிம்புகள் தடவி குணமாகும் நிலை மாறி, கத்தியை வைத்து ரண சிகிச்சை செய்யும் நிலையில் இன்று இருக்கிறோம்.

நம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தைரியமாக எப்படிக் காரியங்களை ஆற்று கிறார்களோ, அப்படி எல்லாத் துறையிலும் செயலாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கி றோம்.

முன்னேற்றத்தின் ஆரம்பமே அறிவுதான். ஒரு நாடு முன்னேறத் தலையான ஒரே கருவி அறிவு. அறிவுடையார் எல்லாமுடையார், அறி வற்றவர் எதைப் பெற்றிருப்பினும் அறிவு மட்டும் பெற்றிருக்காவிட்டால் பயனில்லை. இது பொய்யாமொழி.

அறிவு மட்டும் போதுமா? எதற்கும் தளராத மனமும் வேண்டும். எஃகு மனிதர்கள் தேவை, மனமற்ற மனிதர்கள் அல்ல. மனமற்ற பலர் வீட்டுக்கு வீடு இருக்கிறார்கள். இல்லாவிட்டால் 8000 பெண்கள் வரதட்சிணைக் கொடுமைக் காகச் சென்ற ஆண்டு எரிக்கப்பட்டிருப்பார்

ளா? நாம் வேண்டுவது எதற்கும் அஞ்சாத நெஞ்சங்களை! எந்தத் தோல்வியிலும் துவளாத மாமனிதர்களை.

ஒரு சிறு உண்மைக்கதை -

அவன் அதிகம் படிக்காதவன். ஆனால் அறிவு நிரம்பியவன். மிகவும் ஏழை. ஒரு வேளைக் கஞ்சிக்கே தாளம் போடும் நிலை. அவன் தகப்பனார் விட்டுச் சென்ற கடனை அடைக்கவே அவனுக்கு 15 ஆண்டுகள் ஆயின.

நண்பர்கள் சிலர் அவனைக் கல்யாணம் செய்து கொள்ள வற்புறுத்தினர். இல்லக்கிழத்தி வந்தால் நிலைமை மாறலாம் எனப் பாலத்து ஜோசியனும் சொன்னான். ஆனால் அவன் மனைவியோ ஒரு பெரும் அடங்காப் பிடாரியாக வந்து வாய்த்து விட்டாள். சோக்ரதருக்குக்கூட மனைவி இப்படித்தான். ஒரு முறை இவ்வம்மையார் மாடியிலிருந்து இடி போலக் கூச்சலிட்டபடி சோக்ரதர் மீது தண்ணீரைக் கொட்ட, அதையும் புன்னகையுடன் ஏற்றுக்கொண்ட இந்தத் தத்துவ ஞானி "இடிக்குப் பிறகு மழைதானே பெய்யும்" என்றாராம். அதேபோல் இவன் மனைவியும் இருந்தாள். சிறு கடை ஒன்று வைத்துக் கொடுத்தனர் நண்பர்கள். இவன் நியாயவான். கடை நட்டத்தில் ஓடி, பின் ஒளிந்துகொண்டது.

தேர்தலில் நிற்கச் சொல்லி வற்புறுத்தினர் நண்பர்கள். இவன் நேர்மையாளன். இருமுறை உள்ளூர்த் தேர்தல்களில் நின்று "டெபாசிட்டையும்" இழந்தான் இவன். இவன் நண்பர்கள் கண்ணீர் விட்டுக் கதறியழுது செய்வதறியாது திகைத்தபோது இவன் சொன்னான்: "கலங்காதீர், எனக்கு எது உண்டோ அது கிடைக்கும்" என்று கூறி, தோல்வி கண்டு துவளாத இவன் அவனது கடமையில் சிறிதும் தவறாது உழைத்தான். கருமமே கண்ணாகி, பசிநோக்காது, கண்துஞ்சாது பணியாற்றிக் கொண்டே வந்தான். உலக வரலாற்றில் அவனுக்கு இடம் கிடைத்தது. அவன் பெயர் ஆபிரகாம் லிங்கன். இவர்தான் ஒப்பற்ற அமெரிக்க ஜனாதிபதி.

நாம் நம் நாட்டில் பல லிங்கன்களை உருவாக்க வேண்டாமா? ஏசப்பட்டாலும், பேசப்பட்டாலும், நகைக்கப்பட்டாலும் சிறிதும் கலங்காது முன்னேறிய ஒரு பாபா சாகேப் அம்பேத்கார் நமக்குப் போதுமா? ஒவ்வொரு மாவட்டத்துக்கும் இவர் போல் ஒருவர் வேண்டாமா?

இவர்கள் பின்னணி என்ன? நாடக உலகமோ, சினிமா உலகமோ அல்ல. ரசிகர் மன்றமோ, அரசியல் களமோ அல்ல. விசிலடித்தே முன்னேறியவர்கள் அல்லர் இவர்கள். சி.வி. இராமன், ஜே.சி.போஸ், மேதை இராமானுஜம் போன்றோர் எப்படிப் பிறக்கிறார்கள்?

உட்கார நாற்காலிகூட இல்லாத மேதை இராமானுஜன் உலக மேதைகளின் வரிசையில் முதலில் நிற்பதன் காரணம் என்ன? ராமானுஜன் கணித மேதையாதலால் உலகம் போற்றுகிறது. அவர் 'டப்பாங்குத்து' நடனம் ஆடியிருந்தால் நாம் போற்றிக்கொண்டே இருப்போம்.

அறிஞர் அம்பேத்கார் முதல் இராமானுஜன் வரை எப்படி அசுர சாதனைகள் புரிந்தார்கள்? வள்ளுவன் சொன்ன 'அசாவாமை' அவரிடம் இருந்தது. எதற்கும் சோர்வுராத ஆற்றல் இருந்தது.

இவ்வாண்டு கும்பகோணத்தில் நடந்த மகாமகக் கொடூரத்தைவிட மிகக் கோரமான கூற்று ஒன்று அன்றே நடந்தது, கும்பகோணத்தில். அதுதான் நம் கணித மேதை இராமானுஜன் பலமுறை தேர்வு எழுதியும், எஃப். ஏ (F.A.) பாஸ் செய்ய முடியாதது. இவருக்கு இங்கிலாந்து டாக்டரேட் பட்டம் அளித்தது. நம்மால் எஃப். ஏ. அளிக்க முடியவில்லை. ஆனால் அவர் கலங்கினாரா? இல்லை. மரணப் படுக்கையில்கூட கணிதத்தில் இசையைப் பாடிக்கொண்டே இறந்தார்.

வள்ளுவன் அன்றே சொன்னான்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர்
உலைவின்றித்
தாழாது உஞற்றுபவர்"

ஆனால் வள்ளுவனை நாம் மறந்துவிட்டோம். ஏதோ ஒரு சிலர் இன்னும் வள்ளுவனை மறக்காமல் இருக்கின்றனர். நான் முதன் முதலில் நாற்பது ஆண்டுகளுக்கு முன் மாவட்டக் கல்வி அதிகாரி ஆனபோது பள்ளிச் சுவர்களிலெல்லாம் குறளை எழுதச் செய்தேன். இன்றும்கூட நெல்லை மாவட்டப் பள்ளிச் சுவர்கள் பலவற்றில் பல திருக்குறள்களைக் காணலாம். நல்லவேளை பள்ளிகட்கு அடிக்கடி வெள்ளையடிக்கும் பழக்கம் நம்மிடம் இல்லாததால் இக்குறள்கள் பிழைத்தன. ஆனால் வெள்ளையடிக்கப்பட்ட பள்ளிகளில் தஞ்சாவூர் கோயில் சிற்பங்கள் போல் இவையும்

கீழ்நோக்கிச் செல்வது அரக்கர்களின் தன்மை
மேல்நோக்கிச் செல்வதே மனிதத்தன்மை.

25 ஆண்டுகளுக்கு முன் அமுதசுரபி
(ஏப்ரல் 67)

'கோவை மாவட்டச் சிறப்பிதழ்' என்ற தனி முத்திரையுடன் 1967 ஆம் வருட ஏப்ரல் (சித்திரை) மாத 'அமுதசுரபி' இருபதாம் ஆண்டில் இளமையாய் அடியெடுத்து வைத்திருக்கிறது.

60 காசுகளில் 96 பக்கச் சிறப்பிதழ் – ஆன்மிகக் கட்டுரைகள், சிறுகதைகள், தொடர் கதைகள், சிறப்புக் கட்டுரைகளுடன் பக்கத்திற்குப் பக்கம் துணுக்குத் தோரண ஜொலிப்புடன் ஜனரஞ்சக இதழாக மிளிர்கிறது.

'பல்லவ திலகம்' தொடரில் சாண்டில்யனும், 'காணிக்கை' தொடரில் வித்வான் வே.லட்சுமணனும் தங்களின் தெளிவான நடையில் தொய்வில்லாமல் தொர்டர் நடை போடுகிறார்கள்.

பிரும்மஸ்ரீ சி.வி.ஸ்வாமி சாஸ்திரிகளின் 'திரிபுரா ரகசிய'த் தொகுப்பு ஆன்மிக அன்பர்களுக்குத் தித்திப்பு.

'தமிழ் மரபும் உயிரினமும்' கட்டுரையைப் படைத்துள்ள வே.பெருமாள் தமிழின் தன்னிகரில்லாச் சிறப்பைப் பளிச்சிட வைத்துள்ளார்.

பள்ளி ஆசிரியர்களின் சிறப்புச் சிறுகதை வரிசையில் 'பெருங்காப்பியன்' – விழிப்பு சிறுகதையின் மூலம் சிறுகதை இலக்கியத்திற்கு ஒரு தனி விழிப்பை விதைத்திருக்கிறார்.

'ஆஸ்தி' சிறுகதையில் து. ராமமூர்த்தியும், 'அவளும் ஒரு தாய்' சிறுகதையில் இராம. சுப்பையாவும், 'உரிமை' சிறுகதையில் கர்ணனும், 'விபத்து' சிறுகதையில் வனமாலிகையும், 'சிபாரிசு' சிறுகதையில் சோம மகாதேவனும், 'பட்டணப் பிரவேசம்' சிறுகதையில் எம்.எம். பொன்னுசாமியும் தங்களின் தனித்தனி திறமைகளைப் படைத்து மனத்தில் ஒரு பாதிப்பை உண்டாக்கி இருக்கிறார்கள்.

பல நாட்டுப் பாலர் கதைகள் வரிசையில் பிரான்சு நாட்டின் 'காத்திருந்த இளவரசன்' கதை சிறுவர்களுக்கு மட்டுமல்ல; பெரியோருக்கும் பாடம் புகட்டுகிறது.

வளரும் இசைப் புலவர்கள் வரிசையில் திருமதி. என்.ஸி. சௌந்தரவல்லி (இன்று மிகப் பிரபல பாடகி)யும், திரு. சோமேஸ்வரனும் அறிமுகப்படுத்தப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர்.

படங்களுடன் கூடிய மைக்கேல் ஏஞ்லோ பக்கங்கள் சிந்தனைக்குச் சிறந்த விருந்து அளித்துள்ளது.

தையற் கலைப் பகுதியில் 'ப்ரில் ப்ராக்' தைக்கும் முறையை ஆர்.லட்சுமி அழகாகச் சொல்லியிருக்கிறார்.

இதழ் முழுக்க இவ்வளவு விஷயங்கள் பொதிந்துள்ள போது, கோவை மாவட்ட மலர் பக்கங்களைச் சொல்லவும் வேண்டுமோ?

மாவட்ட வரைபட இணைப்புடன் மாவட்டத்தைப் பற்றி அலசி ஆராய்ந்து, பிழிந்து பிரசுரமாகியுள்ள விஷய விளக்கங்கள், புள்ளி விவரங்கள், படப் பட்டியல்கள் – பரவசப் படைப்புகளாகப் பவனி வருகின்றன.

மாவட்டச் சிறப்பிதழ் வெளியிடுவதில் 'அமுதசுரபி' முன்னோடி என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி.

ஆகமொத்தத்தில், அறுபதே காசுகளுக்கு ஓர் அற்புதப் புதையலைத் தந்து அசத்தியிருக்கிறது 25 ஆண்டுகளுக்கு முந்தைய 'அமுதசுரபி'

—என்.ஆர்.கே.

வெள்ளையில் மறைந்து சாம்பலுள் அக்கினி போலிருக்கும்.

வள்ளுவன் சொன்ன திட நம்பிக்கை வந்துவிட்டால் முன்னேற்றம் தானே வரும்.

நம்மில் பலர் இன்று பல பட்டங்கள் பெற்று வேலையின்றித்தொய்ந்து போய் பட்ட மரமாக நிற்கிறோம். காரணம் நம் தலைவிதி என முட்டாள்கள் கூறுவர்.

உனக்கு விவேகானந்தர் கூறிய சிங்க மனம் வேண்டும். வள்ளுவர் கண்ட உலைவின்றித் தாழாது உஞற்றும் (மிகக் கடின உழைப்பு) திறமை வேண்டும்.

ஆபிரகாம் லிங்கனின் உறுதி வேண்டும். அப்போது உன் முன் விதி கைகட்டி நிற்கும். நீ மற்றையோர் முன் கைகட்டி நிற்கத் தேவையில்லை.


நம்மை மாற்ற ஒரு மாமருந்து உள்ளது. மகாத்மா காந்தியடிகள் கூறிய மருந்து. இங்கிலாந்திலே மாமன்னரைக்கூட அரைக்கால் வேட்டியுடன்தான் காணுவேன் என்று கூறி மன்னரை "யுத்தமின்றி" வென்ற மகாத்மா கூறிய மருந்து – என்ன மருந்து அது?

திடநம்பிக்கை! இதை நீ வளர்த்துக் கொண்டால் நாடு உன் பின்தானே ஓடிவரும்? •

ஓம் எனும் ஓரெழுத்து மந்திரமே எங்கும் நிறைந்த பிரும்மமெனும் ஆதிபரம் பொருளின் ஒலிவடிவம்.

கரையில் ஒரு கடலோடி





படுக்கையில் உன்னைத் தேடினேன்...
நெஞ்சுக்குள் நீ படுத்திருந்தாய்!
சிரிப்பிலே உன்னைத் தேடினேன் – மனத்
துடிப்பிலே நீ பாடினாய்.

இரவும் பகலும் என்னை நீ
நிழல் வேட்டை ஆடினாய்!
இரண்டு சந்திரக் கதிர் வீசிப்
பார்வையில் நீந்தினாய்.

உன் உதடுகள் வேலியை மேயும்;
என் இதயமோ மலர்களை வளர்க்கும்!
பாலைவனம் எனது மணல் வீடு...
பனித்துளியே எனக்குப் பாற்கடலாகும்!

முற்றிப் பழுத்து மண்ணில் விழுந்து
முளைத்து முளைத்து எழுந்த விதையே
முக்கனிகளின் கருவறை!

நாடோடியாய் அலைந்து திரியும் – எனது
நாடோடிப் பாடல் நீ;
கடலோடியாய் அலையோசை கேட்கும் – எனக்குக்
கரையாய் வந்தாய் நீ!

கவியரசு நா.காமராசன்

ஜாதிகள் இல்லையாடி பாப்பா?

நஸியா பேகம் முகத்தில் ஒரு பர்மா கலவரம். புருவனைக் கவலை பொங்கப் பார்த்தாள். வாடல் கத்திரிக்காய் தோற்றம் கொடுத்தார் அவள் கணவர் அப்துல் சலாம். கலெக்டர்!

நடந்து முடிந்த நிகழ்வுகள் அவரை வெகுவாய் பாதித்திருக்க வேண்டும். காயத்தின் வலியை மனசு மறைத்தாலும் முகம் காட்டிக் கொடுக்கத் தவறவில்லை.

எதிர்பார்த்தது போலவே விவகாரம் அவரின் மாற்றல் உத்தரவாய் முடிந்ததில் விவரிக்க முடியாத வேதனை!

ஆனால், அதுவல்ல நஸியா பேகத்தின் துயரம்.

மேம்பாலம் பிரச்னையைக் கணவர் அணுகும்போதே பேகம் மாற்றல் உத்தரவை எதிர்பார்த்துவிட்டாள்.

இன்னும் சொல்லப் போனால் ஏதேனும் ஊருக்கு மாற்றலாகி வரும் போதே அவள் இன்னொரு ட்ரான்ஸ்பருக்குத் தயாராகி விடுவாள்.

இன்றைய மனிதர்களின் அலைவரிசையுடன் ஒத்துப் போகாத கணவர்! பதவி அவரிடமும் அதிகாரங்கள் அனைத்தும், சர்வ வல்லமையுள்ள அவர் எதிரிகளிடமும் அமைந்துவிட்ட விநோதம்! ஆதலின் இப்போது கிடைத்திருக்கும் ட்ரான்ஸ்பர் அப்படியொன்றும் பெரிதாகப் பாதித்துவிடவில்லை அவளை. கவலையெல்லாம், கணவரின் முகத்தில் முதல் தடவையாய்த் தெரிந்த துயர ரேகைகளை எண்ணித்தான்! 'எதற்கும் கலங்காதவர் இப்போ இந்த விவகாரத்தில் மட்டும் ஏன்...?' கவலை மனசு குடைந்தது.

'என்ன காரணமாயிருக்கும்?'

•

அப்துல் சலாம் அந்த ஊருக்கு மாற்றலாகி வந்த முதல் வாரமே பிரச்னையுடன் கைகுலுக்கி விட்டார்.

காரில் வந்து கொண்டிருந்தவர், ரயில்வே கேட் மூடப் பட்டதால் வாகனத்தை நிறுத்தி விட்டு வெளியே வேடிக்கை பார்க்கும்படி ஆயிற்று.

கைவண்டிகள், ரிக்ஷா, லாரி, ட்ரை சைக்கிள்கள் அத்தனையும் மூச்சு முட்டிக் கொண்டு, கடந்து செல்லப் போகும் ரயிலுக்காகக் காத்துக் கொண்டு நின்றன.

'கேட்டுக்கு அந்தப் புறமும் இதேபோல வாகன நெரிசல்கள். 'போக்குவரத்து நெரிசல் மிக்க இந்த இடத்தில் ஏன மேம்பாலம் இல்லை?'

மௌனமாய்ப் பார்வையை அலையவிட்ட கலெக்டர் கண்களில் அந்த ஆசாமி பட்டான். ரிக்ஷா ஒன்றுக்குள் அவன் மனைவி முக்கல் முனகலுடன் துடித்துக் கொண்டிருக்க அவன் வண்டியை விட்டிறங்கி ரயில்வே கேட்டை நெருங்கிச் சென்று தவிப்புடன் ரயில் வருகிறதா என்று பார்ப்பதும், ரிக்ஷாவுக்கு ஓடிவருவதுமாய் இருந்தான்.

"இதோ... இப்ப வந்துடும் கௌரி".

"எ... என்னாலே வலி பொறுக்க முடியலைங்க... யம்மா!" உக்கிரமான வேதனையுடன் இடுப்பைப் பிடித்துக் கொண்டு துடித்தாள் அவள் - கௌரி. அந்தத் தம்பதியின் அவஸ்தையைக் கண்டு பரபரப்பானார் அப்துல் சலாம்.

"டிரைவர்...! அதோ அந்த ரிக்ஷாவிலே பிரசவ வேதனையோட ஒரு பொம்பிளை துடிக்குது பாரு... ரயில் போனதும், தண்டவாளத்தைத் தாண்டின உடனே ரிக்ஷாவை நிறுத்தச் சொல்லு! அவங்களை நம்ப காரிலே ஏற்றி, போக வேண்டிய இடத்திலே விட்டுடுவோம்..என்ன? போய் தவிச்சுக்கிட்டிருக்கிற அந்தப் புருஷங்காரன் கிட்டே சொல்லிட்டு வா..."

ஓட்டுநர் இறங்கி, கூட்டத்தில் நீந்திச் சென்று புருஷன்காரனிடம் பேசினதும், அவன் கையெடுத்துக் கும்பிட்டு நன்றி சொலவதும் இங்கிருந்தே தெரிந்தது.

டிரைவர் திரும்பக் காருக்கு வந்தார்.

"ஆமா ஸார்....! பாவம் அந்தப் பிள்ளத்தாச்சிப் பொம்பிளை... ஏற்கனவே காக்காய் வலிப்பு வேற உண்டாம்! லேபர் பெயின் வர்ற நேரத்திலே வலிப்பு வந்துடக் கூடாதேன்னு பயப்படறான் அந்த ஆள்!"

டென்ஷனுடன் நகம் மேய்ந்தார் அப்துல் சலாம். சற்று நேரத்தில் ஒரு கூட்ஸ் ரயில் அவசரமே படாமல் கடந்து சென்றது. அதற்குப் பின்னர் வாகனங்கள் பலவும் ஒன்றையொன்று முந்த முயல எதிர்ப்புறத்தில் இருந்தும் வண்டிகள் வந்து மையமாய்ச் சேர்ந்து கொள்ள அரைமணி நேரத்துக்கும் மேலே 'ட்ராபிக் ஜாம்' ஆனதில் போக்குவரத்துக் குழப்பம்.

ஆயிரம் ரூபாய்
இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை

வேம்பத்தூர் லலிதா



கலெக்டருக்குக் கவலை அடிவயிற்றில் ஊசி தொட்டது. இந்த வாகனக் குப்பையில் அந்த ரிக்ஷா எது?

பாதி கடந்து கொண்டிருக் கையில் ஒற்றையாய் ஒரு முகாரி கன்னத்தில் அறைந்து காதுகளுக்குள் நுழைந்தது.

"ஐயோ...! கௌரி... என்னை விட்டுப் போயிட்டியா.... கௌரீ...!"

அப்துல் சலாம் எச்சில் விழுங்கினார். 'யா அல்லாஹ்'.

மனசைத் தேற்றிக் கொண்டு சாலை அமைதியானதும் அவர் காரை விட்டு இறங்கிப் போய் புருஷன்காரனைத் தோள் தட்டி ஆறுதல் சொல்லிவிட்டு வந்தார்.

வாயில் நுரை தள்ள கௌரி அடங்கிப் போயிருந்தாள்.

●

பிரதேசம் பூராவும் பிரம் மாண்ட அமைதி இருந்தது. அதிகாரிகள் சைபராய் சூழ்ந் திருக்க, கலெக்டர் தொண்டை யைச் சரி செய்துகொண்டு பேச ஆரம்பித்தார்.

"ஜென்டில்மென்... பேசாம இருக்கிறதிலே புண்ணிய மில்லை. சிட்டியிலேயே அதிகமா ட்ராபிக் ஜாம் ஆவது அந்த இடத்திலேதான். அதிக மான ரயில்கள் ஓடுவதும் அந்தத் தண்டவாளத்திலே தான். ஆனா இந்த இடத்திலே மட்டும்தான் மேம்பாலம் இல்லைங்கிறது தான் ஆச் சரியமா இருக்கு.

டவுன்லே இருக்கிறவங் களுக்கு மட்டுமில்லை, தேனி, பெரியகுளம், ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி இப்படிச் சுற்று வட்டாரத்திலே இருக்கிற எழுபது கிராமங்களிலேருந்து வர்றவங்களுக்கும்கூட முக்கிய மான ரஸ்தா இதுதான்! அங்கே யிருந்தும் அவசரக் கேஸ்களை பெரியாஸ்பத்திரிக்கு இந்த வழியாத்தான் கூட்டி வந் தாகணும். உம், தனபால் அந்தப் புள்ளி விவரங்களை வாசியுங்க".

தனபால் ஃபைல் விரித்துத் தகவல்களை ஒப்பித்தார்.

"ஒரு நாளைக்கு பதினாலு தடவை ரயில் செல்வதற்காக அந்தப் பாதை மூடப்படுகிறது. பதினாலு தடவை என்பதில் ஷண்டிங் இஞ்ஜின்கள் சேர்க்கப் படவில்லை. இரண்டு மணிக்கு ஒருமுறை கேட் மூடப்படுகிறது. ரயில் சென்ற பின்னர் போக்கு வரத்து சகஜ நிலைமைக்குத் திரும்ப அரைமணிக்குக் குறை யாமல் ஆகிறது. மாவட்டத்தில் அரசாங்க மருத்துவமனையில் சேர்க்கப்படும் அவசரப்பிரிவு நோயாளிகள் மரணமடை வதற்கு எண்பத்து நாலு விழுக் காடுகள் வரை ரயில்வே கேட் மூடப்படுவதால் ஏற்படும் காரணம்தான் என்று இன் டென்ஸிவ் கேர் வார்டு முதல் நிலை மருத்துவர் அறிக்கை கொடுத்திருப்பது இங்கு நினைவு கூரத் தக்கது".

தனபால் பேசுவதை அனை வரும் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தனர். ஒருவர் இடைமறித்தார்.

"ஸார்...! பத்து வருஷத்துக்கு முன்பே இங்கே மேம்பாலம் கட்ட பட்ஜெட்லே நிதி ஒதுக்கி யிருக்காங்க ஸார்! நம்ப கார்ப்பரேஷன் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கலெ..."

"இப்ப கார்ப்பரேஷனே தனி அதிகாரிகள் கையிலேதானே இருக்கு...? ஏற்கெனவே இருந் தவங்க ஏன் செய்யலைங் கிறதைக் கேட்கிறதுக்காக நாம் இங்கே கூடலை. நாம் ஏன் அதைச் செய்யக் கூடாது?

"ஸா.. ஸார்! அந்தப் பாலம் மேற்குத் தொகுதியிலே வருது... அமைச்சரோட தொகுதி அது. அவரைக் கேட்காம...?"

"திறப்பு விழாவுக்கு அவர் கிட்டே தேதி கேட்போம். அவர் குறிப்பிடற தேதியிலே திறந்து வச்சுடுவோம்... அப்புறம்?"

ஏதோ சொல்ல வந்த அதி காரி ஏமாற்றத்துடன் உட் கார்ந்து கொண்டார்.

"தனபால்...! பி டபிள்யூ டி காரங்களுக்குத் தகவல் அனுப்பி எஞ்ஜினியரை அனுப்பி மதிப்பீட்டுத் தொகை போடச் சொல்லுங்க. டெண்டர் விளம்பரம் இந்த வாரத்துக் குள்ளே பேப்பர்லே வரணும். ஓ.கே..?" கலெக்டர் எழுந்து கொண்டார்.

●

கப்பலுக்குச் சக்கரம் முளைத்த தினுசில் பிரம்மாண்ட தோற்றம் கொடுத்த அந்தக் கார் வீட்டுமுன் நின்றதும். எட்டிப் பார்த்த நஸியா பேகம் நெற்றியில் ஆச்சரியம், ரேகை உழுதது.

அமரர் சின்னி கிருஷ்ணன் நினைவுச் சிறுகதைப் போட்டி

"என் பேரு கோவிந்த ராஜன்... சுருக்கமா ஜிஆர்ன்னு சொல்லுவாங்க". அந்தப் பெரிய மனிதர் சிரித்தபோது தங்கத் துணுக்குகள் எட்டிப் பார்த்தன.

பேசுத்தின் ரத்தம் பூராவும் பரவசம் பிரயாணித்தது. ஜி.ஆர்.! கோடீஸ்வரர் ஜி.ஆர்!! மில் அதிபர்; மத்திய அமைச்சருக்குக் கீழே உள்ள லெவலில் எவரையுமே சந்திக்கப் போகாதவர்... இன்றைக்கு வீடு தேடி வந்திருக்கிறார்!

"உ... உட்காருங்க ஸார்". உற்சாக டெஸிபல்கள் உதட்டை விட்டு வெளியே வந்தன. கைகள் பரபரத்தன.

கலெக்டரிடம் கைகுலுக்கும் போதே பிரச்னையைத் தொட்டு விட்டார் ஜிஆர்.

"கலெக்டர் ஸார்... நான் ஒரு மனுவோட வந்திருக்கேன்".

"அப்படியா? அலுவலக விஷயங்கள் வீட்டுக்கு வருவதை விரும்புவதில்லையே நான்!".

பெரியவர் தன் முகம் மாறாமலிருக்க ரொம்பவும் சிரமம் எடுத்தார்.

"இஸிட்...?"

"வீடு வரைக்கும் வரும் கோரிக்கைகள் பெரும்பாலும் சட்டத்துக்குப் புறம்பா இருந்துடுது... நியாயமானதா இருக்கும்போது தைரியமா ஆபீஸ் வந்தே கேட்கலாமே...!"

"அவனவன் கோணத்திலிருந்து கவனிச்சா ஒவ்வொரு கோரிக்கைக்கும் நியாயம் கிடைக்கும் கலெக்டர் ஸார். போகட்டும்...! உம்... டிரைவர்! சாவியை ஸார்கிட்டே கொடுத்துட்டு நீ பங்களாவுக்குப் போய் மாருதியை எடுத்துட்டு வந்துடு..."

அப்துல் சலாம் நெற்றியில் ஒரு கீற்று சிந்தனை ஸ்கிப்பிங் கயிறுபோலத் துடித்தது.

"சாவியா... என்ன சாவி? என்கிட்டே எதுக்கு?"

"வெளியே நிக்குது பாருங்க கார்.. புடிச்சிருக்கான்னு பார்த்துட்டு வாங்க... நீங்களும் கிட்டப்போய் பாருங்கம்மா! ஜப்பான்காரன் தயாரிப்பு.. டேட்டி மட்டும் மூணு லகரம் கட்டியிருக்கேன்னா பார்த்துக்கங்க". பேசிக் கொண்டிருந்தவர் கோட் பையிலிருந்து டாலடிக்கும் சதுர டப்பாவைக் குமிழ் திருப்ப, மூடி தானாக மேலுயர்ந்து திறக்க உள்ளே வரிசையாய் சிங்கப்பூர் தயாரிப்பான 'மோர்' சிகரெட்.

"பார்டன்...! இங்கே சிகரெட் குடிக்கலாமா?"

அப்துல் அமைதியாக, "கூடாது" என்றார். தொடர்ந்து,

"மிஸ்டர் ஜி.ஆர்! இப்போ மதிப்புமிக்க உங்களுடைய நேரத்தையும் என் நேரத்தையும் வீணடிக்காம விஷயத்தைச் சொல்லுங்க. எனக்கு எதுக்காக கார்?"

"அட... என்னா ஸார் நீங்க? எங்க ஊருக்குக் கலெக்டரா வந்திருக்கீங்க... நான் ஒரு பெரிய மனுஷன். புது கலெக்டருக்கு ஒரு நினைவுப் பரிசாவது தர வேணாமா?"

"சரி! உங்க பரிசுக்குப் பிரதியுபகாரமா நான் செய்ய வேண்டியது ஏதாவது இருக்குமே!"

"எதுவுமே செய்யக் கூடாது".

"பொய்! எதுவுமே எதிர்பாராமலா இத்தனை பெரிய மனிதர் வீடு தேடி வந்து கார் கொடுப்பீங்க...! கமான்.. ப்ரொசீட்... உங்க டிமாண்ட் என்ன?"

"அதைத்தான் சொல்லிட்டேனே ஸார்..."

"வாட் டு யூ மீன்!"

"குழப்பமா இருக்கா? அதைச் செய் இதைச் செய்யின்னு கேட்டு ஒரு கலெக்டரைத் தேடி வரமாட்டான் இந்த ஜி.ஆர். செய்ய வேண்டாம்ன்னு சொல்றதுக்குத்தான் வருவான். ஒரு வரியிலே சொல்லட்டுமா? மேம்பாலம் கட்டறதுக்கு ஸ்டெப் எடுக்க நீங்களாமே... அதைச் செய்யக் கூடாது".

"அதைக் கட்டறதிலே உங்களுக்கென்ன ஸார் நஷ்டம்?"

"இது நல்ல கேள்வி! அந்த மெயின் ரோடுக்கு இடதுபுறமா என்னோட மில் இருக்குது தெரியுமா?"

"ஆமா... அதனாலென்ன?"

"அதனாலே என்னவா...? அங்கே பாலம் வந்தா எனக்கு எவ்வளவு பிரச்னைகள் தெரியுமா...? என் மில்லுக்கு மேலே பாலம் வந்துடும்..."

"மில்லுக்கு மேலே வராது.. உங்க காம்பவுண்டு சுவரை இன்னும் கொஞ்சம் நீங்க உள்ளே தள்ளும்படி ஆகலாம். அதற்கான நஷ்டஈடு கிடைக்கும் உங்களுக்கு".

ஜிஆரின் மூக்கு நுனியில் கோபச் சிவப்பு. வெடிகளாக வார்த்தைகளைக் கொளுத்திப் போட்டார். ஆத்திரத்தில் வெடித்தார். "யாருக்கு வேணும் அந்தக் காசு? நான் கொடுப்பேன் நூறு பேருக்கு".

"வார்த்தையிலே நெருப்பு வைக்காதீங்க ஜிஆர்! வருத்தப்படுவீங்க. இரண்டு கிலோ மீட்டர் நீளத்துக்குக் காம்பவுண்டுச் சுவரை என்னவோ சீனப் பெருஞ்சுவர் மாதிரி கட்டிப் போட்டிருக்கீங்க. வாஸ்தவம்! புறம்போக்கு நிலத்தை நாற்பது சதம் ஆக்கிரமிச்சிருக்கீங்க. எப்படி இத்தனை வருஷம் கார்ப்பரேஷன் ஆக்ஷன் எடுக்காம இருந்துச்சுன்னு ஆச்சரியமா இருக்கு..."


"தொட்டுடுவானா...? டில்லி வரைக்கும் போவேன்!" கொதிப்புடன் சொன்னார்.

நஸியா மனசுள் சன்னமாய் ஒரு தீர்மானம் வேர்விடத் தொடங்கிற்று. 'வேறு ஊருக்கு மூட்டை கட்ட வேண்டியதுதான்'.

"பாலம் வந்துச்சுன்னா முன் புறமிருக்கிற என் கோடவுன் அடியாயிரும் கலெக்டர் ஸார்! ரெண்டு மூணு டிபார்ட்மெண்டைக் கூட எடுக்க வேண்டியது வரும். அதுமட்டுமில்லை; ஒரு சரக்கு லாரிகூட வெளியேறவோ உள்ளே வரவோ முடியாது. பாலம் தடுக்கும். பக்கத்திலேயிருக்கிற ஜங்ஷனுக்குச் சரக்கைக் கொண்டு போக முடியாமக் கஷ்டப் படணும். வெளியேதான் ஒரு ப்ராஞ்சை நான் திறக்கணும்"

"உங்க வசதிக்கு அது ஒரு பெரிய கஷ்டமா ஜி.ஆர்.?"

"ஆமாம். வீவிங், ஸ்பின்னிங், வைண்டிங் டிபார்ட்மெண்ட்டெல்லாம் இங்கே! மிக்ஸிங், பினிஷிங், பேக்கிங் எல்லாம் வெவ்வேறு இடத்திலேயா... கஷ்டம் ஸார்! தோசையைத் திருப்பிப் போட வேண்டிய கட்டத்திலே பத்து கிலோ மீட்டர் தள்ளியிருக்கிற இன்னோர் அடுப்பு மேலிருக்கிற கல்லிலே வைத்துத் தயா



ரிக்கச் சொன்னா தயாரிப்பிலே தரமிருக்குமா?"

"இங்கே பாதி தோசை அங்கே பாதின்னு தயாரிப்பானேன்? மாவை மட்டும் இங்கே அரையுங்க. அடுப்பும், தோசை உற்பத்தியும் அங்கேயே நடக்கட்டும். நான் சொல்றது புரியுதா? டிபார்ட்மெண்ட்களைப் பக்குவமா பிரியுங்க. கொஞ்சம் செலவு அதிகமாகத்தான் செய்யும். அதை ஒரு பெரிய பாதிப்புன்னு சொல்லமுடியாது".

"வருஷம் பத்து கோடி அதிகப்படியா செலவாகும் ஸார்! இந்தப் பிரச்னையைத் தொடக்கூடாதுன்றதுக்காகவே எலெக்ஷன்லே எல்லா கேன்டிடேட்டுக்கும் வாரிக் கொடுத்துடுவேன்... வர்ற கலெக்டர், மேயர் எல்லாரையும் வலுவா கவனிச்சுடுவேன். நீங்க கொஞ்சம் பெரிய மனசு வச்சு..."

"உம்....."

"அதிலே பாருங்க... மெயின் ரோடிலே எங்கேயிருந்து பார்த்தாலும் கம்பீரமா, எடுப்பா ஒரு ராஜதோற்றம் கொடுக்கும் மில் கட்டடம்...! ரயில் பிரயாணிகளெல்லாம் பிரமிச்சுப் போய் வேடிக்கை பார்க்கிறது எங்களுக்கு ஒரு விளம்பரம்.. மில்லை ஒட்டி அதைவிட உசரமா பாலம் வந்துச்சுன்னா... கம்பீரமே போயிடும் ஸார் மில்லுக்கு".

"அதுபத்தி எனக்குக் கவலையில்லை மிஸ்டர் ஜி.ஆர். எனக்கு ஜனங்கதான் ராஜா...! அவங்களுக்குச் சேவை செய்யறதுக்குத் தான் எனக்கு சம்பளம்... ஸோ, நீங்க புறநகர்ப் பகுதியிலே ஓர் இடம் தேடறது நல்லது". அப்துல் சலாம் இதழ்க்கோடியில் சிரித்தபடி எழுந்தார்.

ஜி.ஆர். காதுகளில் கோடி நாகங்கள் கொத்தின வலி.

"நல்லா யோசிச்சுச் சொல்லுங்க கலெக்டர் ஸார்! நீங்க எது செய்தாலும் இந்த ஊரை விட்டுப் போகும்போது ஜிஆரை மறக்கப் போறதில்லை..."

ஜிஆர் சிக்கனமாகச் சிரிக்க, அப்துல் அலட்சியப் புன்னகையை உதட்டில் அமர வைத்தார். சொன்னார்.

"நோ... மிஸ்டர் ஜிஆர். உங்களை மாதிரி ஆள்களை ஊர்தோறும் பார்த்துகிட்டுத்தான் வரேன்... பாலம் கட்டும் முயற்சியிலே நான் வென்றாலும் தோற்றாலும் இந்த ஊர் ஞாபகம் வரும் போதெல்லாம் ஒரு குரல்தான் நினைவுக்கு வரும். ஒரு புருஷனோட அவலக்குரல் அது...! பாலம் இல்லாததாலே ஏற்பட்ட போக்குவரத்துத் தாமதத்திலே தன்னுடைய பெண்டாட்டியைப் பறிகொடுத்த அவலக் குரல் அது. அதெல்லாம் புரியாது உங்களுக்கு... சரி...! போயிட்டு வாங்க!"

●

'மூகத்துக்கு நேரா பாணம் அடிச்சிருக்கான் ஒரு பய..! ஜிஆரைத் தூக்கி எறிஞ்சி பேசியிருக்கான்...!' பற்கள் கடிபட்டன.

அப்துல் சலாமைத்தண்ணீர் இல்லாத ஊருக்கோ தண்ணீர் உள்ள வாரியத்துக்கோ மாற்றி விடலாம்தான். ஆனால் இது தாற்காலிக நிவாரணம்தான். ஒரு நாணயஸ்தன் கலெக்டராக வந்த மாதிரி இன்னொரு நாணயஸ்தன் நாடாள வந்து அவருக்குக் கட்டுப்பட மறுத்து விட்டால்? இன்று நடக்காவிட்டாலும் சில வருஷங்கள் கழித்து நடக்கலாமே!

ஒரு நிரந்தரத் தீர்வு கண்டுபிடிக்கவேண்டும்.

யோசித்தார்... சிகரெட் பற்ற வைத்து - யோசித்தார் - மில்லில் ரவுண்டு வருகையில் - ஆடிட்டருடன் பேசுகையில் - டில்லிப் பிரயாணத்தில்,

சட்டென்று வழி புலப்பட 'குஷி'யானார். 'அடடா! இது ஏன் முதல்லே தோன்றாமப் போச்சு?'

போனில் நம்பர் சுற்றி யாரையோ கூப்பிட்டார்.

'டியர்...! இலட்சியவாதி தோற்கலாம். ஆனா லட்சியம் தோற்காது!" கலெக்டர் மிருது வாய்ச் சிரித்தார்.

"குழப்பறீங்க! உங்க பாலம் கட்டும் லட்சியம் தோற்காதுன் றீங்களா?"

"அப்படிச் சொல்லலை. லட்சியம்ன்னு சொன்னது என் மனசை. அது தோற்காது".

"சுத்தமாப் புரியலை. திரும்பத் திரும்ப அடிபட்டாலும் மாற்றிக் கொள்ளாமல் இருப்பதுக்குப் பேர் இலட்சியமா?"

"கண்டிப்பா! வெட்டுப் பட்டது வேரில்லையே... கிளைகள்தானே! அது திரும்பவும் முளைக்கும். என்றைக்காவது தழைக்கும். அந்த நம்பிக்கை நாசமாகலை பேகம். என்ன முழிக்கிறே? நான் என் கடமையைச் செய்தேன்ங்கிற திருப்தி இருக்கு. அது போதும் எனக்கு".

"உங்களுக்கு மேலே இருக்கிறவர்கள் நீங்க கடமையைச் செய்ததா ஒப்புத்துக்கலையேங்க!"

"யாரு... கவர்மெண்டைச் சொல்றியா? சம்பளம் எனக்கு கவர்மெண்ட் கொடுத்தாலும் எனக்கு எஜமானர்கள் அவங்க இல்லையே! பொதுமக்கள் தான். எந்த கவர்ன்மெண்டுமே மாறக் கூடியதுதான். மாறாதவங்க ஜனங்கதான்... அவங்களுக்கான என் கடமையை நான் சரியாவே செய்திருக்கேன். வெற்றி பெற்றேனாங்கிற கேள்வி முக்கியமில்லை இதிலே! முயற்சி எடுத்தேன்ங்கிறதே வெற்றிதான். ஸோ, என்

முதலாளியோட சௌகரியத்துக்காக நானும் உழைச்சிருக்கேன். ஒரு வாதத்துக்காக, அங்கே மேம்பாலம் கட்டப்பட்டதா வச்சுக்க... செத்துப் போன அந்த கர்ப்பஸ்திரி கௌரியோட புருஷன் மனசார வாழ்த்துவானா, மாட்டானா? நான் ஒழுங்கா வேலை பார்த்ததுக்கு அதுதான் சர்டிபிகேட்! 'இனிமே ஆஸ்பத்திரிக்குப் போகும் அவசரக் கேஸ்கள் அநியாயமாத் தாமதத்தினாலே செத்துப் போகிற அபாயமில்லை. ‘என் பெண்டாட்டிக்கு வந்தது இன்னோர் உயிருக்கு நிகழாது'ன்னு அவன் ஆனந்தக் கண்ணீர் விடமாட்டானா? இதுதான் பேகம் என் பணிக்கான அங்கீகாரம்..."

உணர்ச்சிப் பெருக்குடன் பேசினார் அப்துல் சலாம். அவள் மௌனத்தை அடைகாத்தாள்

"என் நடவடிக்கைகளுக்கு எவ்வளவுதான் தடை விதிப்பாங்க? நூறு தடவை தோற்கடிச்சாலும் சலிச்சுப் போய் ஒரு நடவடிக்கைக்கு அரசாங்கம் அங்கீகாரம் தராமலா போயிடும்? அந்த ஒன்று ஏதாவது ஒரு பகுதி ஏழைக்கு நன்மை செய்யாதா? நான் நூறு தடவை போராடினதாலே தானே இந்த ஒரு வெற்றியாவது கிடைச்சது? சும்மா இருந்தால் கிடைச்சிருக்குமா? அந்த ஜிஆர் வெல்ஃபேர் மினிஸ்டரைப் பார்ப்பான்... எனக்குத் தெரியும்! நான் சிஎம்மையே பார்த்து ‘இந்த பாலத்தைக் கட்டினா கார்ப்பரேஷன் தேர்தலை தைரியமா நடத்தலாம்'ன்னு சொல்லப் போறேன். எந்த வடிவத்திலாவது ஜனங்களுக்கு நல்லது நடந்தா சரி".

"ஜனங்கள்.... ஜனங்கள்" பேகம் நெஞ்சுள் ஒருவகை எரிச்சல்.

"அவங்ககிட்டே வோட்டு வாங்கறவங்களே அவங்களுக்குப் பயப்படலையாம்..."

"நான் சம்பளம் வாங்கறேன் பேகம்....! வோட்டு வாங்கறவன் அவங்க தலைவனாகிறான். சம்பளம் வாங்கறவன் ஊழியக்காரன்".

அவள் இதழ்களைச் சாத்திக் கொண்டாள். மனசு சொல்லிற்று: ‘ஊருக்கு மூட்டைகட்ட வேண்டியதுதான்'.

•

அந்த ஜாதிச் சங்கத் தலைவர் ஆச்சரியத்தில் வாய் பிளந்தார். வியப்பில் புருவங்கள் வளைந்து கொடுத்தன.

"அம்பதாயிரத்துக்கு ஒரே செக்கா கொடுத்திருக்கீங்களே... என்னத்துக்கு ஸார்?" என்றார்.

ஜிஆர் திருவாய் மலர்ந்தார்.

"ரயில்வே பாலம் பக்கத்திலேயிருக்குதே சுடலை மாடசாமி கோயில்! பிளாட்பாரத்தை ஒட்டி ரொம்பச் சின்னதா இருக்குதில்லே.. அதைப் பெரிசா கட்டுங்க... மேலே கோபுரத்தைப் பிரம்மாண்டமா உயர்த்திக் கட்டுங்க. கும்பாபிஷேகத்துக்கு மினிஸ்டர்கிட்டே தேதி வாங்கித் தரேன்... ஓ.கே? வசூலை இன்றையிலிருந்து ஆரம்பியுங்க..."

தலைவரின் வயிற்றுக்குள் தாமரை மலர்ந்தது. சுடலை மாடசாமிக்கும், தனக்கும் நேர்ந்த அதிர்ஷ்டத்தை நினைத்து மனதுக்குள்ளே மகிழ்ச்சி கரை புரண்டது.

"ஆகட்டுங்க. அய்யா அதிர்ஷ்டக் கையாலே கொடுக்கறீங்க... இன்றைக்கே வானம் தோண்ட ஆரம்பிச்சுடுவோம்..." கையைச் சொறிந்தார்.

"அது சரிய்யா... ஆனா புதுசா வந்திருக்கிற கலெக்டர் ஏதோ பாலம் கட்டணும்ன்னு சொல்லிகிட்டிருக்காரு. அதுக்குக் கோபுரம் இடைஞ்சலா இருக்காதா? பார்த்துச் செய்யுங்க..."

"பாலம் கட்டணுமா? விளையாடறானா அவன்?" கொதித்தார் தலைவர். வர்க்க ரத்தமும் வசூல் ரத்தமுமாய்

முகத்துக்குப் பாய மூர்க்க மானார்.

"கோபப்பட்டுப் புண்ணிய மில்லை. அவன் அதிகாரம் வச்சிருக்கான்... பிளாட்பாரம் கோயிலை வச்சுகிட்டு எப் படிச் சாதிக்கப் போறீங்க... கோபுரம் கட்டாம இருக்க கோர்ட்டிலே ஸ்டே வாங்கு வான்! கோயில் இருக்கிற நிலத் துக்கே பட்டா கிடையாதில்ல... பின்னே எப்படிக் கோபுரம் கட்டுவீங்க?"

கோவிந்தராஜின் கேள்வியி லிருந்த நிஜம் நெஞ்சை நெருட, தலைவர் முகம் தொங்கிப் போனது. அவ்வளவுதானா வசூல் வேட்டை? கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாமல் போகிறதே....ச்சே!!

"இதோ பாருய்யா... சட் டத்திலே நியாயமிருந்தாலும் நமக்குச் சாதகமான ஒரு பாயிண்ட்டும் இருக்கு..."

"சொல்லுங்க...சொல்லுங்க! என்னது?"

"அந்தச் சட்டத்தை நிறை வேற்றுகிறவன் ஒரு முஸ்லிம்! பாதிக்கப்படறது உங்க ஜாதி... புரியுதா?"

தலைவர் கண்களில் பல்பு எரிந்தது. பிரகாசமாய்ச் சிரித் தார். "புரியுதுங்க. பாத்துடு வோம்... அவனுக்காச்சு, நமக்காச்சு... ஒரே இனத்து ஜனங்க திரண்டு நிற்கிறப்ப எந்தக் கோர்ட்டு என்ன செய்ய முடியுமுங்க...? பின்னிப்பிட மாட்டோமா!"

ஜீஆர் கவலையுடன் நெற்றி சொறிந்தார்.

"பப்ளிக் மாஸைக் கூட்டறது தான் உங்களோட ஒரே ஆயுதம் இல்லையா? சிதறாம ஜனங் களைப் போராட வச்சுடுவீங் களா?"

"எங்க இனத்துக்குப் பூரா வும் குலதெய்வம் சுடலை மாடன். அவன் கோயிலை வேறே மதத்துக்காரன் கட்டவிட மாட்டேன்றான். இவ்வளவு போதாதாங்க? இது வரைக்கும் எந்தக் கலெக்டரும் பாலம் கட்டணும்ன்னு சொல்லலை. இவன் மட்டும் வந்து கோயிலை இடிச்சுப் பாலங்கட்டறேன் னான்னா என்னா தில்லு இருக்கணும்! தீ பிடிக்காதா? ஜனங்களைத் திரட்டிக் கலெக்டர் ஆபீஸ் எதிரிலேயே போராடவிட மாட்டேன்? அந்த அப்துல் சலாம் ஐந்நூறு மைலுக்கு அந்தாண்டை மாற் றல் வாங்கிட்டுப் போயிடு வான் பாருங்க..."

"வெறும்போராட்டமா மட்டும் அது முடிஞ்சிடக் கூடாது. உங்க வெற்றிக்கு அடையாளமா கோபுரக் கலசம் பிரம்மாண்ட உயரத்திலே காட்சி தரணும். நான் கொடுத்த பணம் அட் வான்ஸ்தான். நான் சொல்கிற மாதிரி செய்து முடிச்சீங் கன்னா கோபுரம் கட்டறதுக்கு இன்னும் அஞ்சு லட்சம் தருவேன்".

"சொ... சொல்லுங்கய்யா... என்ன செய்யணும்?"

"போராட்டத்தின் போது வன்முறை தூள் பறக்கணும். கட்டுக்கடங்காம இருக்கணும்... போலீஸ் துப்பாக்கிச் சூடு நடக்கணும்... சுடலை மாடனுக் காக உயிர் தியாகம்கூடச்செய் யணும். எவ்வளவு செலவானா லும் சரி.. ஏற்பாடு செய்வீங் களா?"

"செய்துடுவோமுங்க... ஒரு பொதுக்கூட்டம் போட்டு இன ஜனங்களுக்கு வெறிபிடிக்க வைச்சுட மாட்டேனா?"

●

நஸியா பேகம் கணவரைக் கலவரத்துடன் பார்த்தாள். வாடல் கத்திரிக்காய் போலக் கொடுத்தார் அவர்.

அவள் கூப்பிட்டது கலெக் டரின் ஞாபக அடுக்குகளில் பதிவானதாகத் தெரியவில்லை. நெருங்கி வந்து தலை கோதி மனசுக்குச் சிக்கெடுத்தாள். அவரது இரண்டு கறுப்பு கோலிகளும் பளபளத்தன.

"ஒரு திட்டத்தோடயே ஊர் வலமா கிளம்பி வந்திருக்காங்க பேகம்! டி.எஸ்.பி பேச்சையோ என் பேச்சையோ காதிலே வாங்கலை, அந்த மூர்க்கக் கூட்டம். குறிக்கோள் எதுவுமே இல்லாம கலெக்டர் மேலேயும் போலீஸ் மேலேயும் கல் லெறிஞ்சா எவ்வளவு நேரம் தான் பார்த்துகிட்டிருக்க முடி யும்?"

"ப்ச்... வாஸ்தவம்தாங்க. தவிர்க்க முடியாத துப்பாக்கிச் சூடுதான் அது. செத்துப் போனது எத்தனை பேரு?"

"ஒரே ஆள்...! காய மடைஞ்சது அம்பது பேருக்கு மேலே.."

"அதையே நினைச்சுக்கிட் டிருக்காதீங்க. சாப்பிட வாங்க!"

"எப்படிம்மா! எப்படி முடியும்? நான் யாருக்காக இப்படி அல்லல் படறேனோ அவங்களே என்கிட்டே மோதும் போது...?"

"கூட்டப்பட்ட கூட்டங்க அது....! பைபிள்லே வருமே... தாங்கள் செய்வது இன்ன தென்று அறியாதிருக்கி றார்கள்'ன்னு" என்ற பேகம் கணவன் முகத்தில் ஜலப் பேரணி பார்த்துத் திடுக்கிட் டாள்.

"எதற்காகக் கண் கலங்க றீங்க?"

"லட்சியம் தோற்கும்போது லட்சியவாதி அழத்தானே செய்வான் டார்லிங்?"

"எ... என்ன சொல்றீங்க?"

"என்னை எதிர்த்துப் போராட்டம் நடந்தபோது வன் முறைக் கும்பலைப் போலீஸ் சுட்டதில்லையா..? அதிலே ஒருத்தன் இறந்தானே... அது யார் தெரியுமா? கர்ப்பஸ்திரி கௌரியோட புருஷன்..."

வாழ்வில் முதல் தடவையாய் குலுங்கிக் குலுங்கி அழுதார் அப்துல்சலாம்.

டாக்டர் கவியோகி பேகன். இ.ஆ.ப.

நிறைவுக் கட்டுரை !

சித்தர்கள் அனைவரைப் பற்றியும் நாம் சொல்லிவிட முடியாது. பதினெண் சித்தர் களிலும் ஒரு சிலரையே நாம் கண்டோம். அதுவும் அவர்தம் திருவுருவச் சாயல்களை மட்டுமே நாம் தரிசிக்க முடிந்தது.

மும்முடிவரம் பாலயோகி, ஷீர்டி சாயிபாபா, புட்டபர்த்தி பாபா, இமயமலைப் பாபாஜி, தக்கலைப் பீர்முகம்மது அப்பா, குமரி மாயா தேவி, புரவிபாளையம் அப்பா, பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், பிரணாபானந்தா, நாகேந்திரநாத் பாதுரி, வாசனைச் சாமி, புலிச்சாமி, தூங்காச் சாமி, உண்ணாச்சாமி, ஆனந்த மோயிமா, இலஹிரி மகராஜ், திருஊற்றுப் பட்டி சங்கரபாண்டியம் பிள்ளை இன்னும் எத்தனையோ அவதார புருஷர்களை எல்லாம் நாம் அறிந்து கொள்வது ஆத்ம லாபம் தரும். இவர்கள் எல்லாரும் மன, வாக்கைக் கடந்தவர்கள். அவர்களை விவரிக்க இயலாது. வணங்கினாலே போதும்.

விஞ்ஞான உலகில் நம்மிடையே எத்துணை பேர் நாகரிக உடையணிந்த சித்தர்கள், நம் கண்ணுக்குப் புலப்படாமல் இருக்கின்றனர்.

எவன் ஒருவன் அச்சமும் கவலையும் இன்றி ஆனந்த ரூபியாக இருக்கின்றானோ அவனே யோகி.


யோகியர்களை, முனிபுங்கவர்களைக் கண்டு, தரிசித்து, அவர்தம் சொல்லமுதம் உண்டு அவருக்குத் தொண்டு செய்வதே முத்திக்கு வழி என்று இரௌர ஆகமம் கூறு கிறது.


யோகியர்கள் நடமாடும் தெய்வங்கள்; கோயில்கள் படமாடும் தெய்வங்கள்.

முத்திக்கு என நான்கு யுக்திகள் சொல்லப் பெற்றுள்ளன.

ஒன்று: சம நோக்கு. 'பெரியோரை வியத் தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' என்று கணியன் பூங்குன்றனார் குறிப் பிடும் மன நிலை.

இரண்டு : சதானந்தமாக இருத்தல்; தூங்கன் சுவாமிகளைப் போன்று.





விக்ரமாதித்யன் கவிதைகள்

எழுதத்
தோன்றியது
எழுதினேன்

எழுதாமல்
இருக்க முடியாது
எழுதுகிறேன்.

எழுதத்தான்
தெரியும்
எழுதுவேன்

★

மலை
செய்ய முடியுமா?
மலை
செய்கிறார்கள்
மலை
மலையாக இல்லை

காடு
செய்ய முடியுமா?
காடு
செய்கிறார்கள்
காடு
காடாக இல்லை

கவிதை
செய்ய முடியுமா?
கவிதை
செய்கிறார்கள்
கவிதை
கவிதையாக இல்லை

மூன்று : விசாரணை. சத்துப் பொருளை, அசித்துப் பொருளை நீக்கி அறிதல்.

நான்கு : சாது சங்கம். இதில் சாது சங்கம் விசேஷிக்கப் பெற்றுள்ளது.

ஒரு சாதுவைக் கண்டுவந்தால் கங்கையில் மூழ்கி எழுந்த புத்துணர்வு கிட்டும்.

எம் குருநாதர் இருக்குமிடத்திலும், ஊற்றுப் பட்டி சித்தர் அடங்கி இருக்கும் கோயிலிலும் காஞ்சியிலும் இதை நாம் காணலாம். ஒரு சித்தன் இருக்கும் இடத்திலிருந்து சுமார் 2 கல் தொலைவு வரை அவனது பரிணாம உணர்வு இருக்கும். (Vibrant Radiation, Electro magnetic wave). அருகில் நெருங்க நெருங்க இது அதிகரிப்பதை உணர்வுடையோர் அறிவர்.

என் பாட்டனார் காமராசர் மாவட்டம் பட்டம்புதூர் அருணாசலம் பிள்ளை தினமும் ஒரு துறவியை வீட்டுக்கு சாப்பிட அழைத்து வருவார். என் பாட்டி 'வருகிறவன், நல்லவனா, கெட்டவனா' என்று பார்க்க வேண்டாமா என்று கேட்பார்.

'காவியுடை யணிந்தவர்கள் அனைவருமே யான் வணங்கும் சிவபெருமான்' என்பார். அவர் சொன்ன பொருள் எனக்கு இப்பொழுது விளங்குகிறது. சூதசங்கிதை, 'காவி வேடம் போட்ட அனைவரையுமே ஈசுவரனாகவே பாவிக்க' என்று கூறுகிறது. 'யார் நல்லவர், யார் கெட்டவர் என்று ஆராய நாம் யார், ஆயிரம் பேருக்கு உணவுளித்தால் அதில் ஒருத்தர் நல்லவராயிருந்தாலும் போதும்' என்பார்கள் என் மனைவியின் வளர்ப்புத் தாயார் மதுரை திருமதி குருவம்மாள். சஞ்சீவி மறந்து போக, மலையையே அனுமன் தூக்கி வந்ததுபோல்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தம் தேவாரத்தில் பாடுகிறார்.

'எவரேனும் தாமாக விலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
யுவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறனிணைந்தங் குவிந்து நோக்கி

'இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமேபேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே'

(6 ஆம் திருமுறை, திருக்கன்குப்பூர்)

சிவஞான போதம் செப்புவதும் அதுவே. மலம், இறைவன் திருவடியைச் சேரவிடாமல் தடுக்கும். மலபந்தம் நீங்க ஞானியர் கூட்டம் நாடுக. ஆலயம் அரன் என வழிபடுக என்று அறிவுறுத்துகிறது. எனவே கோயிலின் சிறப்பு.

சூத்திரம் – 12.

'தேடுசிவ் ஞானியர், நாடுஅவர் நல்வேடம்
கூடுஅவர் குழாம், ஆலயம் சிவம்என
முத்தி வந்து சித்திப் பதுவே'

— கவியோகி.


இப்பன்னிரு சூத்திரங்களையும் 1985 இல் என் குருநாதர் கோவிந்தசாமியின் ஆசிரமத்தில் ஓராண்டு குருகுல வாசம் செய்து திங்கள் ஒன்றுக்கு ஒரு சூத்திரம் வீதம் எல்லா இன, மொழி, சமயங்கட்கும் பொதுவாக எழுதப் பெற்றது – சுவாமிகளின் ஆக்ஞைப்படி.

அஞ்ஞான்று தஞ்சையைத் தலைமையிட மாகக் கொண்ட 12 மாவட்டங்களுக்கு நிலத் தீர்ப்பாய நடுவராக, கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணியாற்றி வந்தேன்.

ஆங்கிலத்தில் எழுதின் உலகம் அனைத்தும் பயன் பெறும் என்று சுவாமிகள் திருவுளம் கொண்டார்கள். அவர்கள் ஆணைப்படி ஆங்கி லத்தில் யான் எழுதியதையே தமிழ்க் கவிதை யாக்கி உங்களுக்குத் தந்துள்ளேன்.

இக்கட்டுரைகளால் விளைந்த புண்ணி யங்கள் ஸ்ரீராம் நிறுவனத்தையும் சுவாமியை யும் அமுதசுரபியையும் சாரும்.

எல்லாரும் இன்புற்று வாழ்க!



'சாதனைச் செல்வர்' ரோஜா முத்தையா

குன்றக்குடி பெரிய பெருமாள்

உண்மைதான்!

மாபெரும் முயற்சி! மகத்தான சாதனை!

ஒரு மனித ஆயுட் காலத்தின் அரிய நேரங்கள், ஆக்க பூர்வ மாகவும் அறிவு பூர்வமாகவும் அர்ப்பணிக்கப் பெற்ற அபூர்வச் செயல்!

'அருமை உடைய செயல்' என்றும், 'தூக்கம் கடிந்த செயல்' என்றும், 'செய்தற்கு அரிய செயல்' என்றும் திருவள்ளுவரால் போற்றப் பெறுகின்ற முத்திறச் செயலின் அற்புதச் சாதனை!

வியக்கிறோம்! வியந்து நயக்கிறோம்! நயந்து திகைக்கிறோம்!

வியப்பும், நயப்பும், திகைப்பும் அந்தச் சேகரிப்பைப் பார்க்கும் எவருக்கும் ஏற்படத்தான் செய்யும். எத்தகைய சேகரிப்பு?

அதிசயச் செய்திகள், அபூர்வக் கலைப்பொருள்கள், அற்புத வரலாற்றுத் தடயங்கள், ஆதியில் அச்சான அரிய நூல்கள், ஆங்கிலம் தமிழ் ஆகிய மொழிகளில் வெளியான பத்திரிகைகள், இதழ்கள், அளவிடற்கு இயலாத புத்தகங்கள்... ஆகியவற்றின் ஏராளமான தொகுப்புகள் - கடல்போலக் காணப்பெறும் பிரமிப்பை ஊட்டும் சேகரிப்பு!

ஒரு தனி மனிதரின் இடையறாத முயற்சியில் உருவான சாதனைச் சேகரிப்பு! ஆம், 'சாதனைச் செல்வர்' ரோஜா



'ரோஜா'வின் நூலகப் பகுதி

முத்தையா, தமது வாலிப வயதிலிருந்து கைக்கொண்ட அயராத முயற்சியும், அடங்காத ஆர்வமும் - தமிழகத்திலுள்ள நூல் நிலையங்களோ, பல்கலைக்கழகங்களோ பெற்றிராத பல்லாயிரக்கணக்கான அரிய புத்தகங்களை, 'கோட்டையூர்' எனும் சின்னஞ்சிறிய கிராமத்தின் பிரம்மாண்டமானதொரு வீட்டில், வரிசை வரிசையாக இடம்பெற வைத்துள்ளன!

பசும்பொன் தேவர் மாவட்டம், காரைக்குடிக்கு அருகே உள்ள கோட்டையூர், கல்வி வளர்ச்சிக்காகத் தாம் குடியிருந்த இல்லத்தையும் கொடையாக வழங்கிய வள்ளல் அழகப்ப செட்டியார் பிறந்த கிராமம். இந்தச் சிறிய கிராமத்தைத் தேடி, இந்திய நாட்டின் சில பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்கள் மட்டுமல்லாது, அயல்நாடுகளிலிருந்தும் ஆராய்ச்சி மாணவர்கள் வந்தவண்ணம் உள்ளனர். சாதனைச் செல்வர் ரோஜா முத்தையா சேகரித்து வைத்துள்ள நூல்கள் பல்வேறு ஆராய்ச்சிகளுக்குப் பெரிதும் பயனளித்து வருகின்றன.

எழுபது வயதை எட்டிப் பிடிக்க உள்ள ரோஜா முத்தையா, இன்றும் நாளொன்றுக்குப் பதினாறு மணி நேரம் சேகரிப்புப் பணியில் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபாடு காட்டி வருகிறார். திரைகடல் ஓடித் திரவியம் தேடிய நாட்டுக்கோட்டை நகரத்தார்



ரோஜா முத்தையாவின் மனைவி, மகள், உதவியாளர்

வகுப்பைச சார்ந்த முத்தையா, வாழ்வு நெடுகிலும் புத்தகங் களையும், கலைப் பொருள் களையுமே தேடித் தேடிச் சேகரித்துள்ளார். அவரது பிரம்மாண்டமான வீட்டின் ஒரு மூலையில்தான் அவரது குடும் பம் வாழ்ந்து வருகிறது! ஆனால் அவரது அாய சேக ரிப்புகள், வீட்டின் எல்லாப் பகுதிகளையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. வீட்டின் திண்ணை, முகப்பு, ஆழ்வீடு, பட்டகசாலை, சுற்றுக்கட்டு எங்கெங்கு காணினும் புத்த கங்கள்... புத்தகங்கள்... கலைப் பொருள்கள்... செய்தித் தொகுப்புகள்! 'இனி வைக்க இடமில்லை' என்ற நிலை ஏற்பட்ட பின், வீட்டிற்கு வெளியே இரண்டு கார் ஷெட்டுகளையும், ஒரு வீட்டை யும் வாடகைக்கு அமர்த்தி, தமது சேகரிப்புகளைக் குடி யேற்றி வருகிறார் ரோஜா முத்தையா.

'சேகரிப்பு' என்றால்... ஏதோ புத்தகங்களையும், கலைப் பொருள்களையும் குவித்து வைத்திருப்பதாகக் கருத வேண்டாம். ஒவ்வொரு புத்தகமும் ரோஜா முத்தையா வின் அறிவார்ந்த கண்களால் பார்க்கப் பெற்று, உள்ளீட்டுச் செய்திகள் தனித் தனியாக அட்டவணை (Index) செய்யப் பெற்றுள்ளன. அதுபோலவே அவருக்குக் கிடைத்துள்ள அனைத்துப் பொருள்களும் வகைப்படுத்தித் தொகுக்கப் பெற்றுள்ளன. அங்கே உள்ள நூல்களுக்கும், பொருள்களுக் கும் தனித் தனிச் சரித்தி ரங்களை உருவாக்கி வைத்துள் ளார் சாதனைச் செல்வர் ரோஜா முத்தையா.

நூல்களை அட்டவணை செய்து பாதுகாப்பதுபோல் பத்திரிகைகளையும், இதழ் களையும் அட்டவணை செய்ய வும் வேண்டும்; பாதுகாக்கவும் வேண்டுமென 1950 இல் அமெரிக்கா முடிவெடுத்தது. அதற்கு முன்னமேயே ரோஜா முத்தையா பத்திரிகைளிலும், இதழ்களிலும் இடம்பெற்ற பல்வகையான இலக்கிய, செய்திக் கூறுகளை வகுத்தும், பகுத்தும் தொகுத்துள்ளார். இதற்கு எடுத்துக்காட்டாக... 'திருமணம்' என ஒரு தலைப்பை எடுத்துக் கொண் டால், கடந்த இருநூறு ஆண்டு களாகத் திருமணம் பற்றி எந்த எந்தப் பத்திரிகையில், எவ்வெப்போது திருமணம் பற்றிய செய்திகள் இடம் பெற் றுள்ளனவென்று ஒரு செய்தித் தொகுப்பைச் சாதனைச் செல்வர் உருவாக்கி வைத் துள்ளார். பத்திரிகைகளில் மட்டுமல்லாது, நூல்களிலும் இச்செய்தி எங்கெங்கு இடம் பெற்றுள்ள தென்பதைப் பளிச் செனக் கூறுதற்கு ஒரு பட்டியல் தயாராக உள்ளது. அட்டவணையில், பட்டியலில் இடம்பெற்ற அனைத்துப் பத்தி ரிகைகளும், நூல்களும் பத்திரப் படுத்தி முறையாக அடுக்கி வைக்கப் பெற்றுள்ளன.

ரோஜா முத்தையாவின் 'நினைவாற்றல்' நமக்குப் பிர மிப்பை ஊட்டுகிறது. 'உப நயனம்' செய்து கொள்ளாது, இறைவன் அருளிய 'அசல்' நயனத்தாலேயே இன்றுவரை பார்த்தும், படித்தும் வருகின்ற ரோஜா முத்தையா, "கண்ணாடி அணிந்து கொண்டதில்லை" எனப் புன்னகைக்கும்போது நமக்குப் பொறாமையாக உள்ளது!

சேகரிப்பில் சில அரிய நூல் களைப் பார்த்து அதிசயிக் கிறோம். 'தமிழ்த் தாத்தா' உ.வே.சா.வின் முதல் பதிப் பான 'மத்யார்ஜுன மான்மியம்'; மகாகவி பாரதி நூல்களின் முதல் பதிப்புகள்; 1857 இல் ஜி.யு.போப் பதிப்பித்த 'இலக் கண நூல்'; 1879 ஆம் ஆண்டு ஜி.பரமேஸ்வரன் பிள்ளை எழுதிய 'லண்டன், பாரிஸ் நக ரங்களின் விநோத சரித்திரம்'; சைவ எல்லப்ப நாவலர் 1840 இல் வெளியிட்ட அருணாசல புராணம்; 1919க்கு முன்னர் வெளியான மகாத்மா காந்தி சதகம்; 1920 இல் காந்தி மகாத்மாவுக்கு முத்துகிருஷ்ண பிள்ளை என்பவர் எழுதிய

கண்டன நூல்; 1921 இல் வெளியான காந்தி கலித்துறை; 1884 இல் வெளியான பவலூர் புராணம்; 1890 இல் வெளியான நளச்சக்கரவர்த்தி கதை; 1874 இல் வெளியாகியுள்ள தமிழ் 'ஒக்கபிலரி'; 1850 இல் வெளி யிட்டுள்ள மஸ்தான் பாடல்கள்; உ.வே.சா. 1887 முதல் பதிப் பித்த அனைத்துத் தமிழ் இலக்கியங்களின் முதல் பதிப்புகள்; பெரிய புராணம் பற்றி யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் எழுதி வெளியிட்ட 14 நூல்களின் முதல் பதிப்புகள்; 1840 இல் வெளியான 'கலிங் கத்துப் பரணி'; தமிழில் வெளி யாகியுள்ள 18 கீதைகள்; 1828 ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றுள்ள தாண்டவராய முதலியார் 'இலக்கண வினாடி வினா'; 'கம்பராமாயணம்' பல பதிப்புகள்... இப்படி எழுதிக் கொண்டே போகலாம்! ரோஜா முத்தையாவின் சேகரிப்பில் மிகமிகப் பழைமையான நூலாகத் தமிழில் திகழ்வது – 'அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி'! இந்நூல் 1804 ஆம் ஆண்டு கொழும்பில் அச்சாகி உள்ளது.



புத்தகங்களின் உருவாக்க மும், அமைப்பும், வெளியீடும் பார்க்கப் பார்க்க ஆச்சரியமாக உள்ளன! திருவண்ணாமலை பற்றி சைவ எல்லப்ப நாவலர் எழுதிய 'அருணாசல புராணம்' 300 பிரதிகள் தயாரிக்கப் பெற்றுள்ளன. அதன் ஒவ் வொரு பிரதியிலும், ஓர் ஓவியரைக் கொண்டு வரையச் செய்த திருவண்ணாமலை வண்ண ஓவியம் இடம் பெற் றுள்ளது. அந்தக் காலத்தில் வண்ணச் சித்திரங்களை அச்சில் உருவாக்க இயலாத காரணத்தால் இந்த ஏற்பாடு!

திருவாசகத்தை அறிஞர் ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, நூலாகப் பதிப்பித்து வெளியிட ரூ. 500 தேவைப்பட்டுள்ளது. 1897 இல் சைவச் செம்மல் ராம. சுப்பு ஐயர், இலண்டனிலிருந்து வெளியிட உள்ள திருவாசக ஆங்கில நூலுக்குக் கணிசமான நன்கொடை அளிக்குமாறு தமி ழன்பர்களை வேண்டியுள்ளார். தமிழன்பர்களின் நன்கொடை யால் திருவாசகம் ஆங்கிலத்தில் உருவாக்கம் பெற்றுள்ளதை அறிகிறபோது, உள்ளார்ந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது.

சங்க காலத் தமிழ் இலக்கி யங்கள், ஓலைச் சுவடியி லிருந்து புத்தக உருவம் பெற்ற முதற் பதிப்புகளின் காலங்கள் தமிழறிஞர்களால் மாறுபட்டும், வேறுபட்டும் கூறப்பெறு கின்றன. கோட்டையூர் ரோஜா முத்தையாவின் சேகரிப்பை ஒருமுறை பார்த்துவிட்டால், இந்த மாறுபாடோ, வேறுபாடோ தோன்ற வழியில்லாது போய் விடும். ஏறத்தாழ அச்சு இயந் திரத்தின் துணை கொண்டு பதிப்பிக்கப் பெற்ற பெரும் பான்மையான தமிழ் நூல்களின் முதற்பதிப்பு இங்கே இடம் பெற்றுள்ளது.

இந்தியர்கள் அச்சகங் களின் உரிமையாளர்களாக இருக்கக் கூடாதென்றும், புத் தகமோ, பத்திரிகையோ இந்தி யர்கள் அச்சிட்டு வெளியிடக் கூடாதென்றும் 1835 ஆம் ஆண்டு வரை, ஆங்கிலேய ஏகாதி பத்திய அரசு தடை விதித் திருந்தது. இந்தத் தடை மெக் காலே பிரபுவால் நீக்கப்பட்ட பின், இந்திய மொழிகள் பலவற்றிலும், வேகத்துடனும் தாகத்துடனும் பல நூல்கள் வெளிவந்தன. தமிழ்மொழியில் திருக்குறள், ஆறுமுக நாவலரால் வெளியிடப்பெற்ற சமயக் கட்டுரைகள், உ.வே.சா. வின் உரை விளக்கப் பதிப் புகள், சபாபதி முதலியார் உரையுடன் வெளியிட்ட சீவக சிந்தாமணி, திருவிளையாடல் புராணம் ஆகிய அரிய நூல் களைத் தேடிப் பிடித்துத் தமது சேகரிப்புக் கடலில் சங்கம மாக்கி உள்ளார் ரோஜா முத்தையா.

காந்தியடிகள் பற்றிய நூல் தொகுப்பைக் காண்கின்ற போது, கண்கள் விரிய நமது புருவங்கள் நெற்றி மேட்டை எட்டிப் பார்க்கின்றன. காந்திய நிறுவனங்கள் கூடப் பெற்றிராத அற்புத நூல்கள் பல இங்கே இடம் பெற்றிருப்பதால், காந் தியம் பற்றி ஆய்வு செய்கின்ற

அறிஞர் பலர் கோட்டையூர் ரோஜா முத்தையாவின் அதிசய இல்லத்தைத் தேடி வருகின்றனர். 1939 இல் காந்தியடிகளின் எழுபதாவது பிறந்த நாளை நினைவில் கொண்டு, ஆங்கிலக் கட்டுரைத் தொகுப்பு, சர்வபள்ளி இராதாகிருஷ்ணனால் காந்தியடிகளிடமே நேராக வழங்கப்பட்டுள்ளது. இதன் தமிழ் மொழிபெயர்ப்பு, பர்மாவின் தலைநகர் இரங்கூனில் அச்சாகி உள்ளது. 1941 ஆம் ஆண்டு 'புதுமலர்ச்சி' பதிப்பகத்தில் சாமிநாத சர்மாவால் வெளியிடப் பெற்ற இந்நூலை, மிகுந்த முயற்சியில், தமது சேகரிப்பில் இடம்பெற வைத்ததாகக் கூறுகிறார் ரோஜா முத்தையா.

இலத்தீன் மொழியில் திருக்குறளை மொழிபெயர்ப்புச் செய்த அறிஞர் டாக்டர் கிரவுல் (Dr. Graul) கைவல்ய நவநீதத்தை ஜெர்மன் மொழியில் மொழியாக்கம் செய்துள்ளார். இந்நூலை நம்மிடம் கொடுத்து, ஜெர்மன் மொழியின் வரிவடிவத்தைப் பாருங்களெனச் சொல்கிறார் ரோஜா முத்தையா. அந்நூலை அங்கே இங்கே புரட்டிப் பார்த்துவிட்டு, அவரிடமே கொடுத்து விடுகிறோம்! வேறென்ன செய்ய?

தமிழ்மொழியில் மட்டுமல்லாது, ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன் போன்ற அயல்நாட்டு மொழிகளிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் உதய காலத்தில் முதற்பதிப்புகளாக உருவெடுத்த அரிய நூல்கள் சேகரிப்பில் இடம் பெற்றுள்ளன.

நூல்கள் ஒரு பக்கம் இருக்கட்டும்! பத்திரிகைகள், இதழ்களின் சேகரிப்பை முழுமையாகப் பார்ப்பதற்கு ஒரு முழுப் பகல் தேவைப்படுகிறது. ஆரம்பித்து நின்று போனவை... தொடர்ந்து வெளியாகி வருபவை... அப்பப்பா... அது ஒரு சமுத்திரம்! அவற்றை முறையாகப் பட்டியலிட்டு அடுக்கி வைத்திருக்கும் ரோஜா முத்தையாவின் மூளைக்கு ஒரு முத்தம் கொடுக்கலாம் போலிருக்கிறது! தமிழ்நாட்டில் வெளியான அனைத்துப் பத்திரிகைகளும், இதழ்களும் முதல் பிரதியிலிருந்து இன்று வெளியானது வரை இடம் பெற்றுள்ளன. பத்திரிகைகளிலும், இதழ்களிலும் இடம் பெற்றுள்ள கட்டுரைகள், கதைகள், செய்திகள் ஆகியவற்றை அட்டவணை இட்டுள்ள அருமை – ரோஜா முத்தையாவுக்கே உள்ள தனித் திறமை! தனிப் பெருமையும்கூட!

'சாதனை என்றால் இது வல்லவோ சாதனை' என ஒவ்வொரு கட்டத்திலும் நம்மை நினைக்க வைத்துத் திகைக்க வைக்கும் ரோஜா முத்தையாவை அடிக்கடி கூர்ந்து பார்த்துக் குதூகலிக்கிறோம்! மனிதர் அசகாய சூரர்! நம்மிடமிருந்து வெளிப்படும் புகழ் மொழிக்கோ, போற்றுதல் மொழிக்கோ... ம்.. கொஞ்சமும் அசைந்து கொடுப்பதில்லை! முகபாவத்தில் எவ்வித மாறுதலையும் காட்டுவதும் இல்லை.

புத்தகங்கள், மட்டுமல்ல; பத்திரிகைகள், இதழ்கள் ஆகியவை மட்டுமல்ல! அச்சு இயந்திரம் ஏறி வந்த அனைத்தையும் சேகரித்து வைத்துள்ளார் அதிசய மனிதர் ரோஜா முத்தையா. திருமண அழைப்புகள், சினிமா நோட்டீஸ்கள், நாடக விளம்பரங்கள், சுவரொட்டி விளம்பரங்கள், அறிக்கைகள், கூட்ட அழைப்புகள், இரசீதுகள், பிராமிசரி நோட்டுகள், டிமாண்ட் டிராப்டுகள், வங்கி உண்டியல்கள்... இப்படிப் பல்வேறு அரிய சங்கதிகள் மலைபோலக் குவிந்துள்ளன – எல்லாம் முறையாக அட்டவணையிட்டு! இவற்றின் உருவும், உள்ளீட்டுச் செய்திகளும் – பத்தொன்பது இருபது ஆகிய இரு நூற்றாண்டுகளில் தமிழகத்து வாழ்வையும் தாழ்வையும் தெளிவாய்ப் புலப்படுத்துவனவாய் உள்ளன. ஒவ்வொரு வகையில் இவை ஆராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயனளிக்கக் கூடியவை.

ஸ்டாம்புகள், கார்டு, கவர், கடிதங்கள், கைவண்ணத்தில் உருவான கலைப் பொருள்கள், மரங்களால் ஆன கலை வடிவங்கள், சிற்பங்கள்...! மனிதர் ஒன்றையும் விட்டுவைக்கவில்லை. தேடித் தேடி, அயராது முயன்று, அனைவரையும் 'அருமை உடைய செயல்' என ஆச்சரியப்பட வைத்துள்ளார்.

"இவற்றைப் பாதுகாப்பது சிரமமமான ஒன்றல்லவா?" எனப் பரிவுடன் வினவிய போது, "ஐயோ! அதை ஏன் கேட்கிறீர்கள்? சேகரம் செய்வது எனக்குக் கஷ்டமாத் தோணலை! பாதுகாப்புத்தான் இப்போ பரம கஷ்டமாக இருக்கு! பூச்சிகளிடமிருந்து புத்தகங்களைப் பாதுகாக்க நான் படுகிற பாடு... பெரும் பாடு. தனி மனிதனாய் நான் என்ன செய்ய? இவற்றைப் பாதுகாக்காது போனா, எனக்கு மட்டுமா நஷ்டம்? நம்ம தேசத்துக்கே நஷ்டமில்லையா?" எனக் கேட்கிறார்.

"ஆமாம்! மாபெரும் நஷ்டந்தான்" எனத் தலையசைக்கின்றோம்.

தமிழகமெங்கும் உள்ள பழைய புத்தகக் கடைகளைத் தேடிச் சென்று, பல அரிய நூல்களைக் கணிசமான தொகை கொடுத்து வாங்கி வந்துள்ளார். "கற்பக விருட்சமாகக் காட்சி தந்த சென்னை மூர்மார்க்கெட், கரிந்து கனவாகப் போய்விட்டதே!" எனக் கலங்குகிறார் ரோஜா முத்தையா. பன்னூறு நூல்கள் மூர்மார்க்கெட் புத்தகக் கடை

நாட்டில் உதயமாகும் பல தொழில்களுக்கு மதருஸ் ரி:.பைனரீஸ் ஒரு தாயாக இருந்து வளர்க்கிறது



தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள்களை அளிப்பதுடன் உற்பத்திக்கு உதவும் வண்ணமும் விளங்குகிறது எம்.ஆர்.எல்.

பொறுப்புள்ள நல்ல குடிமகன் என்ற வகையில், வெவ்வேறு இடங்களில் பல்வேறு தொழில்களை நிறுவும் இந்த நிறுவனம், இன்று ஆண்டு ஒன்றுக்கு 1,300 கோடி ரூபாய்க்கும் அதிகமான வருவாயை ஈட்டிக் கொண்டிருக்கிறது.

இன்று எம்.ஆர்.எல். மூலம் மணலி மற்றும் சுற்றுப்புற பகுதிகள் மாபெரும் தொழில் வளர்ச்சி கண்டிருப்பதைக் காணலாம்.

எம்.ஆர்.எல். அன்றாட வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் இடம் பெற்றுள்ளது.

உரத் தொழிலில் எம்.ஆர்.எல்.

உரங்களை தயாரிப்பதற்கு முக்கிய பொருளான நாஃப்தாவை அருகில் உள்ள மிகப் பெரிய உரத்தொழிற்சாலைக்கு வழங்குகிறது எம்.ஆர்.எல்.

டிடெர்ஜெண்ட் தொழிலில் எம்.ஆர்.எல்.

சிந்தடிக் டிடெர்ஜெண்ட் தொழிலில் மிக அதிக அளவில் உபயோகப் படுத்தப்படும் ரசாயனப் பொருள் லீனியர் ஆல்கைல் பென்ஸீன் ஆகும். இதைத் தயாரிக்கத் தேவையான மூலப் பொருளான கெரசினை வழங்குகிறது எம்.ஆர்.எல்.

பாலியூரித்தேன் ஃபோம் தொழிலில் எம்.ஆர்.எல்.

17,000 டன் உற்பத்தித் திறன் கொண்ட எம்.ஆர்.எல்-லின் புரோப்லின் தயாரிக்கும் பிரிவு, பாலியால் உற்பத்தி செய்யும் பல தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருளை அளிப்பதால், யூரித்தேன் ஃபோம் மற்றும் மெத்தைகள் தயாரிக்க உதவும்.

சால்வெண்ட் தொழிலில் எம்.ஆர்.எல்.

மணலியில் உள்ள தொழிற்சாலைகள் எம்.ஆர்.எல். வழங்கும் பியூட்டின்-2ஐக் கொண்டு மீதைல் ஈதைல் கீட்டோன் என்ற சால்வெண்ட் தயாரிக்கும். இது பெயிண்ட், மெழுகு மற்றும் சுத்திகரிப்பு ஆலைகளுக்குப் பயன் படுவதுடன் பல ரசாயனப் பொருள்கள் தயாரிக்கவும் ஏதுவாகிறது.

விசேஷ ரசாயனப் பொருள்கள் தொழிலில் எம்.ஆர்.எல்.

எம்.ஆர்.எல்-லின் ஐசோ-பியூட்டிலின்களைக் கொண்டு பாலி-பியூட்டீன்கள் தயாரிக்கப் படும். இது ஜெல்லி நிரப்பிய கேபிள்கள், மற்றும் விவசாயத்திற்கான ரசாயனப்பொருள்கள் மற்றும் லூப் அடிட்டிவ்களுக்குப் பயன்படும்.

அரொமேட்டிக் தொழிலில் எம்.ஆர்.எல்.

கூட்டுத்துறையில் எம்.ஆர்.எல். விரைவில் துவங்க இருக்கும் பிரம்மாண்டமான அரொமேட்டிக்ஸ் தொழிற்சாலை, P.T.A., ஆர்த்தோ-சைலின், பென்ஸீன் ஆகியவற்றைத் தயாரிக்கும். இவற்றைக் கொண்டு பாலியஸ்டர் துணிகள் முதல் பிளாஸ்டிக் பாட்டில்கள் வரை அன்றாடம் உபயோகிக்கும் பல்வேறு பொருள்கள் தயாரிக்கப் படுகின்றன.

லூப் அடிட்டிவ் தொழிலில் எம்.ஆர்.எல்.

எம்.ஆர்.எல். அமெரிக்காவின் ஷெவ்ரான் நிறுவனத்துடன் இணைந்து 15,000 டன் உயர்தர லூப் அடிட்டிவ்களைத் தயாரிக்க இருக்கிறது. இவை மசக்கெண்ணெயின் தரத்தை உயர்த்தும்.

பாரம்பரிய தொழிலில் எம்.ஆர்.எல்.

காவிரிப் படுகையில் ரூ.124 கோடி மூலதனத்தில் புதிய ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைக்க இருக்கிறது. இதனால் இப்பகுதியில் தொழில் வளர்ச்சியும், வேலை வாய்ப்பும் பெருகும்.

இன்று, எம்.ஆர்.எல். என்றால் எண்ணெய் மட்டுமல்ல...அதற்கு மேலும்!

MRL

மதராஸ் ரிஃபைனரீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் :
480 அண்ணா சாலை
நந்தனம், சென்னை 600 035.

R K SWAMY/MRL/7749

லிருந்து வாங்கி வந்தவை ம்.

"முத்தையா என்ற பெய ன் ரோஜா ஒட்டிக் கொண் ருக்கிறதே?" என்ற நமது ள்விக்குத் தமது இளமைக் ல வாழ்வைச் சற்றே த்துக் கூறுகிறார் சாதனைச் ல்வர்.

இளைஞர் முத்தையாவின் ல்லத்திற்கு அருகே குடி ந்த ஓவியர் ஒருவர் த்தையாவிற்கு ஓவியக் கலை ல் ஓர் ஆர்வத்தை ஊட்டி ருக்கிறார். அந்த ஆர்வத் யும், ஓவியர் அளித்த சிறு யிற்சியையும் அடி முதல்க ாகக் கொண்டு, பால்ய பதில் சென்னைக்குச் சென்ற த்தையா, 'ரோஜா ஆர்ட்ஸ்' ன்றொரு நிறுவனத்தைச்சிறிய ளவில் உருவாக்கி 'ஸைன் ார்டு'கள் எழுதித் தரும் ணியில் இறங்கினார். எனவே ராஜா ஆர்ட்ஸ் முத்தையா' னப் பலராலும் அழைக்கப் பற்றுப் பின் 'ரோஜா த்தையா' எனக் கூறிப்பிடத் தாடங்கி விட்டார்களாம். எப் டியோ 'ரோஜா' அவரது யரைக் கெட்டியாகப் டித்துக் கொண்டுவிட்டது!

சன்னையில் தங்கியிருந்த ால்ய வயதிலேயே முத்தையா ந்தகங்களை நேசிக்கத் தாடங்கி உள்ளார். அந்த சமே பாசமாக உருவெடுத்து ாழ்வு முற்றும் பற்றிக் காண்டது! ரோஜா முத்தையா ற்கு வாழ்க்கைத் துணை க வந்த அவரது மனைவி சகரிப்புத் துணையாகவும் ளங்கி வருகிறார்! முத்தையா ற்கு ஒரு மகனும், ஒரு களும் உள்ளனர். இருவருக் ம் திருமணம் ஆகவேண்டும். கள், தந்தையின் சாதனை யப் பெருமிதமாக எண்ணி கிழ்வதோடு, பணியிலும் ங்கேற்று வருகிறார்.

இந்திய நூல் நிலையங்கள் லவற்றிற்கும், அயல் நாட்டு நூல் நிலையங்கள் பலவற் றிற்கும் அரிய நூல்கள் சில வற்றை உரிய தொகை பெற்றுக் கொண்டு உவந்து அளித்துள் ளார் முத்தையா. ஒவ்வொரு நாளும் உள்நாட்டிலிருந்தும் அயல் நாடுகளிலிருந்தும் நூல்கள் பற்றிய விசாரணைகள் வந்தவண்ணமுள்ளன. அவற் றுக்கு உடனுக்குடன் பதில் எழுதும் வழக்கத்தை மேற் கொண்டிருக்கும் சாதனைச் செல்வர், நேராகக் கோட்டை யூருக்கே வந்து, பத்து நாள்கள் பதினைந்து நாள்க ளென இந்தச் சேகரிப்புக் கடலில் மூழ்கித் திளைத்த அயல்நாட்டு அறிஞர்களின் போற்றுதலையும், வாழ்த்து களையும் நாளும் பெற்று வரு கிறார். இலண்டன் பிரிட்டிஷ் மியூசியத்தின் உதவி நூலகர் டாக்டர். ஏ.கௌர், ரோஜா முத்தையாவுக்கு எழுதிய கடி தத்தில் – "யுனஸ்கோ நிறுவனத் தின் ஆதரவில் இயங்கி வரும் உலகத் தமிழாராய்ச்சி நிறு வனம் உங்கள் அரிய கரு வூலங்களை நியாயமாக மதிப் பிட்டு, நியாயமான தொகை அளித்து, சென்னைக்குக் கொண்டு வந்து பாதுகாக்கு மெனில், என்றென்றும் தமிழ் அறிஞர்களுக்கும், தமிழ் ஆராய்ச்சியாளர்களுக்கும் உரிய பயனளிக்கும். அப்படி இல் லாது, பெருந்தொகை அளிப்ப தற்காக ஐரோப்பிய நாடு களுக்கோ, அமெரிக்க நூல் நிலையங்களுக்கோ சேகரித்த நூல்களை அனுப்பி வைத்தால், உங்கள் ஒப்பற்ற சேவை உங்கள் நாட்டிற்குத் தேவைப் படாது, பயனில்லாது போய் விடும்" எனக் குறிப்பிட்டுள் ளார்.

தமது சேகரிப்புகள் அனைத் தும் என்றென்றும் பாது காக்கப்பட வேண்டுமென்றும், தமிழ் நாட்டுக்குப் பயனளிக்க வேண்டுமென்றும் ஒரு தாகத் துடன் கூறுகிற முத்தையா, தனி யொருவரால் இவ்வாறு இதைத் தொடர்ந்து காப்பாற்ற இயலாதே என ஏக்கமாகவும் குறிப்பிடுகிறார்.


ரோஜா முத்தையாவின் தாகத்தையோ, ஏக்கத்தையோ தமிழக அரசோ, தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங் களோ கண்டு கொண்டதாகத் தெரியவில்லையே! ஒரு தனி மனிதர், தமது ஆயுள் காலத் தையே அர்ப்பணித்து உரு வாக்கிய மாபெரும் சாத னையை உரிய வகையில் மதிக்க இங்கு எவருக்கும் தெரியவில்லையே? ஒன்றுக்கும் உதவாத அற்ப விளம்பரங் களுக்குக் கோடி கோடியாகச் செலவிடும் அரசாங்கம், என் றென்றும் வைத்துப் போற்றத் தக்கப் புகழார்ந்த சாத னையைப் புரிந்து கொள்ளக் கூட இல்லையே? பத்திரிகை களின் வாயிலாகவும், இதழ் களின் வழியாகவும் கடந்த பத்தாண்டுக் காலமாகப் பலரும் வேண்டிப் பார்த்தும் பயனொன் றும் விளைய இல்லையே? இந்த அற்புதச் சேகரிப்பின் அரு மையை உணர்ந்த தஞ்சாவூர் தமிழறிஞர் டி.என். ராமச் சந்திரன், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை அணுகி, இதன் ஏற்புக்கும், பாதுகாப் புக்கும் வேண்டியுள்ளார். வேண்டியது வேண்டியபடியே உள்ளது! எதுவும் நடந்த தாகவும் இல்லை! எவரும் ரோஜாவை அணுகியதாகவும் தெரியவில்லை!

"இந்த நூலகப் பேரா லயத்தை உரிய வகையில் பாதுகாக்காவிடில், எனக்கு ஓர் இழப்புத்தான்; ஆனால் தமிழ கத்திற்கு அது பேர் இழப்பு!" என வருந்துகிறார் ரோஜா முத்தையா.

ஃ

உண்மைதானே?

முதுமையிலும் இன்பமாக வாழலாம்



மூப்பியல் நிபுணர்
டாக்டர் வி.எஸ். நடராசன்

ஓயாது உழைத்து உடலும் உள்ளமும் சோர்ந்து நலிவுற்ற அறுபது வயதுக்கு மேலுள்ள வயோதிகர்கள், 'தங்களுக்குச் சுமையாக இருக்கிறார்கள்' என்று கருதுபவர்கள் நம்மிடையே உள்ளார்கள். பாயும் படுக்கையுமாக உள்ள வயோதிகர்களுக்குப் பிள்ளைகளும் உறவினரும் எவ்வளவு பணிவிடைகளை முழு மனத்துடன் செய்தாலும் 'தாங்கள் பிறருக்குச் சுமையாக இருப்பதாகக் கருதி' வருந்தும் முதியோர்களும் உண்டு.

முதியோர் தொடர்புடைய சிக்கல்களுக்கும் நோய்களுக்கும் எவ்வாறு தீர்வு காணலாம் என்பது பற்றி, சென்னைப் பொது மருத்துவ மனையில் பணிபுரியும் மருத்துவ நிபுணர் டாக்டர் வி.எஸ். நடராசன் அவர்களுடன் ஒரு கலந்துரையாடல் நிகழ்த்தினோம் :

✧ **முதியோர் நலத்துறையை ஒரு தனித்துறையாகத் தேர்ந்தெடுத்தமைக்கு ஏதேனும் காரணம் உண்டா?**

உண்டு. நான் 1968 ஆம் ஆண்டு எம்.டி. முடித்து விட்டுச் சென்னைப் பொது மருத்துவ மனையில் உதவிப் பேராசிரியனாகப் பணி புரிந்து வந்தேன். அப்போது வாழ்க்கை முழுவதும் தன் பிள்ளைகளுக்காவும் குடும்பத்திற்காகவும் ஓயாமல் உழைத்துப் பாடுபட்ட முதிய நோயாளிகள் மீது நான் தனிக் கவனம் செலுத்தினேன். அதை அறிந்த என் மருத்துவக் குருநாதர் டாக்டர் திரு ஏ.எஸ். அண்ணாமலை அவர்கள் 'மூப்பியல் மருத்துவத் துறையில்' சிறப்புப் பயிற்சி பெற என்னை இங்கிலாந்துக்கு அனுப்பப் பரிந்துரை செய்தார். விண்ணப்பத்தில் "இந்தத் துறையில் பயிற்சி எடுத்து முடிந்ததும், நான் என் தாய் நாட்டு மக்களுக்குப் பணிபுரிவேன்" என்று குறிப்பிட்டிருந்தேன். அவர்கள் என் தாய்நாட்டுப் பற்றைப் பாராட்டித் தேவைக்கு அதிகமாக இட ஒதுக்கீடு செய்து என்னைச் சேர்த்துக் கொண்டார்கள். நேர்முகத் தேர்வே இல்லாமல் எனக்கு இடம் கிடைத்தது. U.K (சௌத் ஆம்ப்டன்)இல் 1974 முதல் 78 வரை, இத் துறைக்கான சிறப்புப் பயிற்சி பெற்றேன். M.R.C.P (U.K) என்ற பட்டமும் பெற்றேன்.

✧ **முதியோர்களுக்கான இந்த வார்டு எப்போது தொடங்கப் பெற்றது?**

23.3.88இல் அரசு அங்கீகாரத்துடன் இந்தத் தனி வார்டு அறுபது வயதுக்கு மேற்பட்ட வயோதிக நோயாளிகளுக்கெனத்தொடங்கப்பெற்றது. வார்டு எண் 52. இதில் பத்துப் படுக்கைகள் உள்ளன. மதுரை, கோவை, ஆந்திரா முதலான இடங்களிலிருந்து இங்கே வந்து சிகிச்சை பெற்றுள்ளார்கள்.

✧ **இந்தியாவிலேயே இங்கு மட்டும்தான் முதியோர்களுக்காகத் தனி வார்டு உள்ளதா?**

பம்பாய் போன்ற முக்கிய நகரங்களிலும் முதியோர்களுக்குப் பொதுவான சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. ஆனால், இத்துறையில் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ள என் தலைமையில் தனி வார்டாகச் செயல்படுவது இங்கு மட்டுமே!

✧ **தங்கள் தலைமையில் இயங்கும் மருத்துவர் குழு...**

என்னிடம் பயிற்சி பெற்ற டாக்டர் சாந்தி ரவீந்திரன், டாக்டர் கிருஷ்ணசாமி, இயன்முறை முடக்கியல் (பிசியோதெரபி) டாக்டர் பசுபதி ஆகியோர் எனக்கு உதவியாக உள்ளனர். திருமதியர் கௌசல்யா சாரதி, லட்சுமி காந்தம், கிரேஸ் அன்னாள் ஆகிய செவிலியரும் உதவுகின்றனர். திருமதி சுப்புலட்சுமி, தட்டெழுத்து உதவியாளர். அனைவருமே முதிய நோயாளிகளிடம் முகம் சுளிக்காமல் அன்புடன் உதவும் சேவை மனப்பான்மை உடையவர்கள்.



மூப்பியல் துறை நிபுணர்
டாக்டர் வி.எஸ். நடராஜன்.

✧ புற நோய்ப் பிரிவில் நோயாளிகளுக்கு எவ்வாறு உதவுகிறீர்கள்?

புற நோய்ப் பிரிவு வார்டு 69க்கு, திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் நோயாளிகள் வருகிறார்கள். அவர்கள் நலன் கருதி இரண்டு வாரங்களுக்கு மருந்து கொடுத்து அனுப்புகிறோம்.

✧ முதுமையில் என்னென்ன நோய்கள் தாக்குகின்றன?

முதுமையில் பெண்களைவிட ஆண்களே நோய்த் தாக்குதல்களுக்கு ஆளாகிறார்கள். உயர் குருதி அழுத்தம், இதய நோய், இரைப்பை. குடல். ஈரல் நோய்கள், நீரிழிவு,



தன்னுடைய அலுவலக ஊழியர்களுடன்...

பக்கவாதம், மூட்டுவலி, எலும்பு தொடர்பான நோய்களுக்கு ஆளாகிறார்கள். பெண்களைக் கருப்பைக் கட்டி, கருப்பை கீழிறங்குதல், சிறு நீர்ப்பைக் கோளாறுகள். மார்பகப் புற்று நோய், உடல் பருமன், மாதவிடாய் பற்றிய நோய்கள் தாக்குகின்றன. தக்க சமயத்தில் மருத்துவரை அணுகினால் நோய்களிலிருந்து விடுபடலாம்.

✧ முதியவர்களுக்கு மனநோய்ப் பாதிப்பு ஏற்படுவதை எவ்வாறு தீர்க்கிறீர்கள்?

சமூகப் பொருளாதார நிலை, உடல் நல மாறுதல்கள், தாம் மற்றவர்க்குச் சுமை என்று வருந்தி, தம் மீதே நம்பிக்கை குறைவதால் மனத் தளர்ச்சி, மூளைத் தளர்ச்சியினால் அறிவுத் திறன் வீழ்ச்சி, மனச் சிதைவு முதலியவற்றால் முதியவர்கள் மனநோய்க்கு ஆளாகிறார்கள். மூப்பியல் துறையில் மனத் தத்துவ ரீதியில் ஆறு மாதங்கள் நான் சிறப்புப் பயிற்சி பெற்றிருப்பதால், மன நோயாளிகளிடமும் அவர்களின் உறவினர்களிடமும் பேசுகிறேன்; மருத்துவமும் பார்க்கிறேன். தீவிர மனநோயாளிகளை மன நல மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கிறோம்.

✧ முதியோர் சிகிச்சை, சென்னையில் வேறிடங்களில் நடைபெறுகிறதா?

நோய் முற்றிய நிலையில் உள்ளவர்களை இங்கு சேர்த்துக் கொள்கிறோம். சற்றுக்குணமானதும் அவரவர் வீடுகளுக்கு அண்மையில் உள்ள கே.கே. நகர், அண்ணா நகர், தண்டையார் பேட்டை ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள புறநகர் மருத்துவ மனைகளுக்கு அனுப்பி வைக்கிறோம். அங்கே முதியோர்களுக்காக ஒவ்வொரு மருத்துவ மனையிலும் ஆறு படுக்கைகள் தரப்பட்டுள்ளன.

✧ முதியவர்கள் அதிகமாக மருந்துகள் உட்கொள்வது நன்மையா? தீமையா?

தீமையே மிகுதி. ஓர் உதாரணம். உடம்பு உதறுதல் (பார்க்கின்சன்) நோயாளி ஒருவர் அதிக மருந்துகளை உட்கொள்பவர். அவரைப் பரிசோதித்த பின் 'எல்லா மருந்துகளையும் நிறுத்திவிடுங்கள்' என்று எழுதிக்கொடுத்தேன். அவர் இரண்டே நாளில் குணம் பெற்றார். இதே போல், கோயம்புத்தூரைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவர் அதிகமாக மாத்திரைகளைச் சாப்பிட்டதால் மனத் தளர்ச்சி நோய்க்கு ஆளானார். அவருடைய மனத் தளர்ச்சிக்கு வயசு காரணமா? வேறு காரணமா? என்று ஆராய்ந்த பின், மருந்துகளை நிறுத்தச் சொன்னேன். சில நாளிலேயே பூரண குணம் அடைந்த அவர் எனக்கு ஒரு பெரிய விருந்தே கொடுத்தார்.

✧ மரண பயம் உள்ள முதியவர்களுக்கு முக்கிய சிகிச்சை ஏதேனும் உண்டா?

இவர்களுக்குத் தன்னம்பிக்கையும் தைரியமும் முக்கியம். இவர்களாகவே தங்கள் மரண அச்சத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும். மருத்துவம் செய்து குணம் அளிப்பது சிரமம். மனத் தத்துவ ரீதியில் பயத்தை ஓரளவு போக்கலாம்.

✧ மூப்பியல் துறையில் தாங்கள் நடத்திய ஆய்வுகளையும் தங்களுக்கு உதவியாக உள்ள அமைப்புகளையும் நாங்கள் தெரிந்துகொள்ளலாமா?

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள மருத்துவ இதழ்களில் இத்துறை குறித்து 40 ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளேன். உலகளாவிய மருத்துவர்களின் பாராட்டுகளை அவை பெற்றன.

பம்பாய் ரஸ்ஸல் சயண்டிஃபிக் நிறுவனத்துடன் இணைந்து 'முதியவர்களின் உடலில்

உள்ள சத்துகளும் வியாதிகளும்' என்ற தலைப்பில் ஆய்வு நடத்தியுள்ளேன்.

ஆஸ்திரேலியா நாட்டின் சான்டாஸ் நிறுவனத்தில் ஆய்வுத் திட்டத்தின்கீழ் 'கிராமங்களில் வாழும் முதியவர்களின் உணவுப் பழக்கத்தைப் பற்றி' ஆராய்ச்சி நடத்துகிறோம். இந்த ஆய்வு இரண்டாண்டுகள் நடைபெறும். இதற்காக இரண்டு லட்ச ரூபாய் மானியமாக அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் எனக்கு உதவியாக டாக்டர் கார்த்தி கைலாஷ், உணவியல் நிபுணர் திருமதி பிரதிபா பிரபு, எழுத்தர் செல்வி. கீதா ஆகியோர் உள்ளனர்.

நம் நாட்டு முதியோர்கள் பற்றிப் பம்பாய்த் திரைப்படப் பிரிவினருடன் சேர்ந்து 1981 ஆம் ஆண்டு ஒரு செய்திப்படம் எடுத்தோம். அது 13 மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்பட்டு இந்தியா முழுவதும் திரையிடப்பட்டது.

22.3.1988இல் இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு ஆர். வெங்கட்ராமன் அவர்களால், இந்தத் துறையின் சேவைக்காகப் பாராட்டுதல் பெற்றேன். 1990இல் சென்னையில் மூப்பியல் துறையின் தேசிய மாநாடு நடந்தது. அம் மாநாட்டின் செயலாளராகப் பணியாற்றினேன். இந்தியா முழுவதும் உள்ள சுமார் 200 மருத்துவ நிபுணர்கள் அதில் பங்கு பெற்றார்கள்.

முதியோர்களுக்கு ஏற்ற உணவு, நல வாழ்வுக்கு ஏற்ற உணவுகள், முதுமையிலும் இன்பம் ஆகிய நூல்களைத் தமிழிலும், முதியோர்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு ஏற்ற சத்துணவு என்ற நூலை ஆங்கிலத்திலும் எழுதியுள்ளேன்.

முதுமையிலும் இன்பம் என்ற நூல் தமிழ் வளர்ச்சித் துறையால் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் சிறப்புப் பரிசு அளித்தார்கள்.



குடியரசுத் தலைவரிடம்
பாராட்டைப் பெறுதல்.

ஐக்கிய நாடுகள் சங்கம் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் முதல் தேதியை 'முதியோர் நாளாகக்' கொண்டாட முடிவு செய்தது. அதன் படி சென்ற 1.10.1991இல் மாண்புமிகு சுகாதார அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள் வருகை தந்து சிறப்பிக்க சென்னையில் முதியோர் நாள் கொண்டாடினோம்.

எனது முதியோர் சேவையைப் பாராட்டி, எடின்பரோ ராயல் காலேஜ் ஆஃப் பிஸிஷியன்ஸ் (F.R.C.P) என்ற பெருமை வாய்ந்த பட்டத்தை எனக்கு அளித்துப் பாராட்டியது.

✧ *உங்களிடம் சிகிச்சை பெற்றுக் குணமடைந்த நோயாளிகள் சிலரைப் பற்றி...*

107 வயதுள்ள சென்னை புரசைவாக்கத்தைச் சேர்ந்த திரு முத்து என்பவர் எங்களிடம் சிகிச்சை பெற்று 111 வயதுவரை வாழ்ந்தார். தான் இறந்ததும் தன் உடலை எங்கள் அனாட்டமி பிரிவுக்குத் தானம் செய்யுமாறு உறவினர்களிடம் சொன்னார்.

சுதந்திரத் தியாகியும் புகைப்படக் கலைஞருமான 90 வயதான திரு பி.எஸ். உமாபதி நாயகர் என்ற பெரியவர் சிகிச்சை பெற்றுத் தேறி எங்கள் முதியோர் நாள் அன்று எங்களை வாழ்த்திச் செய்தி அனுப்பினார்.

பன்மொழிப் புலவர் அருட்கவி அரங்க சீனிவாசனார் இங்கு சிகிச்சை பெற்றுச் சென்ற பின் 'எனக்கு உயிர்ப்பிச்சை அளித்தீர்கள்' என்று நீண்ட பாராட்டு மடல் எழுதினார்.

இப்படி இன்னும் நிறையப்பேரைச் சொல்லலாம்.

✧ *முதுமையில் தோன்றும் பாலுணர்வுகளின் விளைவுகள் யாவை?*

வயதாக ஆகப் பாலுணர்ச்சி வேட்கை குறைந்து கொண்டே வரும். ஆண்களுக்கு 50 வயதிற்கு மேல் குறைய ஆரம்பிக்கும். இந்தியப் பெண்கள் பொதுவாக மாதவிடாய் நின்றதும் பாலுணர்வு அடங்கிவிடுவதாக எண்ணிக் கொள்கிறார்கள். நம் நாட்டில் முதுமையில் கொள்ளும் பாலுணர்வைத் தவறாகவும், அருவருப்பான செய்கையாகவும் கருதுகின்றனர். ஆனால் இது இயற்கையான உணர்ச்சியே! முதுமையில் பாலுணர்ச்சி குறைந்தால், மருத்துவரை அணுகி உதவி பெறலாம். தொடர்ந்து மருந்துகளை உட்கொள்ளுதல், போதைப் பழக்கங்கள், ப்ளாடர் அறுவைச்



முதுமையிலும் இன்பம் என்ற மருத்துவ நூலுக்காக தமிழக அரசின் பாராட்டை முதலமைச்சர் அவர்களிடமிருந்து 16.1.92 அன்று பெற்றுக் கொள்ளுதல்.

சிகிச்சை ஆகியவற்றாலும் இந்த உணர்வு குறையக்கூடும்.

✧ *ஒருவரின் இளமைக்கும், பல்லாண்டு வாழ்தலுக்கும் இளமையான துணையே காரணம் என்பது உண்மையா?*

அது குடும்பச் சூழ்நிலையையும் நல்ல உடல் நிலையையும் மனநிலையையும் பொறுத்தது. மன மகிழ்ச்சிக்குரிய சூழல் ஏற்படும்போது, உடலிலும் தளர்ச்சி நீங்கி உற்சாகம் தோன்றும். அந்த உற்சாகம் அவர்களை மகிழ்ச்சியாகவும் சுறுசுறுப்பாகவும் செயல் ஆற்றத் தூண்டுகிறது. அவ்வளவே..!

✧ *முதியோர் நலனுடன் இருக்க, யார் முதற் காரணம்?*

அவர்கள் குடும்பங்களே முதற் காரணம். முதியோரை ஒரு சுமையாகத் தம் பிள்ளைகளும் உறவினர்களும் கருதவில்லை என்று முதியோர் அறியும் வகையில் மற்றவர் நடந்தாலே, அவர்கள் பாதியளவு மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.

✧ *தங்களுக்கு ஆன்மிக நாட்டம் உண்டா?*

உண்டு. எனது ஆன்மிக குரு மேல் மருவத்தூர் அடிகளார். எனது இவ்வளவு பெயருக்கும் புகழுக்கும் காரணம், அன்னை ஆதிபராசக்தியும், அடிகளாருமே ஆவர். ஞாயிறு தோறும் மேல்மருவத்தூர் கோயிலில் நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை அளித்து வருகிறோம். அருள்திரு அடிகளார் அவர்கள் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்து உறுதுணை புரிந்து வருகிறார்கள்.

சந்திப்பு : தாமரைக்கண்ணன்
இந்திரா.

கேட்டுப் பாருங்கள்





சுப்புடு

சுதா ரகுநாதன் – ஏவி.எம். ஆடியோ

சுதா ஒரு முன்னணிக் கலைஞர். தங்கக் கம்பி சாரீரம். அபார கற்பனை. வயதுக்கு மீறிய எம்.எல்.வி.யின் சிறந்த சீடர். எது பாடினாலும் எப்படிப் பாடினாலும் சிராவியமாயிருக்கும்.

கவனகர்த்தா லட்சுமி ராஜாங்கம்.

நான் கேள்விப்படவில்லை என்றால் அது அவர் குற்றமாகாது. நான் ஒரு தமிழ் இலக்கிய மேதை அல்ல. பல இடங்களில் எதுகை, மோனை இல்லை. அவை தேவை! மரபு அப்படி.

இருந்தாலும் சுதாவின் இசைத் திறமையினால் பாட்டுகள் மெருகு ஏறுகின்றன. இடையில் ஒரு பூர்வி கல்யாணி ஆலாபனை வருகிறது. அப்படியே அள்ளிக்கொண்டு போகிறது. எப்படி அவரால் முடிகிறது? இடையில் ஸ்தாயி சேர்த்துப் பாடும்போது மயிர்கூச்செறிகிறது. அதில் வழங்கப்பட்ட மலைமகள் ரொம்ப நேர்த்தி. இசை இன்பத்திற்காக வாங்கலாம்.

பி.கு. : புதுக் கவனங்களின் பரீட்சார்த்தம் தற்போதைக்கு வேண்டாமே!

டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா – சதாசிவ பிரம்மேந்திராள் • சங்கீதா காஸெட்ஸ்

பிரம்மேந்திராள் மகா மகா மேதை. மும்மூர்த்திகளுக்குச் சரி சமானம். பல அம்சங்களில் மிஞ்சுகிறார். ஆனால் அவர் கவனங்களுக்குக்கச்சேரிகளில் துக்கடா அந்தஸ்துதான்!

இன்றுவரை அப்படித்தான்.

என்ன அவசரம்?

கவிநயம் சொட்டும்

அந்தப் பிராஸமும் எழில் கொஞ்சும்

அப்படியும் துக்கடாதான்.

ஒரு கோணத்தில் அது நல்லதென்று தோன்றுகிறது.

கச்சேரி நடுவில் வந்தால் சுரம் பாடி நிரவல் செய்வார்கள். நவநீத க்ஷீரம் என்பது ந வனித க்ஷீரம் ஆகிவிடும்.

விபரீதந்தான்.

பக்தி ரஸம் சொட்டும் இந்தக் கிருதிகளைக் குரல் வளமும் சுத்தமான உச்சரிப்புமுள்ளவர்கள் தான் பாடவேண்டும்.

பாலமுரளி பாடியிருக்கிறார் என்று சொன்னாலே போதும்.

பரவஸமாய்ப் பாடியுள்ளார், சாகித்யச் சிதைவு இல்லாமல்.

நர்த்தனமாட வேண்டும் போலிருக்கிறது. முதல் பாட்டு 'பிபரே ராம ரஸம்' தாக வேட்கை உண்டாக்குகிறது.

'பஜரே' பஜிக்க வைக்கிறது. 'மானஸ ஸஞ்சரரே' மனதை உருக்குகிறது. பொக்கிஷம். இடையில் வாத்யக்குழு அடக்கமாய், இனிமையாய் ஒலிக்கிறது. குறிப்பாக பாலசாயி குழலைக் கொஞ்சிக் குலாவுகிறான்.

வாங்குங்கள்!

இன்றே.

மகாராஜபுரம் சந்தானம் – ஊத்துக்காடு கவனங்கள்• வாணி காஸெட்ஸ்

மகாராஜபுரம் மன்னன் தான்.

குரலில் ஒரு சொகுசு.

மயக்கம் தரும் லாகிரி.

ஊத்துக்காடு வெங்கட சுப்பையர் ஒரு மகா கவி, வடமொழி, தமிழ் இரண்டிலும் சாகித்தியத்தில் மிடுக்கு – திஸ்ரம், சதுஸ்ரம், மிஸ்ரம், கண்டம், சங்கீர்ணம் எல்லாம் களிநடனம் புரியும்.

வாக்கு சுத்தமில்லாதவர்கள் அதன் அண்டையில் போகக் கூடாது.

போனால் பல் செட் தேவை.

எனக்குச் சில சமயம் தோன்றுவதுண்டு :

தீட்சதர் மெனக்கட்டுக்காசி போய் மத்திய கால துருபத் பாணியை இறக்குமதி செய்ய முனைந்திருக்க வேண்டாமே என்று. தியாகராஜர், அங்கு போகாமலே 'ராமபாண' என்ற சாவேரி ராக கிருதியில் 'தம்முடுபடலின' என்ற சந்தத்தில் மத்திய கால நடையை சாம்பிளுக்குக் காட்டியுள்ளார். ஊத்துக்காடு அவரையும் மிஞ்சி சுதிபேதங்களைச் சரமாரியாய்ப் பொழிந்துள்ளார். அதுவும் "மரகதமணி" என்ற காம்போதி கிருதியில், ஓர் அரை மணி நேர சாகித்திய மாரி பொழிந்துள்ளார். சந்தானம் எட்டு கிருதிகளை நேர்த்தியாய் வழங்கியுள்ளார் பாவப் பொலிவுடன்.

கர்ணாமிருதம்; கேட்க கேட்க இன்பம்.

பால்வடியும் முகத்தில் கண்ணனை வர்ணித்து, "அலைபாயுதே"யில் இசை அலைகளை மோதி, "தாயே யசோதா"வில் கண்ணனின் பாலலீலைகளை வர்ணித்து 'யார் என்ன சொன்னாரி'ல் கார்வைகளை இழைத்து, 'நீதான் மெச்சிக்கணு"மில் மெச்சும்படி பாடி இறுதியில் "குழலால் ஊதி, "ஆகும் வரையில் பாடும்" பாட்டில் ஜாலம் காட்டி 'பார்வை ஒன்றே'யில் கார்வைகளை இழைத்து, "ஆடாது அசங்கா'தில் பாடாமல் பாடிபரவசப்படுத்தியுள்ளார். இந்தக் கவனங்களை நாட்டியத்தில் பாடுகிறார்கள். சந்தானத்தின் பாணியைப் பின்பற்றினால், சாகித்தியம் புரியும், பாவம் மிளிறும், நாட்டியம் மின்னும். விரைவில் சந்தானம் ஊத்துக்காடின் பாடல்களை வைத்தே ஒரு முழு நேரக் கச்சேரியே செய்ய வேண்டும்.

மகாராஜபுரம் சந்தானம் – குரு ராகவேந்திரர் பாடல்கள்•வாணி காஸெட்ஸ்

இது வேறு வகை பக்திப் பாடல்கள். ரஞ்சிதமான ராகங்கள் (மிஸ்ர சிவரஞ்சனி, பியாக், காபி சிந்துபைரவி...)

பின்னணி ரகுநாதனுடையது; சிறந்த இசை மேதை. பொருத்தமாக, அமைதியாக அமைந்திருக்கிறது.

இரண்டாவது பகுதியில் 'சரணம்' என்ற பாடல் உருக்கமாயிருக்கிறது. உள்ளத்தைத் தொடுகிறது. முதல் பாகத்தில் 'ராகவேந்திரா உன்தன் சரணம்' மேலும் கேட்க ஆசையைத் தூண்டுகிறது.

பரவசமான பக்திப் பாடல்கள்.

— சுப்புடு

புதிய ஹெல்த் கிளப்

டி.பத்ராத்ரி மற்றும் சியாமளா பத்ராத்ரியும் கூட்டாக 'ஸன் ஸ்பா ஹெல்த் கிளப்'பை ஆரம்பித்துள்ளார்கள். ஜி.என். செட்டி ரோடில் சன் பிளாசா காம்ப்ளக்சில் இது அமைந்துள்ளது. உடற்பயிற்சி, அதற்குத் தேவைப்படும் உபகரணங்கள், ஸ்டீம் / ஸானா பாத், மஸாஜ் ஆகிய வசதிகள் இதில் உள்ளன.



ஒரு சைனீஸ் / தந்தூரி ரெஸ்டாரண்ட்டும் விரைவில் இங்கு துவக்கப்பட உள்ளது.

உறுப்பினர்களின் வசதிக்காக, ஒரு 'டயட்டீஷனும்' ஒரு முழு நேர டாக்டரும் இருப்பார்கள்.

பெண்கள் இங்கு வந்து உடற்பயிற்சி மேற்கொள்ள தனியாக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நுழைவுக் கட்டணமாக ரூ. 2000/- செலுத்த வேண்டும். மாதச் சந்தா ரூ. 300/- மட்டுமே. உறுப்பினர்களின் உடமைகளை வைத்துக் கொள்ள லாக்கர் வசதியும் செய்துத் தரப்பட்டுள்ளது.

இத்தனை வசதிகளும் உள்ள மிகக்குறைந்த கட்டணத்தில் செயல்படும் ஹெல்த் கிளப் இது மட்டுமே!

போட்டிக்கு வந்த கதை:1

தீர்ப்பு

'சுப்ப்ரியா'

'ராஜி இந்தச் செய்தியைக் கேள்" - அனேகமாகக் காலை வேளையில் நான் சமையலறையில் இருக்கும்போதே தினத்தாளிலிருந்து செய்திச் சுருக்கங்களைக் கூறிவிடும் என் கணவர் அன்றைய 'தாஜா' செய்தியுடன் உள்ளே வந்தார்.

"கணவனைக் கொன்ற மனைவிக்கு ஆயுள் தண்டனை! கணவனின் மனத் துன்பத்தைக் காணப் பொறுக்காமல் கொன்றதாகக் கூறும் சாவித்ரி என்ற மனைவி!"

"என்னது! பெயர் சாவித்ரி; கொலை செய்தது கணவனை! 'மெர்சி கில்லிங்' என்று அதற்குப் பெயர் வேறே! சே... பாரதப் பெண்கள் வர வர எங்கே போகிறார்கள்?" கறிக்குத் தாளிக்கப் போட்ட மிளகாய் என் நெஞ்சில் கமறியது.

"உனக்குத்தான் பிடிக்குமே! அவளைப் போய்ச் 'செஞ்சல் கூடா' சிறையில் பார்த்துப் பேசுகிறாயா?"

"நிஜமாகவா?" ஆவலும் ஆச்சரியமுமாக என் கண்கள் விரிந்தன.

அப்போது முதலே நான் பல கேள்விகளை மனத்துக்குள் போட்டுப் புரட்டலானேன்.

என் எதிரே நின்ற உருவத்தைப் பார்த்த நான் ஒரு கணம் திகைத்துத் தான் போனேன். மெலிந்த உடல், சுருண்ட குட்டையான கூந்தலை 'ப்ளாஸ்டிக் க்ளிப்' போட்டு அடக்கியிருந்தாள். கண் பெரியதாக இருந்தது. நாசி அத்தனை கூர்மையாக இல்லாவிட்டாலும் அந்த முகத்துக்குப் பொருத்தமாகவே இருந்தது. சிறிய குருவி போன்ற வாய், அதனுள் அழகான பல் வரிசை. பழைய நைலான் புடைவை - அதன் மேல் ஒரு பழைய 'ஷால்' உடலைப் போர்த்தியிருந்தது. ஒரு காலத்தில் நல்ல அழகியாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அந்தக் கண்களில் குளம் கட்டி இருந்த சோகம் கணவனை இழந்ததற்கோ, தண்டனை கிடைத்ததற்கோ அல்ல என்று தோன்றியது.

"உங்கள் பெயர் சாவித்ரி - ஆனால் செயல்..." மெல்ல ஆரம்பித்தேன்.

"செயலிலும் நான் சாவித்ரிதான். என் கணவர் படும் பாடு பொறுக்காமல், அவருக்குச் சுக அமைதி தந்தேன்... படபடவென்று பொழியும் அவர் நாவு அசைய முடியாமல் துடித்தபோது அவர் வேதனையிலிருந்து அவருக்கு விடுதலை தந்தேனே, அதற்கு என்ன பெயர்? கணவனுக்[கு] வேண்டியதைக் காலமறிந்[து] கொடுப்பதுதானே ஓர் உ[ண்]மையான மனைவிக்கு அழகு[?]" அவள் மிகத் தெளிவாகவே பதிலளித்தாள்.

"அப்படிச் செய்ய எப்படி[த்] துணிந்தீர்கள்? அவரிடம் வே[று] ஏதாவது வருத்தம், கோப[ம்] இருந்து அதனால் இப்படி[ச்] செய்தீர்களோ என்று எனக்கு[த்] தோன்றுகிறது". மனத்தை[க்] கல்லாக்கிக் கொண்டு கே[ட்]டேன்.

"ஹூம்!" அவள் விரக்[தி]யாகச் சிரித்தாள். "இந்த[க்] கேள்வியைக் கோர்ட்டி[ல்] கூடக் கேட்கவில்லையே என்[று] நினைத்தேன். ஆனால் நீங்க[ள்] கேட்டுவிட்டீர்கள். ஆமா[ம்], நீங்கள் பத்திரிகை நிருபர[ா], வக்கீலா, எழுத்தாளரா?"

"எதுவும் இல்லை. ஒ[ரு] குடும்பப் பெண். எப்போத[ா]வது ஏதாவது பத்திரிகைக்[கு] நிகழ்ச்சிச் சுருக்கங்க[ள்] தொகுத்து எழுதுவேன். ஆனா[ல்] உங்களைச் சந்திப்பது, இப்ப[டி]யும் நடக்க முடியுமா என்[ற] ஆவலின் உந்துதல்தான்..."

"அது சரி... ஆனா[ல்] அவரைக் கொல்ல நினை[த்]திருந்தால் நான்... மேட[ம்] 'ஸாரி டு ஸே'... அவரை எ[ன்] முதலிரவன்றே - அதிக[ம்] போனால் திருமணமான ஓரி[ரு] வருடங்களுக்குள்ளேயே கொ[ன்]றிருப்பேன்..." அவள் குரலி[ல்] எந்தச் சலனமும் இல்லை.

எனக்குத் தூக்கி வாரி[ப்] போட்டது. "என்னது, ஏ[ன்] அப்படிச் சொல்கிறீர்க[ள்] சாவித்ரி?"

"எனக்குப் பதினாறு வயதில் திருமணம்; அவருக்[கு] வயது இருபத்தொன்று!"

தவறிழைத்தவன் மறந்துவிடுகிறான்; ஆனால் தவறிழைக்கப்பட்டவன் மறப்பதில்லை.
- ஆப்ரிக்கப் பழமொழி

சாவித்ரி ஆரம்பித்தாள்.

"சிறு வயதில் நான் அழகாகவே இருப்பேன். மெட்ரிக் படித்திருந்தேன். சுமாராகப் பாடுவேன். இதெல்லாம் அவர்கள் கண்களுக்குப் புலப்படவில்லை. பெண் 'உருவம்' நன்றாகவே இருக்கிறது - இது தான் அவர் ரசனை. அதனால் வைரத்தோட்டுக்காக நின்று போயிருக்க வேண்டிய என் கல்யாணம், "பெண்ணை பாலாஜிக்குப் பிடித்து விட்டது" என்ற காரணத்தால் நிச்சயமாயிற்று.

என் தாம்பத்தியத்தில் நான் எதிர்பார்த்தது தூய அன்பைத் தான். 'கணவன் மனைவி இடையே அதற்கு 'உடல்' என்ற பாலமும் உண்டு' என்று என் அம்மா ஓரளவு உணர்த்தித் தான் என்னை அறைக்குள் தள்ளினாள். ஆனால் நான் அன்று அனுபவித்தது... 'நரகம்'. ஒரு மிருகப் பாய்ச்சல்; நாய்க் குதறல்... அன்றே இதென்ன கோணல் புத்தி - என் வாழ்க்கை முதற்கோணல் முற்றும் கோணல் என்றாகி விடுமோ' என்ற ஒரு பீதி ஏனோ முன்னோட்டமாக என் மனத்தில் பிறந்தது.

அதன் பின்?

அவர் கண்கள், நாக்கு எல்லாமே நெருப்பு, விஷம்! அறைக்குள் ஆளுயரக் கண்ணாடி எதிரே என்னை அலங்கோலமாக நிறுத்தி வைத்து, சிகரெட்டைப் புகைத்தபடி, மாறி மாறிப் பார்த்து ரசிப்பார். என் உடல் நிழலைக் கண்டு எனக்கே கூசும். ஆனால் அவர் கண்கள்? அதில் அழகை ஆராதிக்கும் ரசனை இராது. எலிக் குஞ்சைப் புரட்டிப் புரட்டி எடுத்து, ஓடவிட்டுப் பாய்ந்து கவ்வும் பூனையின் குரூரம்தான் இருக்கும். அதைக் கண்டு என் உடல் நடுங்கும். திடீரென்று மூலையிலிருந்து எதையாவது எடுத்து அவர் மண்டையில் போட்டு விட்டு ஓடிப் போய்விடலாமா என்று கைகள் பரபரக்கும்.

ஒரு நாள் பிற்பகல். அடுத்த வீட்டுப் பெண் கூப்பிட்டாள் என்று படம் பார்க்க காலை ஆட்டத்திற்குப் போனேன். அன்றைக்கென்று 'இது' எதை நினைத்துக் கொண்டு ஓடி வந்ததோ... சாப்பாட்டு இடைவேளையில் வீட்டுக்கு வந்திருக்கிறது! அவ்வளவுதான். அன்று எனக்கு வாயாலும் கையாலும் கிடைத்த பூசை! அதிலும் கோபம் வந்தால் அடி எப்படி விழும் தெரியுமா? நிர்வாணமாக வீடு பூரா ஓடவிட்டு, விரட்டி விரட்டி 'பெல்ட்'டால் அடித்தார். ஐயோ, இந்தக் கைகள் ஒடிந்து விழாதா, வசம் இழந்து போகாதா என்று மனத்திற்குள் சபிப்பேன். ஆனால் எதையும் வெளியில் சொல்லிக் கொள்ள வழியில்லை.

'செக்ஸ்'தான் வக்ரம் என்றில்லை, அவர் உடலின் ஒவ்வொரு அணுவும் வக்ரம்தான்!

துரத்தும் நாயைத் திரும்பிப் பார்த்துக் கல்லால் அடிக்க நினைத்தால் அது பயந்து ஓடும் என்ற தத்துவம் கதைக்கு அழகானதாக இருக்கலாம். ஆனால் நிதர்சன உலகில்? அந்த நாய் இன்னும் வெறி பிடித்துப் பிடுங்கும்.

இந்த மனிதன் கை இற்றுப் போகாதா என்று ஆத்திரப் படுவேன். ஆனால் ஓயாமல் அடிபடுவேன்.

அந்த வாய் அடைத்துப் போகாதா என்று உள்மனம் சபிக்கும். ஆனால் வாய் திறவாமல் ஜன்னலை மூடி விட்டு உள்ளே என்னைச் சிறைப்படுத்திக் கொள்வேன்.

இடையில் இரண்டு குழந்தைகள் பிறந்து இரண்டு மூன்று வயது வரை வளர்ந்து இறந்தன. அதுகளுக்கு வேளா வேளைக்குத் தாய்ப்பால்கூடக் கிடைக்காது. இரவில் அழுதால் கரைத்த பாலும் கிடைக்காது. பார்க்கப் போனால் அடித்து அடித்தே அவைகளைக் கொன்றார் எனலாம். சே... குழந்தைகளை எட்டி உதைத்து 'சனியன்கள், மகா தொல்லை பிடித்ததுகள்' என்று குழந்தைகளைப் பந்தாடும் போது கால் அப்படியே இழுத்துக் கொள்ளாதா என்ற மனத்திற்குள் பொறுமுவேன். குழந்தைகளுக்கான பால், சோறு, உடை, மருந்து எல்லாமே அவரைப் பொறுத்த வரை தண்டச் செலவுகள்! ஆனால் இவரது ஆடம்பர உடை, டானிக்குகள், சிகரெட், இத்யாதி, இத்யாதி அத்தியாவசியமானவை, வாழ்க்கையை "அனுபவிக்க!"

எதற்கும் ஓர் எல்லை வேண்டுமே. அந்த எல்லையை அடைந்து விட்டார் அவர். 'கிளைமாக்ஸ்' காட்சியின் முடிவு வீழ்ச்சி!" சாவித்ரி சற்று நிறுத்தினாள்.

நான் குறிப்பெடுப்பதையும் மறந்து, இப்படியும் ஒரு இரக்கமற்ற மிருகம் இருக்குமா என்று கல்லாய் நின்றிருந்தேன். சாவித்ரி தொடர்ந்தாள்.

"எனது மூன்றாவது கரு எட்டு மாதத்தில் சிதைந்தது. அதுவும் பத்து வருடங்களுக்குப் பின் ஏற்பட்ட கர்ப்பம்.


அன்று சாப்பிட உட்கார்ந்த அவருக்கு அவசரமாக உள்ளே அடுப்பில் சுட வைத்திருந்ததை எடுத்து வர ஓடியபோது கால் வழுக்கி எக்கச் சக்கமாக விழுந்து சூடான சாம்பார் வயிற்றில் கொட்டி... பலன் கருச்சிதைவு! இல்லை வயிறு பிளந்தது - கிழிந்தது.

அதன் பின் என் மனம் உடைந்து விட்டது. அழகு குலைந்து விட்டது. அத்தனை தான். எனக்கிருந்த ஒரு பிடிப் போய்விட்டது. எச்சில்

இலைபோல் ஆனேன். அந்தச் சமயத்தில் நிஜமாகவே ஒருத்தி அவர் வாழ்வில் குறுக்கிட்டாள். அவளைப் போல முன்பும் கூடச் சிலர், நான் பிரசவத்திற்குப் போனபோது தாற்காலிகமாக இருந்தது எனக்குத் தெரியும். முதன் முதல் நான் அவர் நடத்தை பற்றி அறிந்தபோது என் மனம் பட்ட பாடு – அப்புறம் பழகி விட்டது.

ஒரு நாள் அவரும் அந்தப் பெண்ணும் காரில் வெகு வேகமாகப் போகும்போது... அவருக்கு எதிலும் அவசரம் தானே – எதிலும் யாரையும் முந்த விடமாட்டாரே – முன்னால் போன காருடன் போட்டி போட்டு முந்த நினைத்தபோது எதிரே வந்த லாரியைப் பார்க்கவில்லை. அவ்வளவுதான். அப்புறம் கேள்விப்பட்டிருப்பீர்களே. அவருக்கு மண்டையிலும், முதுகுத் தண்டிலும் அடி. மூளை நரம்பில் ஏதோ பாதிப்பாம். அதோடு சரி. மூன்று வருடங்களாக மனிதன் மரக்கட்டைதான் – வெறும் வெஜிடெபிள்தான். மூளை ஸ்தம்பித்தது. உடம்பு கோணல், மாணலாக இழுத்துக் கொண்டது. கைகள் முறுக்கிக் கொண்டு ஒரு விறைப்பு! கால்கள் இரண்டும் இரண்டு திக்கில் நீட்டியிருக்க விரல்களில் ஒரு வளைசல், வாயில் நாக்கு புரளாமல் எச்சில் ஒழுகிய வண்ணம் இருந்தது. ஆட்டம் எல்லாம் அடங்கி, நூலிழை மூச்சில் அவர் 'அது' ஆகாமல் கிடந்தார்.

நாள் ஆக ஆக அவர் வாய் ஏதோ சொல்ல நினைக்க, முயற்சிக்க எதுவும் முடியாமல் கண்கள் கலங்கின. உள் நினைவு நன்கு இருந்தது. உணர்ச்சிகளை வெளியிட



முடியாத துன்பத்திற்கு ஈடு எது? அவருடைய அந்த வாய் நான் ஏதாவது செய்யும்போது அதிகாரம் செய்யப் பறந்ததா, அல்லது அடங்கிப் போன பின் கழிவிரக்கம் காட்டி மன்னிப்புக் கேட்கத் துடித்ததா, புரியவில்லை.

முப்பது வருடங்களாக என் போஷணையில் இருந்தால்கூட என்னை, 'சீ நீ யாருடி எனக்கு? இப்படி ஒரு சொடக்குப் போட்டால் உன்னைப்போல் ஆயிரம் பேர் என் பின்னால் ஓடிவரக் காத்திருக்கிறார்கள்...' என்று கை சொடுக்கிக் கொக்கரிப்பவர், இந்த மூன்று வருடங்களாகத் தன் கையை இப்படி அப்படி நகர்த்த, உடலைப் புரட்டிவிட, உணவு ஊட்ட என்று அசைய முடியாமல் சேவை செய்ய என் ஒருத்தியையே சார்ந்து கிடந்தார். ஆனால் இப்படி இருக்கிறோம் என்ற உணர்வுகூட அவருக்கு இல்லை. முன்பு எங்கேயாவது இதை விட்டு ஒழிய மாட்டோமா இரண்டு நாட்களுக்கு என்று ஏங்கிய நானும் ஒரு கணம்கூட அவரை விட்டுப் பிரியாமல் எழும்பி அடங்கும் அவர் சுவாசத்தை மட்டும் பார்த்துக் கொண்டு இரவு பகலாகப் பக்கத்திலேயே ஊண், உறக்கம் இன்றி உட்கார்ந்து கிடந்தேன்.

மேடம், சொன்னால் நம்ப மாட்டீர்கள். உண்மையில் அப்போதுதான் எனக்கு அவர் மீது பரிவு, பாசம் பிறந்தது. செயலிழந்து கிடந்த கைகளைத் தடவிப் பார்ப்பேன். அடித்து அடித்து அந்தக் கைகள் ஓய்ந்தனவோ? காலைப் பார்ப்பேன். எத்தனை உரம் வாய்ந்த கால்கள். எப்படித் தொய்ந்து விட்டன! வேங்கை போன்ற பார்வை, ஒளியிழந்து, குறிப்பிழந்து, சூனியத்தை நோக்கிக் கொண்டிருந்தன, உணர்ச்சி இல்லாமல். கூசாமல் ஏசிப் பேசிய நாக்கு, சுவைகூட அறிய

> தேர்ந்தெடுத்த
> வைரவரிக் கவிதைகள்
>
> **மக்கள் பெருக்க விளைவு**
>
> விளையும் நிலங்கள்
> வீடுகளாய் ஆனதால்
> தங்கம் விற்று
> தக்காளி வாங்குகின்றோம்!
>
> — ராம். கம்பர்

முடியாமல் மரத்துப் போய்க் கிடந்தது. பரபரவென்று எப்போதும் செயல்படத் துடிக்கும் உடல் தன் சொரணையே இன்றி அசைக்கக்கூட முடியாதபடி மரமாகக் கிடந்தது.

அவர் என்னை வதைத்துத் துன்புறுத்தியபோது பொறுமையுடன் இருந்த என்னால், அவருடைய இந்தச் சலனமற்ற நிலைமையைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எல்லாவற்றிலும் அவசரம், வேகம் என்று மகாப் பிரளயமாகப் பாய்ந்தவர், சாவின் வாசலில் சாவகாசமாகக் காத்திருந்தது எனக்குப் பிடிக்கவில்லை. ஆஸ்பத்திரியில் போகிற, வருகிறவர்கள் எல்லாம் அவரைக் காட்சிப் பொருளாகப் பார்த்தனர். 'பாவம், இந்த அம்மா' என்று பரிதாபப்பட்டனர். நான் கஷ்டப்பட்ட நாட்களில் எல்லாம்கூடக் கிடைக்காத பரிவு, இரக்கம், பிறருடைய அனுதாபம், எனக்கு அவருடைய படுக்கையருகில் உட்கார்ந்திருந்தபோது நிறையவே கிடைத்தது. அந்த இரக்கம் எனக்குப் பிடிக்கவில்லை. யோசித்து யோசித்து நான் கடைசியில் எடுத்த முடிவுதான் இது. 'தான்' என்ற அகங்கார உணர்வுடன் உரிமை பேசியே நாட்களை அட்டகாசமாகக் கழித்த 'அவரை'த்தான் என் மனம் வரவேற்றது. இப்படிச் சலனமற்றுக் கிடக்கும், சாட்சிக்குக் கணவனாகக் கிடக்கும் நிலையை அவரே விரும்பியிருக்க மாட்டார். அவர் இந்த அமைதிச் சிறையில் இருந்து விடுதலை பெற வேண்டும். அடங்கிக் கிடக்கக் கூடாது... கூடாது... எனக்குள் ஒரு வெறியே பிறந்தது... முடிவு? ஒரு நாள் பாலில் விஷ மாத்திரைகளைக் கரைத்து... மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு... அவருக்கு... அவருக்கு..."

திடீரென்று சாவித்ரி பெரிதாகக் கேவினாள். "மேடம், அவர் செய்த துன்பங்களை எல்லாம் பொறுத்துக் கொண்ட என்னால், அவர் துன்பப்படுவதை, துவண்டு கிடப்பதைக் கண்டு வாளாவிருக்க முடியவில்லை. அதனால் அவர் துயர் களைந்து விட்டேன். விடுதலை... விடுதலை... விடுதலை..."சாவித்ரி சரே'லென்று மனமுடைந்து பாட்டும், அழுகையும், சிரிப்புமாக ஒரு கலவையானாள்.

"ஸ்.. சாவித்ரி... ப்ளீஸ், அழாதீர்கள்". நான் மெல்ல அவள் முதுகைத் தடவினேன்.

"மேடம், புரிந்து கொள்ளுங்கள். நான் பழி வாங்கவோ, அவரை வெறுத்தோ அவரைக் கொல்லவில்லை. சத்தியமாக அதற்காக இல்லை. அவரது கம்பீரம் கலைந்து போகக் கூடாது என்றுதான்..." சாவித்ரி புடைவைத் தலைப்பால் வாயை அழுந்த மூடிக் கொண்டாள். "ஒரு சூறாவளி போலத் துவம்சம் செய்து வந்த அவர் சூன்யமாக ஒன்றும் இல்லாமல் கிடக்கக் கூடாது என்றுதான்..."

நான் மௌனமாக வெளியே நடந்தபோது என் நெஞ்சு கனத்துக் கிடந்தது. ஒன்றுமே செய்யாதபோதுதான், வாழ்க்கையை ஒரு சிறைபோல, தன் ஆசைகள் உணர்ச்சிகள் எல்லாவற்றையும் அடக்கித் தனக்குத் தானே சிறையிட்டுக் கொண்டிருந்தாளே? பின் ஏன் இப்போது அவளுக்கு மீண்டும் ஒரு சிறை?



வாழ்வே இவர் தம் உபதேசம்



தம்பி ஸ்ரீனிவாசன்

வைணவ ஆச்சாரியப் பெரு மக்கள் சிலரின் வாழ்க்கைத் துணுக்குகள்.

ஸ்ரீராமானுஜர் காலத்துக்குப் பின் தென்னாட்டில் ஆழ்வார்கள் அருளிய செயல்களையே வேதமாகக் கொண்டு வழிபாடு செய்து வாழும் வைணவத் திருக் கூட்டம் பெருகலாயிற்று. ஆழ்வார்களின் பாசுரங்களைத் தேடித் தொகுத்த நாதமுனிகள் தொடங்கி, யமுனைத் துறைவர் என்னும் ஆளவந்தார் வழியாக இராமானுஜர் காலம் வரை இந்த வைணவ பக்தி இயக்கம் நிலையூன்றுவதற்குத் தம் வாழ்வு முழுவதையும் அர்ப்பணித்திட்ட பெரியோர்கள் பலர்.

'குரு பரம்பரைப் பிரபாவம்' இந்தப் பெரியோர்களின் தன்னலமற்ற தியாக வரலாற்றுத் தொகுப்பே. நம்பமுடியாத அளவு எளிமையும், பாகவதர்கள் தம்முள் காட்டிய பரஸ்பர அபிமானமும் ஒரு பெரும் கொள்கை நிலைப்பதற்காகத் தம்மைக் கரைத்துக்கொண்ட நீர்மையும் மிகச் சிறந்த இலக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகள் எனத்தக்கவை.

குலத்தாலோ செல்வத்தாலோ கல்வியாலோ கூடத் தம்மை உயர்வாக எண்ணிக்கொண்டு விடாமல் பிற பாகவதருடன் சமத்துவமாகப் பழகுவதையே சிறப்பு வாழ்க்கை நெறியாகக் கொண்டு ஒரு பெரும் லட்சியக் குழுவைத் தோற்றுவித்த, இந்த பாகவத ஆச்சாரிய புருஷர்கள் சில நிகழ்ச்சிகளால் ஆச்சரிய புருஷர்களாகவும் விளங்குகிறார்கள்!

உடலால் பாலம் அமைத்தார்!

நாதமுனிகளின் சீடர் உய்யக் கொண்டார் என்ற கல்விமான். இவரிடம் சீடராகச் சேர்ந்த தொண்டர், மனக்கால் என்ற ஊரினர். மணக்கால் நம்பி என்று அழைக்கப்படும் இவர்தம் குருவின் மனைவி காலமானதால் தாயில்லாத குருவின் பெண் குழந்தைகளை எடுத்து வளர்க்கும் பொறுப்பையும் தாமே ஏற்றுக்கொண்டு சிறப்பாக நடத்தி வந்தார்.

ஒருமுறை உய்யக்கொண்டாருடைய பெண்களை நதியில் நீராட்டி வீட்டுக்குத் திரும்ப அழைத்து வந்தபோது, வழியிலே குறுக்கான வாய்க்கால் ஒன்று சேறாக இருந்தது. அதைக் கடக்க அந்தப் பெண்கள் தயங்க, உடனே சரேலென்று குறுக்கே படுத்து, தமது உடலையே பாலமாகக் கொண்டு அவர்களைக் கடக்கச் செய்தாராம் மணக்கால் நம்பி!

பாட்டனார் வைத்த தனம்

நாதமுனிகளின் பேரன்ஆளவந்தார் சிறந்த அறிவாளி. மிகச் சிறு வயதிலே அரசனின் ஆஸ்தான வித்துவானை வாதிலே வென்றவர். அதன் காரணமாக ராஜ்யத்தின் ஒரு பகுதியை நாடாளும் உரிமைபெற்றவர்.

ஆச்சாரிய பரம்பரையில் பிறந்த அறிஞர் நாடாளும் பொறுப்பில் காலம் கழிக்கிறாரே என்று கவலைப்பட்டார், பழுத்த கிழவர், மணக்கால் நம்பி. ஆளவந்தாரைச் சென்று காண்பது சுலபமாக இல்லை. பெரிய அரண்மனை. நிறைய ஆட்கள். தோற்றத்தில் எளியவரான மணக்கால் நம்பி ஒரு நாள் ஒரு கீரைக்கட்டுடன் அரண்மனைச் சமையற்கட்டுக்குச் சென்றார். "இது தூதுளங் கீரை. எஜமானருக்கு நல்லது. செய்து பரிமாறுங்கள்" என்றார்.

அடுத்த நாளும் கொடுத்தார். காட்டிலே சென்று, முள் நடுவிலே இருக்கும் இந்தக் கீரையைப் பாடுபட்டுப் பறித்துச் சில நாள் தொடர்ந்து கொடுத்து வந்தார்.

ஆளவந்தார் அப்படியும் இதுவரை அறிந்து, அழைத்துப் பார்க்கவில்லை.

ஒருநாள் கீரை தருவதை நிறுத்தினார் கிழவர்..

"இன்று ஏன் கீரை இல்லை?" என்று சமையற்காரரைக் கேட்டார் ஆளவந்தார். அப்போதுதான் அவர் அறிந்தார், யாரோ ஒரு கிழவர் கைங்கரியத்தால்தான் தமக்குத் தினம் கீரை கிடைத்த செய்தியை. மறு நாள் கிழவர் வந்ததும் ஆளவந்தார் முன்பு அழைத்து வரப்பட்டார்.

"பெரியவரே! என்ன காரியமாகத் தினம் கீரை கொண்டு வந்தீர்? ஏதாவது உதவி தேவையா?" என்று பரிவோடு கேட்டார் ஆளவந்தார்.

"எனக்கு எதுவும் தேவையில்லை. தங்களுக்குத்தான் தங்கள் குடும்ப நிதியைக் காட்ட வந்திருக்கிறேன்" என்று மணக்கால் நம்பி அந்த நிதியை விவரித்தார் : "தங்கள் பாட்டனார் நாதமுனிகள் அந்திமக் காலத்தில் என்னிடம் ஒப்புவித்த நிதி அது. தக்க வயது வந்ததும் தங்களிடம் சேர்க்கவேண்டிய நிதி அது. அழியா நிதி. சாதாரணக் கண்ணுக்குப் புலப்படாத நிதி. இரண்டு ஆற்றுக்கு நடுவே ஏழு சுற்றுக் கோட்டைக்குள்ளே பாம்பு சுற்றிக் கொண்டிருக்கும் நிதி" என்றெல்லாம் கூறி, அவரைத் திருவரங்கத்துக்கு அழைத்துச்சென்று, அரங்கப் பெருமானை தரிசனம் செய்வித்து வைக்கிறார், மணக்கால் நம்பி. நாளடைவில் ஆளவந்தார் ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்தின் பொறுப்பேற்று வழி காட்டுகிறார்.

தொண்டரா, பக்தரா? – யார் உயர்ந்தவர்?

காஞ்சி அருளாளரின் அருளுக்குப் பாத்திரமானவர் திருக்கச்சி நம்பி என்னும் பக்தர். ஆண்டவன் சந்நிதியில் ஆலவட்டம் விசிறும் பணி புரிந்தவர். இறைவனிடம் நேருக்கு நேர் பேசும் வாய்ப்பு உண்டாம் இவருக்கு.

இவர் ஒரு நாள் ஆற்றங்கரையில் நடந்து சென்றபோது, இவர் பின்னே சற்று தூரத்தில் வந்த ஓர் அடியவர், இவர் நடந்த அடிச் சுவட்டிலிருந்து தூளை எடுத்துத் தலையில் இட்டுக் கொண்டார். இதைக் கவனித்த திருக்கச்சி நம்பி வியந்தார். "ஏன் அப்படிச் செய்கிறீர்?" என்று விசாரித்தார்.

"தாங்கள் பரமபக்தர். தங்கள் அடிப் பொடி என்னை வாழ்விக்கும். எனக்கு வீடுபேறு உண்டா என்பதை ஆண்டவனிடம் அறிந்து சொல்லுங்கள்" என்று வேண்டினார் அந்த எளியவர்.

அன்றிரவு ஆண்டவனிடம் இந்த விண்ணப்பத்தை வெளியிட்டார் திருக்கச்சி நம்பிகள்.

"அந்த எளியவருக்கு நிச்சயம் பேறு உண்டு. சந்தேகம் என்ன? அவன் பக்தரின் தொண்டராயிற்றே!" என்று அருள் வாக்கு மலர்ந்தது.

ஆனால் அருள் வாக்கு மேலும் தொடர்ந்தது. "பக்தரின் தொண்டருக்கு, அதாவது பாகவத அபிமானிகளுக்கு நிச்சயம் மேன்மை உண்டு. ஆனால் பாகவத அபிமானம் இராத பேருக்குச் சந்தேகந்தான்!"

இறைவனுக்கு மட்டுமே தொண்டு செய்து வந்த திருக்கச்சி நம்பி திடுக்கிட்டார். அவர் பாகவதர் எவருக்கும் இதுவரை தொண்டாற்றியது இல்லையே. இறைவனுக்குத் தொண்டு செய்வதைவிட, அடியவருக்குத் தொண்டு செய்வதையே ஆண்டவன் உகப்பாராமே. இப்போது என்ன செய்வது? நேரே திருவரங்கத்துக்குச் சென்றார்.

அங்கே பெரிய நம்பி என்ற முதியவர் இருந்தார். கிராமம் கிராமமாகச் சென்று ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்தைப் பரப்பி வந்தார்.

தாம் இன்னார் என்பதைக் காட்டிக் கொள்ளாமல், திருக்கச்சி நம்பி, அந்தப் பெரியவரிடம் வண்டிக்காரராக வேலை பார்க்கத் தொடங்கினார்.

ஒரு நாள் கிராமங்களைச் சுற்றி வருகையில் இரவுப் பொழுதாகி விட்டது. பெரும் காற்றும் மழையும் சேர்ந்து வழியில் வெள்ளமும் சேறுமாக இருந்தது. திருக்கச்சி நம்பி ஒரு கையில் மாடுகளின் தலைக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு, மற்றொரு கையில் விளக்குக் கூட்டைப் பிடித்துக்கொண்டு சொட்டச் சொட்ட நனைந்தபடி வண்டியை நடத்தினார். சேற்றில் வண்டி அழுந்தியபோதெல்லாம் தாமே தோள் கொடுத்துக் கிளப்பித் தள்ளியும் வந்தார்.

எப்படியோ திருவரங்கம் வந்து சேர்ந்தாயிற்று. திருக்கச்சி நம்பி, மாடுகளைப் பிடித்து ஒருபுறம் கட்டி விட்டு, குளிரால் விரைத்தபடி, நனைந்த மேல் துணிகளைப் பிழிந்து திண்ணையில் உலர்த்தினார். வேறு மாற்றுடை இல்லாமையால், தாம் காஞ்சியில் அணிந்திருந்த வழக்கமான உடைகளையே எடுத்து உடுத்திக் கொண்டார்.

உள்ளே சென்ற பெரியநம்பி, வண்டிக்காரனை மனத்துக்குள் வாழ்த்தியபடியே தம் சொந்த ஆடைகளில் ஒன்றிரண்டை எடுத்தார். "பாவம், மழையில் நனைந்து கஷ்டப்படுகிறானே!" என்று சொல்லி, "வண்டிக்காரா, வண்டிக்காரா" என்று உரக்கக் கூவி அழைத்தார்.

குரல் கேட்டதும், திருக்கச்சி நம்பி திண்ணையிலிருந்து குதித்து வந்தார். அவரது இயல்பான உடையில் அடையாளம் கண்டுகொண்ட பெரிய நம்பி, அவரை அணைத்துக் கொண்டார். "கச்சி நம்பிகளே! என்ன காரியம் செய்தீர்? வண்டிக்காரனாகப் பணியாற்றினீரே ஏன்?" என்று விசாரித்தார்.

ஒரு பாகவதருக்குக் கைங்கரியம் செய்யவே இவ்வாறு பணிபுரிந்ததாகத் தெரிவித்தார் கச்சி நம்பிகள்.

வேடரும் வடுகரும் சீடர் குழாங்கள்!

ஆளவந்தார் திருவரங்கத்தில் பெரும் அளவில் தொடங்கிய வைணவ தர்மத்தை நெறிப்படுத்திப் பரப்பிய, நிலைத்த பணி ஆற்றியவர் ஸ்ரீராமானுஜர். இவருக்குச் சீடர்கள் கல்விமான்கள் மட்டும் என்றில்லை. சமுதாயத்தின் எல்லா நிலையினரையும் தம்பால் ஈர்த்துக்கொள்ளும் தன்மை கொண்டிருந்ததால் இவரிடம் வடுகரும் வேடரும் சமுதாயத்துப் பலநிலை மாந்தர்களும் சீடராகச் சேர்ந்தனர். தம் ஆச்சாரியருக்காகவே வாழ்ந்து, தம் திறனையும் பொருளையும் அவரது லட்சியங்களையும் நிறைவேற்றவே அர்ப்பணித்தனர்.

கூரம் என்ற சிற்றூரின் அதிபதியாக இருந்த ஒருவர் தம் செல்வமனைத்தையும் வைணவ இயக்கத்துக்காக வழங்கி, தாம் ஒரு சிறு தொண்டராக எளிமை வாழ்வு நடத்திப் பிறர்க்கு வழிகாட்டினார்.

வில்லிகளில் ஒருவரான பிள்ளை யுறங்கா வில்லி என்பவர் தம் அழகிய மனைவி பொன்னாச்சியுடன் ராமானுஜரின் சீடர் குழாத்தில் சேர்ந்ததே ஒரு சுவையான வரலாறு.

இவ்விருவரும் அடியவர்களுக்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டினார்கள். ராமானுஜர் முதிய வயதில் காவிரியில் நீராடச் செல்லும்போது மேற் குலத்தார் ஒருவரைப் பிடித்தபடி நடப்பாராம். நீராடித் திரும்பும்போது பிள்ளை உறங்கா வில்லி தாசரின் தோளைப் பற்றி வருவாராம். வியந்து தயங்கிய சீடர்களிடம், "இவரே நமது ஸ்பரிசவேதி. தொட்டது எதையும் பொன்னாக்கும் பெரியவர்" என்று உற்சாகமாகச் சொல்வாராம்.

விசித்திர ஊடல்

பிள்ளை உறங்கா வில்லி தம்பதியிடம் ராமானுஜர் தனிப் பரிவு காட்டு


வதாகச் சீடர் குழாம் முணு முணுத்த போது, அவர்கள் சிறப்பை உணர்த்த ராமானுஜர் அவர்களைச்சோதித்து ஒரு நாடகம் நடத்தினார்.

பொன்னாச்சி உறங்கும்போது அவர் அணிந்த நகைகளைக் கழற்றி வருமாறு சில பாகவதருக்குப் பணித்தாராம். அவர்கள் அப்படியே செய்தார்கள். ஒரு புறம் ஒருக்களித்தபடி படுத்திருந்த பொன்னாச்சியின் ஒரு பக்கக் காதணி, கை வளை போன்றவற்றையே கழற்ற முடிந்தது. பாகவதர்கள் இப்படிச் செய் கிறார்களே, ஏதோ விசேஷம் என்று பொறுத்திருந்த பொன்னாச்சி அவர்கள் எல்லாம் கழற்றி முடிந்ததும், மறுபுறத்து ஆபரணங்களையும் எடுத்துக் கொள்ள வசதியாகப் புரண்டு படுத்தார். இவர் கள் விழித்துவிட்டதாக எண்ணி வந்தவர்கள் ஓடிவிட்டனர்.

வெளியிலிருந்து திரும்பிய பிள்ளையுறங்கா வில்லியிடம் இதனைத் தெரிவித்ததும் அவர் சினந்தார். "நீ புரண்டுபடுக்க வேண்டுமா பாகவதர்கள் எடுக்க? நீயே வலியக் கழற்றித் தந் திருக்க வேண்டாமோ?" என்று சீறி னார். இந்த ஊடல் ராமானுஜர் காதுக்கு எட்டவே, அவர் பாகவதர் களை அழைத்து, "பாருங்கள், நீங்கள் மடத்தில் ஏதோ சிறு துணியை இழந்த தற்கு ஒரு நாள் கலவரம் அடைந்தீர்கள், இந்தப் பக்தன் பாகவதரிடம் எவ்வளவு அபிமானம் வைத்திருக்கிறான், பாருங் கள். களவாட வந்தவரிடம் தானே ஏன் வலிய பொருளை கழற்றிக் கொடுக்க வில்லை என்று மனைவியைக் கடி கிறான். இதனால்தான் இவன்பால் நமக்குப் பரிவு" என்று விளக்கி, பொன்னாச்சியையும் அவள் கணவரை யும் பிணக்கு நீக்கி இணைத்து வைத் தாராம்!

வடுகனின் 'பெருமாள்'!

வடுகநம்பி என்பவர் ஸ்ரீராமா னுஜருடைய சீடர் குழாத்தில் இருந்தார். இவர் ராமானுஜருடைய பாதுகை களையே தினமும் தொழுது வருபவர். ஒரு முறை பயணக்காலத்தில் ராமா னுஜர் தாம் திருவாராதனம் செய்யும்




பெருமாள் விக்கிரகம் அடங்கிய பேழையை வடுக நம்பியின் பொறுப்பில் விட்டிருந்தார். பயண முடிவில் மூட் டையை அவிழ்க்கப் பெருமாள் விக் கிரகப் பேழையுடன் ராமானுஜர் பாது கைகளும் ஒன்றாக இருக்கக் கண்டார்.

"என்ன இது வடுகா?" என்று கேட்க, "தாங்கள் வணங்கும் பெருமாளுக்கு, நான் வணங்கும் பெருமாளுக்கு வந்த குறை என்ன?" என்று கேட்டாராம்.

இங்ஙனமே மற்றொரு முறை திரு வரங்கக் கோயிலில், "வடுகா! அரங் கன் கண்ணழகைப் பாராய்" என்று ராமானுஜர் கூற, வடுக நம்பி, ராமானுஜர் திருக்கண்களைப் பார்த்து, "என் அமுதனைக் கண்ட கண்கள் மற் றொன்றினைக் காணாவே" என்றாராம்!

மற்றொரு நாள் தம் ஆச்சாரியருக் காக பாங்காகப் பாலைக் காய்ச்சிக் கொண்டிருக்கையிலே திருவீதிப் புறப் பாட்டில் பெருமாள் எழுந்தருள, "வடுகா, பெருமாளைச் சேவிக்க வா!" என்று ராமானுஜர் அழைத்தார். வடுக நம்பி, "உம்முடைய பெருமாளைச் சேவிக்க வந்தால் என்னுடைய பெரு மாளுக்குக் காய்ச்சி வரும் பால் பொங்கி விடுமே!" என்று மறுத்து விட்டார்!



என்னிலும் சிறியவன் யாரும் இல்லை!

ஆளவந்தாரின் சீடர்களில் ஒருவர் திருமலை நம்பி என்ற அன்பர். திரு மலைக் கோயிலில் பணி புரிவது ஒரு பெறும்பேறு என்று இளமையிலேயே அங்கே குடியேறியவர்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு ராமா னுஜர் திருமலைக்கு வந்தபோது திரு மலை நம்பிக்குத் தள்ளாத வயது. ஆயி னும், முதிய வயதில் அவரே முன்வந்து ராமானுஜரை எதிர்கொண்டார்.

இவரை வணங்கிய இராமானுஜர், "சுவாமி! இவனுக்காகத் தேவரீர் இவ் வளவு தூரம் எதிர்கொண்டு வர வேண்டுமோ? யாரேனும் சிறியாரை விடலாகாதா?" என்று அடக்கமாகக் கேட்டார்.

நம்பிகள் புன்னகை செய்தார்.

"அப்பனே! இந்தத் திருவேங்கடப் பதியிலே நாலு வீதியிலும் ஆராய்ந்து பார்த்தேன். என்னைவிட மிகவும் சிறியவர் இல்லாததால் நானே வந் தேன்" என்றார் பெரியவர்!

* * *

மற்றும் பெரிய நம்பி, கூரத் தாழ்வான் போன்ற பரம பாகவதர்களின் வாழ்க்கைகள் பல தியாக நிகழ்ச்சிகள் நிறைந்தவை. ராமானுஜரின் சித்தாந் தங்கள் வாதத்தாலும் அறிவு பூர்வ மாகவும் மட்டுமன்றி, வாழ்க்கை உதா ரணங்களாலும் உணர்ச்சி பூர்வமாகவும் பரவ உதவிய வாழ்க்கைகள் இவை.



நான்கு நாட்கள் போவது நான்கு யுகமாகப் பட்டது ராஜ்ய வர்த்தனனுக்கு. அவன் உடன் இருந்த வீரர்களுக்கு இது ஆச்சரியமாக இருந்தது. அவரிடத்தில் ஏதோ ஒரு மாற்றம் கண்டனர். எதையோ அவர் நாடி ஏங்குவது தெரிந்தது. பௌர்ணமியும் வந்தது. மேகம் ஏதும் இன்றித் தெளிவான வானில் நிலா முழுமையாக வெளிப்பட்டது. ராஜ்ய வர்த்தனன் தன்னந்தனியாக அவசர அவசரமாக எங்கோ கிளம்புவதைக் கண்ட வீரன் உடைவாளையாவது ஏந்திச் செல்லுங்கள் என்று மறந்துபோன வாளை எடுத்து நீட்டினான். ராஜயவர்த்தனனுக்கு அதில் கருத்தே செல்லவில்லை. இருப்பினும் அதை அலக்ஷியமாக வாங்கி இடையில் செருகிக் கொண்டான். தனது குதிரை மீது தாவி வேகமாகச் சென்று மறைந்தான்.

ராஜ்ய வர்த்தனன் அந்தப் பூங்காவில் வந்து இறங்கிய போது, அவனை அதிகம் காக்க வைக்க விரும்பாதவள் போல், தேவியும் அவளது சேடியும் அங்கு நின்று கொண்டிருந்தனர். ராஜ்யவர்த்தனன் அவள் அருகில் செல்ல, எங்கு செல்கிறோம் என்றே தெரியாத நிலையில் இருந்தான். இம்முறை அவனால் வாளாயிருக்க முடியவில்லை. தேவியின் மென்மையான கரத்தைக் கையில் எடுத்துக் கொண்டான். அவளும் தன்னை அவனுக்கே முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவளாகவே அவனை அன்போடு பார்த்தாள். அருகில் இருந்த சேடி மெல்ல சொல்லத் தொடங்கினாள். "அரசகுமாரா! இந்தப் பெண் தேவியும் உங்களை உயிராக நேசிக்க ஆரம்பித்து விட்டாள். அவள் யாரென்று தெரிந்தால் நீங்கள் மணக்க மறுத்து விடுவீர்களோ என்ற ஐயம்தான் உங்களை நான்கு நாட்கள் கழித்துக்காணக் கேட்டது" என்றாள். "யாராயிருந்தாலும் இப்பெண்ணை நான் மணக்கத் தயங்கேன்" என்று கூறியவன் அப் பெண்ணின் கரத்தில் "இது சத்யம்" என்று சத்யமே செய்து கொடுத்து விட்டான். தேவியின் முகம் நிலவைக் காட்டிலும் பிரகாசமாக ஒளிர்ந்தது. அவளது சேடி மட்டும் ஏதோ தயங்குவது தெரிந்தது. "அரச குமாரர்கள் சத்யம் தவற மாட்டார்கள் என்று அறிவோம். அதனால் நீங்கள் அவசரப்பட்டு விட்டீர்களோ என எண்ணுகிறேன்" என்றாள் சேடி. "அவசரப்படவில்லை. என் உள்ளத்து உணர்ச்சியைத்தான் வெளிக்கொட்டினேன்" என்றான் ராஜ்யவர்த்தனன்.

அப்பொழுதுதான் சேடி அவள் யார் என்பதை வெளிப்படுத்தினாள். "அரச குமாரா! இப் பெண் கௌட தேச அரசன் சசாங்கனின் அருமை மகள் தான்" என்றாள். அதைக் கேட்ட ராஜ்யவர்த்தனன் நெருப்பை மிதித்தவன் போல் ஓர் அடி பின்னே சென்றான். சில விநாடிகள் உலகமே ஸ்தம்பித்து நின்று விட்டது போல் தோன்றியது. சட்டென்று அருகில் சலசலவென்ற சத்தமும், யாரோ வருவது போன்ற சத்தமும் கேட்டுத் திடுக்கிட்டவன் நல்ல வேளையாகத் தான் கொண்டு வந்த வாளை உருவ விழைந்தான். "அரச குமாரா! வாளை உருவத் தேவையில்லை. அதற்கு இது சமயமல்ல" என்று கூறிக் கொண்டே இரு வீரர் அவன் முன் நின்றனர். அவர்கள் கௌட தேச வீரர்கள் என்பது தெரிந்தது.

"அரசகுமாரா! எங்கள் அரசர் சசாங்கர் தங்களுக்கு அனுப்பியுள்ள செய்தி இவ்வோலையில் உள்ளது" என ஓர் ஓலையை நீட்டினர். ராஜ்ய வர்த்தனன் சிங்கம் போல் சீறினான். "அந்தச் சசாங்கனை



சூடள்முக் கிளி

வித்யாவாசஸ்பதி டாக்டர் இரா. நாகசாமி

அடியோடு ஒழிக்க வேண்டும் என்றல்லவா நான் வந்திருக்கிறேன். அவன் எனக்குச் செய்தி அனுப்புவதா?" என்று கூறினான். தமது அரசனைச் துச்சமாகப் பேசுவதைக் கேட்ட வீரர்கள் கோபம் கொண்டு வாளை உருவினர். "ராஜ்ய வர்த்தனர் தன்னந்தனியாக நிற்கிறார் என்று எண்ணி விடாதீர். இதோ அவரே அறியாது உடன் வந்திருக்கிறோம்" என ராஜ்யவர்த்தனனின் சேனாபதி சிம்மநாதனும், அவந்தியும் உருவிய வாளை ஏந்திப் பாய்ந்தனர். ராஜ்யவர்த்தனன் அவர்களைத் தடுத்து நிறுத்தி, "சிம்மநாதா! நீ எப்படி இங்கு வந்தாய்?" என்று கேட்டான். "அரசகுமாரா! இப்படி ஏதோ நடக்கும் எனக் கருதித்தான் உம்மைப் பின் தொடர்ந்து வந்தோம்" என்றான்.

கௌட வீரர்கள், "அரசகுமாரா! எங்கள் அரசர் நட்புக் கரத்தை நீட்டுகிறார். அவசரப்படாது ஓலையைப் படிக்க வேண்டுகிறோம்" என்றனர்.

அவர்கள் கையிலிருந்த ஓலையைச் சிம்மநாதன் வாங்கி வாசிக்கத் தொடங்கினான். "தானேச்சுரச் சக்ரவர்த்தி ராஜ்யவர்த்தனருக்குச் சசாங்கன் எழுதும் ஓலை. முதலிலேயே ஒன்று குறிக்க விரும்புகிறேன். தங்கள் குடும்பத்துக்கும், தேசத்துக்கும், என்னால் ஏற்பட்ட துன்பத்துக்கும், இழப்புகளுக்கும் மன்னிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். என்னடா கௌட தேச சக்ரவர்த்தி சசாங்கனா இவ்வாறு எழுதுகிறான் என்று தோன்றுகிறதல்லவா? ஆம். நடந்தவற்றிற்காக வருந்தி மன்னிக்க வேண்டுகிறேன். மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். கடந்தவற்றை மறந்து விடுங்கள். என் அருமை மகள் தேவி தங்களைச் சந்தித்ததும், தங்கள் மீது ஆறாக் காதல் கொண்டதும் அறிந்தேன். அப்பெண்மீது யான் கொண்டுள்ள அன்பு அவளது இன்பமே என் குறிக்கோள்" என்று அவ்வோலையைச் சிம்மநாதன் வாசித்துவர, ராஜ்யவர்த்தனன் தேவியை நோக்கினான். "என்னைக் காக்க நீங்கள் இது செய்யக் கூடாதா" என தேவி கேட்பது போலிருந்தது. ராஜ்ய வர்த்தனனின் கோபம் தணிய ஆரம்பித்துவிட்டது என்பதைச் சிம்மநாதன் உணர்ந்தான். 'மேலே படி' என்றான் ராஜ்ய வர்த்தனன். "நான் செய்த பாவங்களை எல்லாம் போக்க என் அருமை மகளைத் தங்களுக்கு மணம் செய்து தர விரும்புகிறேன். இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என மீண்டும் இறைஞ்சுகிறேன்" என்று அதில் உள்ளதைக் கேட்ட ராஜ்ய வர்த்தனன் தான் தேவிக்குக் கொடுத்த சத்யத்தையும் நினைந்து பார்த்தான்.

சசாங்கன் மேலும் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தான். "ஆம்! நான் யாசித்து வேண்டுவது ஒன்றும் உண்டு தங்களை அழைக்க எனது கோட்டைக் கதவுகள் என்றும் திறந்திருக்கும். என் வீரர்கள் தங்களை அடிபணிந்து வரவேற்பார்கள். தங்களது வீரத்தையும், போர்த் திறனையும் எங்கள் நாட்டு வீரர்கள் கண்டு அஞ்சுகின்றனர். ஆதலில் தாங்கள் மட்டும் வருவீர்களானால் நான் அதைப் பெருமையாகவே கருதுவேன். தாங்கள் அதற்காக எவ்வித நிபந்தனை விதித்தாலும் நான் ஏற்கக் காத்திருக்கிறேன். தாங்கள் இங்கு வந்ததும் நாம் நட்பு உடன்படிக்கை செய்து கொள்வோம். பிறகு தங்கள் சித்தம். சசாங்கன் எழுத்து" என்று ஓலையில் இருந்தது.

இதை வாசித்து முடித்த சிம்மநாதன் ராஜ்ய வர்த்தனனைப் பார்த்தான். ராஜ்ய வர்த்தனன் தேவியைப் பார்த்தான். அவள் கண்களில் ஏற்க மாட்டீர்களா என்று கெஞ்சுவது போன்ற கலங்கிய பார்வையைக் கண்டான். சேடி முன் வந்து, "அரசகுமாரா! இதை ஏற்றுக் கொள்ள மாட்டீர்களா?" என்றாள். ராஜ்யன் மீண்டும் தேவியின் கரத்தைப் பற்றினான். "தேவி! உன் தந்தையை உனக்காக மன்னித்து விட்டேன். அவர் அழைப்பை ஏற்றுக் கொள்கிறேன். நான் உங்கள் அரண்மனைக்கு வருகிறேன்" என்று வாக்களித்தான். அருகில் நின்ற சேனாபதி சிம்மநாதன் துணுக்குற்றான். என்ன அரசர் இவ்வாறு வாக்களித்து விட்டாரே? என்று, "அரசே" என ஏதோ சொல்ல வாயெடுத்தான். ராஜ்ய வர்த்தனன் அவனைத் தடுத்து, "இன்றைக்கு எட்டாம் நாள் நான் கௌட அரசனின் அரண்மனைக்குச் செல்ல ஏற்பாடாகட்டும்" என்று ஆணையிட்டான். தேவியும், சேடியும், கௌட வீரர்களும் திரும்பினர்.

எட்டு நாட்கள் உருண்டு ஓடின. ராஜ்ய வர்த்தனன் கிளம்பினான். அவனுடன் சிம்ம நாதனும் சில வீரர்களும் உடன் சென்றனர். கௌட அரசனின் கோட்டைக் கதவுகள் திறந்தன. ராஜ்ய வர்த்தனனை வெகு அன்போடு அழைத்தனர். அரண்மனை வாயிலை நெருங்கிய ராஜ்ய வர்த்தனன் எதிர் பார்க்கவே இல்லை. சசாங்கனே அவனை எதிர் கொண்டழைக்க நின்று கொண்

உன்மீதே உனக்கு நம்பிக்கை இல்லையெனில்
உன் சொல்லும் செயலும் எப்படி சிறப்பு பெறும்?

டிருந்தான். அவனுடன் மாளவ அரசனும் நின்று கொண்டிருந்தான். இருவரும் அருகில் நிற்க அரச மரியாதையோடு அவனை வரவேற்றனர். ராஜ்ய வர்த்தனனுக்குக் கிடைத்த வரவேற்பைக் கண்டு சிம்மநாதனே அசந்து போய்விட்டான். "வாக்குத்தவறாது வந்த உம்மைப் பாராட்டுகிறேன்" என்று ராஜ்யவர்த்தனனை உள்ளே அழைத்துச் சென்றான். சிம்மநாதனும் மற்ற தானேச்வர வீரர்களும் வெளியே நின்றுவிட்டனர்.

உள்ளே சென்ற ராஜ்ய வர்த்தனனும், சசாங்கனும் சிறிது நேரம் மனம் விட்டுப் பேசிக் கொண்டு இருந்தனர். ஒருவரை ஒருவர் அழிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தவர்களா இப்படி அளவளாவுகிறார்கள் என்று அதிசயிக்கும்படி இருந்தது அவர்கள் சந்திப்பு. விருந்து உண்டு பின்னர் பேசலாமே என சசாங்கன் ராஜ்ய வர்த்தனனை அழைத்தான். அவன், சசாங்கன், மாளவ அரசன் ஆகியோர் விருந்துண்ண அமர்ந்தனர். முன்னர் பூங்காவிலே சந்தித்த சேடி அங்கு தோன்றினாள். அவளிடம் தேவியை அழைத்து வரக் கூறினான் சசாங்கன். விருந்து தொடங்குமுன் சசாங்கனின் நண்பன், "தானேச்வர அரசர்கள் இப்படித்தான் இருப்பார்களோ" என்று கூறியது ராஜ்ய வர்த்தனனுக்குப் பிடிக்கவில்லை. திரும்பிப் பார்த்தான். தேவி வந்து கொண்டிருந்தாள். சசாங்கன் கடகடவென்று சிரித்தான். அவன் சிரிப்பும் அருவருக்கத் தக்கதாக இருந்தது. ராஜ்ய வர்த்தனன் மீண்டும் சுற்றிலும் பார்த்தான். சசாங்கன் எழுந்தான். "ராஜ்ய வர்த்தனா! இதோ நான் கொடுக்கும் பரிசு" என்று ஒரு கணத்தில் தன் வாளை உருவி ராஜ்ய வர்த்தனனின் தலையை வெட்டி வீசினான். உள்ளே வந்த தேவியின்மீது ராஜ்ய வர்த்தனனின் தலை போய் வீழ்ந்தது. தேவி இதை எதிர்பார்க்கவில்லை. "அப்பா! என்ன செய்து விட்டீர்கள்?" என்று அலறினாள். சசாங்கன் மீண்டும் சிரித்தான். பாலைக் காட்டில் ஆந்தை அலறல் போலிருந்தது அவனது சிரிப்பு. "சசாங்கனை அழிப்பானாம், சபதம் செய்தானாம் மடையன். போரில் இவனை வெல்ல முடியாது என்பது என்னவோ உண்மை. அதனால் தான் இவனை வஞ்சித்துக் கொன்றேன்" என்று மீண்டும் கடகடவென ஏளனமாகச் சிரித்தான். ஒரு பாவமும் அறியாத தேவி, இப்படி ஒரு முடிவு வரும் என எதிர்பாராது, "இவரை நயவஞ்சகமாகக் கொன்றுவிட்டீர்களே" என்று தந்தையை நோக்கிக் கதறினாள். "ஆட்சியில் இருப்பவர் தம்முடைய, ஆட்சிக்காகத் தமது மகளே

ஆயினும் அழிக்கத் தயங்க மாட்டான்" என்று கூறிக் கொண்டே சசாங்கன் அவளைத் தரதரவென்று இழுத்துச் சென்று ஓர் அறையில் தள்ளி விட்டு மீண்டும் சிரித்தான்

அரண்மனையின் உள்ளே நடந்த செய்தி மெல்ல வெளி வரத் தொடங்கியது. வெளியில் இருந்த சிம்மநாதனும், தானேச்வர வீரர்களும் இது கேட்டு யாது செய்வதென்று தெரியா மல் திகைத்தனர். தமது அரசனின் கொலைக்குப் பழிவாங்க வேண்டுமாயின் இங்கு இப்பொழுது சண்டையிட முடியாது என அறிந்தனர். குதிரைமீது தாவிப் பறந்தனர். சசாங்கனின் சூழ்ச்சி யாருக்கும் தெரியாது. ஆதலின் கோட்டைக் கதவுகள் இன்னும் திறந்தே இருந்தன. கோட்டைக் காவலர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தவில்லை.

வீரர்கள் நேரே தானேசுவரத்துக்கு விரைந்தனர். ஹர்ஷன் இருக்குமிடம் வந்து நின்றான் சிம்மநாதன். சோகமே உருவாக நின்ற அவனை ஹர்ஷன் கண்டான். "சிம்ம நாதா! மாளவ அரசன் ராஜ்ய வர்த்தனரிடம் படு தோல்வியுற்றுப் புறமுதுகிட்டு ஓடினான் என்ற செய்தி வந்ததே. அண்ணன் சசாங்கன் மீது பாய்ந்து சென்றாரே. சசாங்கன் ஒழிந்தானா?" என்று கேட்டான் ஹர்ஷன். சிம்ம நாதனுடன் குந்தளனும் நின்று கொண்டிருந்தான். ராஜ்ய வர்த்தனின் உயிர் நண்பன் குந்தளன். துக்ககரமான அச் செய்தியை அவன்தான் எடுத் துரைத்தான். "ஹர்ஷ! யசோ மதியின் புதல்வரும் பிரபாகர வர்த்தனரின் அன்புத் தனயரும் பிறருக்கு உதவுவதையே தன் குறிக்கோளாகக் கொண்டவரும் பரம ஸௌகதரும் (பௌத்தரும்) பரம பட்டாரகருமான தங்கள் தமையனார் ஸ்ரீராஜ்ய வர்த்தன மஹா ராஜாதிராஜர், சசாங்கனை நம்பினார். சசாங்கன் தன் மகளை அவருக்கு மணம் செய்து கொடுப்பதாக ஆசை வார்த்தை காட்டி நய வஞ்சகமாகத் தன் அரண் மனைக்குத் தனியாக வரச்செய்தான். தான் கொடுத்த வாக்கைக் காப்பதற்காக ராஜ்ய வர்த்தனர் அங்கு சென்றார். அங்கு அவரை வஞ்சகன் கொன்று வீசினான் பாவி. ராஜ்ய வர்த்தனர் இறந்துவிட்டார்" என்று குந்தளன் கூறி முடிப்ப தற்குள் பேரிடி வீழ்ந்ததென "அண்ணா" எனக் கதறி வீழ்ந் தான் ஹர்ஷன். அவன் மூர்ச்சை தெளிந்து எழுந்தபோது அமைச்சர் குழு "இனி வருந்திப் பயனில்லை. கௌட அதமன், கௌட விஷப்பாம்பு சசாங் கனைத் தீர்த்துக் கட்டுவேன் என சத்யப் பிரதிக்ஞை எடுத்துக் கொள். அந்த நய வஞ்சகனை அழிக்கப் புறப்படு. அதற்கு முன்னதாக தானேச் சுரத்தின் அரசனாக முடி சூட்டிக் கொள்" என்று கூறியது.

சில நாட்களில் ஹர்ஷன் தானேச்சுரத்தின் அதிபதியாக முடிசூட்டிக் கொண்டான். அதன் முன்னர் தனது இஷ்ட தெய்வமான சிவபெருமானை நீல லோஹிதரைப் பக்தியோடு வணங்கினான். பரம மாகேச்சு வரன் என்ற பட்டத்தை ஏற்று பின்னர் முடிசூடினான். அவனுக்கு முடிசூடியதும் ஹர்ஷ வர்த்தன சிலாதித்யன், மகா ராஜாதிராஜ என்ற பட்டம், பட்டாபிஷேகத்தின் போது அளிக்கப்பட்டது.

பின்னர் கௌட தேசத்தின் மீது போர் முரசு கொட்டினான். அப்பொழுது அருகிலிருந்த சிம்ம நாதன் "அரசே இங்கு ஒன்று கூறக் கடமைப்பட் டிருக்கிறேன். அரச குடும்பத் தினர் பெண்கள்மீது காதல் கொள்ளும்போது தங்கள் கடமையை மறந்துவிடக் கூடாது. அதன் காரணமாக அந்நாட்டு மக்களுக்குத் துன்பங்கள்தான் நேரும். தன் நாட்டு மக்களின் நன்மைக்காகத் தனது சொந்த இன்பங்களைத் தியாகம் செய்ய வேண்டியது அரச குலத்தோர் கடமை. ஏன், நாட்டைக் காக்க, நாட்டு மக்களைக் காக்கத் தனது உயிரையேகூட கொடுக்க வேண்டுமல்லவா. இது தங்களுக்குத் தெரியாததல்ல! இருப் பினும் நினைவுபடுத்துவது என் கடமை" என்றான். ராஜ்ய வர்த்தனன் அப்பெண்மீது கொண்ட அன்பால் தனியனாகச் சென்று, வஞ்சகர் வலையில் வீழ்ந்து மாண்டதைச் சுட்டிக் காட்டுவதாக அது அமைந்தது. ஹர்ஷ வர்த்தனன் அவ்வறிவுரையில் இருந்த உண்மையை அறிந்தான். அந்த உரை அவன் மனத்தில் ஆழப் பதிந்தது.

ஹர்ஷன் படையை நடாத்திப் பல காதம் முன்னேறினான். எதிரில் அவனது மாமனும் முது அமைச்சனுமான பாண்டன் வந்து கொண்டிருந்தான். முன்னர் ராஜ்யவர்த்தனனோடு போருக்குச் சென்றவன் அவன். மாளவ அரசனைத் துரத்தியடித்து அவனது பொன் பண்டாரங்களை ராஜ்யவர்த்தனன் கைப்பற்றியதைக் கொண்டு பாண்டன் வந்து கொண்டிருந்தான். ஹர்ஷன் அவனைக் கண்டதும் வணங்கினான். பாண்டன் அவனிடம் ஒரு முக்கிய செய்தியைக் கூறினான். அவனது அருமைத் தங்கை ராஜ்யஸ்ரீ, சிறையில் கிடந்தாளல்லவா. அவளது நாட்டை ஸ்கந்தகுப்தன் என்ற ஒரு மன்னன் முற்றுகையிட்டான். அவ்வமயம், சிறையில் வாடிய ராஜ்யஸ்ரீ உற்ற நண்பர் ஒருவரின் உதவியோடு சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டாள் என்றும், அவ்வமயம் எங்கு இருக்கிறாள் என்று தெரியவில்லை என்றும் விந்திய மலைக் காடுகளில் எங்கோ ஒளிந்து இருக்கலாம் என

ஹேஷ்யம் என்றும் பாண்டன் கூறினான். ராஜ்யஸ்ரீயை விடுவித்துக் கௌடனைக் கொன்று குவிக்கவல்லவோ தான் கிளம்பினான். ராஜ்யஸ்ரீ எங்கிருக்கிறாள் என்றே தெரியாதா? ஹர்ஷனால் தன் சகோதர பாசத்தை மறைக்க முடியவில்லை. "ராஜ்யஸ்ரீ - ராஜ்யஸ்ரீ" என்று அலறிய அவன் ஒரு முடிவுக்கு வந்தான். தன் மாமன் பாண்டனிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தான்.

"மாமா! நீங்கள் சசாங்கன் மீது படையை நடத்திச் செல்லுங்கள். நான் விந்தியக் காடுகளில் தேடி ராஜ்யஸ்ரீயை மீட்டு வருகிறேன்" என்றான். பாண்டன் படையுடன் கௌடம் புகுந்தான். ஹர்ஷ வர்த்தனனோ, தேர்ந்தெடுத்த சில வீரர்களை மட்டும் அழைத்துக் கொண்டு விந்தியக் காடுகளில் புகுந்தான். பல நாட்களாகத் தேடியும் எவ்விதத் தடயமும் கிடைக்கவில்லை. ஒருநாள் வியாக்ர கேது என்ற ஒரு கானகத் தலைவன் எதிரிலே தோன்றினான். அவன் ஹர்ஷனை வணங்கினான். அப்பகுதியில் "திவாகர கேது" என்ற பௌத்த பிக்ஷு ஒருவர் வசிப்பதாகக் கூறினான். ஹர்ஷ வர்த்தனன் அக்காட்டில் திவாகர கேதுவைக் கண்டு வணங்கினான். திவாகர கேதுவைக் கண்டதும் அவனை ஹர்ஷன் அடையாளம் கண்டு கொண்டான். தனது சகோதரியின் கணவனின் பால்ய நண்பன் தான் அந்த திவாகர கேது. தான் ஒரு பௌத்த பிக்குவாக மாறி அக்காட்டில் வசித்து வருவதை அறிந்த திவாகர கேதுவிடம் தன் வரலாற்றைக் கூறிக் கொண்டிருந்தான் ஹர்ஷன். அவ்வமயம், அப்பிக்குவின் சீடன் ஒருவன் ஓடிவந்து அருகில் காட்டு மத்தியில் ஒரு பெண் தீப்பாய ஏற்பாடுகள் நடப்பதாகக் கூறினான். அது கேட்ட பௌத்த பிக்ஷுவும், ஹர்ஷனும் அவ்விடத்துக்கு விரைந்தனர். அங்கு சென்ற ஹர்ஷனுக்கு ஓர் அதிர்ச்சியே காத்துக் கொண்டிருந்தது. தான் யாரைத் தேடிக்கொண்டு வந்தானோ அதே தனது சகோதரி ராஜ்யஸ்ரீதான் அங்கு நின்று கொண்டிருந்தாள். அவள்தான் தன் துயருற்ற வாழ்வுக்கு முடிவு வைத்துக் கொள்ள தீப்பாயத் தயாராக இருந்தாள். ஹர்ஷன் ஓடிச் சென்று தன் தங்கையைக் கட்டிக்கொண்டு "ராஜ்யஸ்ரீ" என்று பலமாக அழைத்தான். தன் கண்களில் நீர்மல்க அவனைப் பார்த்தாள் ராஜ்யஸ்ரீ. அவள் பிரிவுக்குப் பின்னர், - அந்த அரச குடும்பம்தான் எவ்வளவு துன்பங்களைக் கண்டுள்ளது. பிரபாகர வர்த்தனர் இறந்தார். அவர்களது தாய் தீப்பாய்ந்தாள். ராஜ்யஸ்ரீயின் கணவன் போரில் கொல்லப்பட்டார். ராஜ்யஸ்ரீ சிறையில் தள்ளப்பட்டாள். ராஜ்ய வர்த்தனன் வஞ்சித்துக் கொல்லப்பட்டான். அக் குடும்பமே அல்லவா சீரழிந்து நின்றது. இச் செய்தி அனைத்தும் அறிந்த ராஜ்யஸ்ரீக்கு வ
வேண்டும் என்ற எண்ண
போயிற்று. ஹர்ஷனும் தி
கர மித்ரனும் அரும்பாடுப
ராஜ்யஸ்ரீ தீப்பாயாது தடு
நிறுத்தினர். பௌத்த பிக்
யாகவாவது மாறவேண்
என்று அவளே விரும்பினா
ஆனால் திவாகர மித்
அவளை ஹர்ஷனுடன் செ
மாறு அறிவுரை வழங்கினா

தன் சகோதரியுடன் தி
பிய ஹர்ஷனுக்கு, சசாங்க
தோற்கடிக்கப்பட்டான் எ
செய்தி வந்தது. ஹர்
ராஜ்யஸ்ரீயை கன்யாகுப்ஜ அ
ராக முடிசூட்டினான். உண்
தான்; அப்பெண்ணைத்தான்
அரசனாக்கினான்.

ஆம்! இதுகாறும் ந
படித்த அனைத்தும் கதையல்
தானேச்வர மன்னன் ஹ
வர்த்தனன், அவனது அ
ணன் ராஜ்ய வர்த்தனன் ஆ
யோருடைய அரசாஸனங்கள
குறிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிக
அனைத்துமே. அது மட்டுமல்
சீனத்திலிருந்து வந்த ஹுவா
சுவாங்கும் இந்நிகழ்
களைக் கூறியுள்ளார். ஹ
னுடைய அவைக்குள் புலவ
பாண பட்டர் என்ற கவிஞ
ஹர்ஷ சரிதம் என்னும் நூலி
இவை யனைத்தையும் குறி
துள்ளான். இங்கு குறி
துள்ள நிகழ்ச்சிகள் அனை
தும், பெயர்கள் அனைவரு
உண்மையானவை. வரலாற்
நடைபெற்றவைதாம்.

(முற்றும்)

"இப்போது எனக்கு எந்தப் பிணியும் இல்லை"

—புவனேஸ்வரிதாசன்

பம்பாயில் செம்பூரில் வசிப்பவர் செல்லம்மாள். வசதியான குடும்பம். இரண்டு மகன்கள், ஒரு மகள். பெரிய மகன் பாதுகாப்புத் துறையில் பெரிய பதவி வகிப்பவர். இரண்டாவது மகன் இன்ஜினியர். பெண் பெங்களூரில் கணவரோடு இருக்கிறார்.

செல்லம்மாளுக்கு லலிதாம்பிகை மீது பக்தி அதிகம். லலிதா ஸஹஸ்ரநாமத்தை வெள்ளிக்கிழமைதோறும் பாராயணம் செய்வார். லலிதாம்பாள் சோபனம், ராஜேஸ்வரி அஷ்டகம் இவைகளை முணுமுணுத்தபடியே எல்லாக் காரியங்களையும் தொடங்குவார். சாந்தியும், இன்பமும் நிறைந்து விளங்கிய செல்லம்மாள் குடும்பத்தில் சாந்திக்குப் பதில் அசாந்தமும், இன்பத்திற்குப் பதில் துன்பமும் புகுந்தது.

இரண்டாவது மகன் ராஜாவுக்கு ஏற்பட்ட பிரச்னைதான் அது. படிப்பை முடித்து வேலைக்குச் செல்லும் தருணத்தில் உடம்பெல்லாம் தோல் வியாதி வந்தது. திட்டுத் திட்டாய் தோலில் வெடிப்பு. அதிலிருந்து சீழ் வடியும். ரணமாய் ஆறாத புண். இருபத்தேழு வயதில் இப்படி.

ராஜா முழுக்கை சட்டை, பேண்டோடுதான் இருப்பார். முகம் கைவிரல்கள், பாதங்கள் தவிர எல்லா அங்கத்திலும் மேலும் கீழுமாய் ரணத்தின் வேதனை. பக்கவாட்டிலும் படுக்க முடியாது. மல்லாந்தும், கவிழ்ந்தும் படுக்க முடியாது. தூக்கத்திற்குப் பதில் துக்கம்தான் ராஜாவுக்கு.

ஒரு நர்சிங்ஹோமே வீட்டில் தனி அறையை ஆட்கொண்டது. தனி அறை, தனி உடை, தனியாக எல்லாம். வெளிவாசலுக்குச் செல்ல முடியவில்லை. யாரோடும் பழக முடியவில்லை.

செல்லம்மாள் புழுவாய்த் துடித்தார். ராஜாவின் வியாதியினால் குடும்பமே நிம்மதி இழந்தது. ஒரு நாளா? இரண்டு நாளா? நான்கு வருடங்கள். செல்லம்மாள் அமுதசுரபி வாசகி. ஆன்மிகக் கட்டுரைகளைத் தொடர்ந்து வாசிப்பவர்.

புவனேஸ்வரியின் லீலா வினோதங்களைப் படித்ததைத் தொடர்ந்து பரமஹம்ஸ ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகளைத் தரிசித்து, தனது கோரிக்கையைத் தெரிவிக்க வேண்டுமெனத் தணியாத ஆவல்.

இந்தச் சமயம் பம்பாய் காட்கோபரில் நவராத்திரி உத்ஸவம் நடத்துவதற்குப் புவனேஸ்வரி ஸ்வாமிகள் எழுந்தருளுவதாய் தகவல் செல்லம்மாளுக்குக் கிடைத்தது.

நவராத்திரி முதல் நாள் மகன் ராஜாவுடன் செல்லம்மாள் புவனேஸ்வரி ஸ்வாமிகளின் திருவடியில் கிடந்து கண்ணீரைக் காணிக்கையாக்கி, அதன் மூலமே தனது வேதனையைத் தெரிவித்தார்.

"பயப்பட வேண்டாம். புவனேஸ்வரி "ஸர்வ வியாதி வினாசினி, ரோக நிவாரணி, துக்க நிவாரணி" உன் குழந்தை ராஜா ரோகம் நீங்கிக் குணம் பெறுவான். நவராத்திரி எட்டாம் நாள் துர்காஷ்டமி, அன்று மாலை ராஜாவை அழைத்து வா!" என்றார்.

துர்காஷ்டமியன்று பச்சிலை பரப்பப்பெற்ற பூமியில் ராஜாவை ஸ்வாமிகள் அமரச் சொன்னார். ராஜாவின் மேலும் பச்சிலை வைக்கப்பட்டது. தாலாட்டுப் பாடலைப் பாடினார் ஸ்வாமிகள். ராஜா மெய் மறந்தான். ஸ்வாமிகள் தானே முன்னின்று காய்ச்சிய தைலம். அதை புவனேஸ்வரிக்கு அபிஷேகம் செய்து அதைத் தயாராய் வைத்திருந்தார். அன்று அஷ்டமி தினத்தில் பூஜை முடிந்து, ராஜாவை எழுப்பி, "உனக்கு ஒன்றும் இல்லை. இந்தத் தைலத்தைத் தினமும் காலை மாலை இரு வேளையும் உடம்பு பூராவும் தடவிக் கொண்டு வா. தோல் வியாதி நீங்கி நன்றாய் குணமாவாய். கலங்க வேண்டாம்" என ஆசி கூறினார் ஸ்வாமிகள்.

ஒரு மாத காலம் ஸ்வாமிகள் திருவாக்குப்படிக்காலை மாலை என இருவேளையும் தைலத்தைத் தடவிக் கொண்டார் ராஜா. ஹோம பஸ்பத்தைத் தினமும் உள்ளுக்குக் கொடுத்தார் செல்லம்மாள். கொஞ்சம் கொஞ்சமாய் அரிப்பு நிற்கத் தொடங்கியது. ரணமாய் இருந்த புண் ஆறத் தொடங்கியது. நித்திரையே இல்லாமல் இருந்த ராஜாவுக்குத் தூக்கம் வர ஆரம்பித்தது.

"அம்மா எனக்கு இன்று ஒன்றும் இல்லை. ஏதோ தெம்பு வந்ததுபோல் இருக்கிறது. நான் இப்போது எந்த வேலையும் செய்வேன். எனக்கு எந்தப் பிணியும் இல்லை" – மகன் சொன்னபோது மகிழ்ந்து போனார்செல்லம்மாள்.

"அம்மா இன்று எனக்கு இண்டர்வியூ. நான் சென்று வருகிறேன்" என்று கூறிவிட்டு ராஜா இண்டர்வியூக்குச் சென்றபோது தேவியே பின்னால் செல்வதாக உணர்ந்தார். அதன் பின்னால் ஸ்வாமிகளின் கருணையமுது உறைந்து இருப்பதையும் உணர்ந்தார். ௐ



கத்தரித்து ஒட்டியது

லேடி ஆஸ்டர்: (சர்ச்சிலைப் பார்த்து) நான் தங்கள் மனைவியாக இருந்தால் தாங்கள் குடிக்கும் டீயில் விஷத்தைக் கலந்து விடுவேன்.

சர்ச்சில் : நான் தங்கள் கணவனாக இருந்தால் அந்த டீயைக் குடித்துவிடுவேன்.

❊

ஓர் இளவயதுத் தகப்பனார், தம் மூன்று வயதுப் பையனை மடியில் உட்கார வைத்துக் கொண்டு வாசலில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது ஒரு காக்கை எதிரே இருந்த மரத்தில் வந்து உட்கார்ந்தது. பையன் அதைப் பார்த்ததும் தகப்பனாரை நோக்கி, "அது என்ன அப்பா?" என்று கேட்டான்.

"அது காக்கை" என்றார் தகப்பனார். மீண்டும் பையன், "அது என்ன அப்பா!" என்று கேட்டான். "அது காக்கை" என்றார் தகப்பனார். ஆனால் பையன் அவரை விடவில்லை. மீண்டும் மீண்டும், "அது என்ன அப்பா!" என்று கேட்க, தகப்பனாரும் அலுக்காமல், "அது காக்கை" என்று பதில் சொன்னார்.

வருடங்கள் பரந்தன. பையன் பெரியவனாகிவிட்டான். தகப்பனார் கிழவராகிவிட்டார்.

ஒரு நாள் வீட்டிற்கு யாரோ வந்தார்கள். தகப்பனார் பையனைப் பார்த்து, "அது யார்?" என்று கேட்டார்.

அதற்குப் பையன், தகப்பனாரைப் பார்த்து? "உங்களுக்கு வேலை என்ன! போட்டதைச் சாப்பிட்டுவிட்டுச் சிவனே என்று இருக்காமல், அது யார், இது யார் என்று கேட்டுக் கொண்டே இருக்கிறது தான் வேலையா?" என்று கடிந்துகொண்டான்.

உடனே தகப்பனார், வருத்தம் தோய்ந்த குரலில், "அப்பா! நீ சின்னப் பையனாக இருந்தபொழுது, அது என்ன, இது என்ன என்று திரும்பத் திரும்பக் கேட்பாய். நானும் அலுக்காமல், அது காக்கை, அது காக்கை என்று திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறேன்" என்றார்.

❊

350 வார்த்தைகள் இருந்தால் போதும், அதை வைத்துக் கொண்டே எல்லாக் கருத்துகளையும் தெளிவாக உணர்த்த முடியும் என்று ஆங்கிலத் தில். 350 வார்த்தைகள் தனியாகப் பொறுக்கி வைத்திருக்கிறார்கள். இதற்கு "பேசிக் இங்கிலீஷ்" என்று பெயர்.

"இதே மாதிரி பேசிக் தமிழ் ஒன்று கண்டுபிடித்தவனால் அதில் இரண்டே இரண்டு வினைச் சொற்கள் மாத்திரம் இருந்தால் போதும்" என்று சொன்னார் அறிஞர் வ.ரா.

"எப்படி!" என்று கேட்டதற்கு, "தமிழர்கள் செய்வதெல்லாம் இரண்டே இரண்டு காரியங்கள் தானே! ஒன்று உண்பது, இன்னொன்று உறங்குவது. ஆக, இந்த இரு காரியங்களையும் தெரிவிக்க இரண்டு வினைச் சொற்கள் போதாதா!" என்று விடை அளித்தார்.

❊

சிறப்பு நகைச்சுவை நடிகரான ஸர் ஹெர்பாட் ட்ரீ, ஒரு சமயம் தம் நாடகக் கொட்டகையில் ஒரு நாடகத்தை ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு சாதாரணப் பாத்திரத்தை ஏற்றிருந்த ஒரு நடிகர் ஒரு வரியை உணர்ச்சியின்றி ஒப்பித்தார்.

ட்ரீ, அந்த நடிகரின் தவறைச் சுட்டிக்காட்டவில்லை. அதற்கு பதில், அந்த வரியை மேடையில் இன்னும் சற்று முன்னால் நின்று கொண்டு, சொல்லச் சொன்னார். அந்த நடிகரும் அப்படியேச் செய்தார்.

"இன்னும் சற்று முன்னால் நின்றுகொண்டு சொல்லுங்கள்" என்றார் ட்ரீ. நடிகரும், சற்று முன்னால் நின்று சொன்னார்.

"இன்னும் சற்று முன்னால் நின்று சொல்லுங்கள்"

நடிகரும் சற்று முன்னால் சென்றுசொன்னார்.

"இன்னும் சற்று முன்னால்" என்றார் ட்ரீ.

"இன்னும் சற்று முன்னால் சென்றால், நான் மேடையிலிருந்து கீழே விழ வேண்டியது தான்"

"அதுதான் என் நோக்கம்" என்றார் ட்ரீ.

உங்கள் ராசி பலன்

பாலஜோசியர் வித்துவான்
வே. லட்சுமணன்

புத சுக்	சூரி		கேது
செவ்	கிரகநிலை		
சனி			குரு (வ)
ராகு			

13.4.1992 முதல்

13.5.1992 வரை

கிரக மாறுதல்

26.4.1992 முதல் மேஷ - சுக்கிரன் **27.4.1992** முதல் மீன - செவ்வாய் **30.4.1992** முதல் குரு - வக்கிரநிவர்த்தி **7.5.1992** முதல் மேஷ - புதன்.

கிரக பாதசாரம் :

சூரியன் - அசுவினி 1 சந்திரன் - மகம் 2 செவ்வாய் - சதயம் 4 புதன் - உத்திரட்டாதி 1 குரு - மகம் 4 சுக்கிரன் - உத்திரட்டாதி 4 சனி - திருவோணம் 4 ராகு - மூலம் 4 கேது - திருவாதிரை 2.

மேஷம் : (அசுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் 11-லும், குரு 5-லும் அமர்ந்திருப்ப தாலும், செவ்வாயையும், சூரியனையும், ராகுவையும் குரு பார்ப்பதாலும் உங்கள் அறிவாற்றலும், செயல் திறமையும் பிரகாசிக்கும். முக்கியப் பொறுப்புகள் வந்துசேரும். உயர்மட்டத்தில் உள்ளவர்களால் அனு கூலம் பெறுவீர்கள். அரசுப்பணிகள் ஆக்கம் தரும். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் உண் டாகும். செந்நிறப் பொருட்களால் வருவாய்க்கு இடம் உண்டு. பொருளாதார நிலை திருப்திகரமாக இருந்துவரும். நற்பணிகளுக்காக ஓரிரு செலவு களையும் மேற்கொள்ள வேண்டி வரலாம். குடும்ப நலத் திட்டங்கள் நிறைவேறும். நிர்வாக ஆற்றல் பளிச்சிடும். பொறியியல், சட்டம், காவல், இராணு வம், மின்சாரம், நெருப்பு போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். எதிரிகள் அகலுவார்கள். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனு கூலமான போக்கை எதிர்பார்க்கலாம். தொழி லாளர்களும், உத்தியோகஸ்தர்களும் உற்சாகம் காண்பார்கள்.

பதவி உயர்வு, இட மாற்றம், ஊதிய உயர்வு ஆகியவை கிடைப்பதற்கும் சந்தர்ப்பம் கனிந்துவரும்.

கலைஞர்கள் சுபிட்சம் காண்பார்கள். வியாப
களுக்கும், எழுத்தாளர்களுக்கும் மாமூலான வளர்
தடைப்படாது. ரியல் எஸ்டேட் இனங்கள் அளவே
நலம் தரும். 26ஆம் தேதி முதல் கணவ
மனைவியிடையே இருந்துவந்த பிரச்சினைகள் கு
வடையும். 27ஆம் தேதி முதல் பொறியியல் து
யாளர்கள் விழிப்புடன் இருப்பது அவசியம். உ
நலனிலும் அக்கறை தேவைப்படும். 30ஆம் தே
முதல் குரு வக்கிர நிவர்த்தி பெறுவதால் த
பட்டிருக்கும் காரியங்கள் ஒன்றிரண்டு நிறை
வழிபிறக்கும். மே மாதம் 7ஆம் தேதி மு
வியாபாரிகள் இருட்டிலிருந்து வெளிச்சத்தி
வருவார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்
ஆதாயம் கொண்டுவரும். அறிவுத்திறன் கா
மாக மற்றையோரால் பாராட்டப்படுவீர்
மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்ம
போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மதிப்
அந்தஸ்தும் உயரும். ஏப்ரல் 14,15,16,17,23,24,27
30 மே 2,5,6,7,11,12,13 தேதிகள் அனுகூலமான
கீழ்த்திசை நலம் தரும். சிம்ம ராசிக்காரர்
உதவுவார்கள். 3ஆம் எண் அதிர்ஷ்டமானது.

ரிஷபம் : (கிருத்திகை 2ஆம் பாதம் மு ரோகிணி, மிருகசீரிஷம் 2ஆம் பாதம் முடிய)

10,11ஆம் இடங்களில் உள்ள கிரகங்கள் உங்க
தோற்றப் பொலிவையும், செயல்திறமைய
வெளிப்படுத்துவார்கள். எதிர்ப்புகளைக் கட
வாழ்க்கைப்பாதையில் முன்னேற்றம் காண்பீர்
பொறியியல் துறை ஆக்கம் தரும். சட்டம், காவ
இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்
சுபிட்சம் காண்பார்கள். சினிமா, நாடகம், நா
யம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்
வர்களுக்கு வெற்றி வாய்ப்புகள் கூடும். பெ
களால் அனுகூலம் ஏற்படும். வழக்கு, விய
ஜியங்களில் அனுகூலமான போக்கை எதிர்பார்
லாம். குடும்பநலனில் அக்கறை செலுத்தின
அமைதி காணமுடியும். மக்களால் அனுகூலத்தி
இடமுண்டு. நிலம், மனை, வீடு, வாகனம் போ
ஸ்திரச் சொத்துகளால் அளவோடு நலமேற்ப
வியாபாரிகள் ஓரளவு வளர்ச்சி காண்பார்
வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். புதிய ஆ
அணிமணிகள், அலங்காரப் பொருட்கள் ஆ
வற்றின் சேர்க்கைக்கு இடமுண்டு.

நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் செயலாற்றுவது நல்லது. அரசு விவகாரங்களில் விசேடமான நன்மைகளை எதிர்பார்க்க இயலாது. மருத்துவர்கள் பொறுப்புணர்ந்து காரியமாற்றுவது அவசியம். பிறமொழி, மதக்காரர்களிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். பேச்சிலும், உணவு விஷயத்திலும் கட்டுப்பாடு தேவை. 26ஆம் தேதி முதல் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். பெண்களால் ஓரிரு பிரச்னைகளுக்கு உள்ளாகவும் நேரலாம். 27ஆம் தேதி முதல் செந்நிறப்பொருட்களால் வருவாய் பெற வாய்ப்புண்டாகும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் ஏற்றம் பெறுவார்கள். பெற்றோர் நலனில் கவனம் தேவை. உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக விளங்குவார்கள். பொருளாதாரநிலை ஏற்றம், இறக்கம் கொண்டதாகவே அமையும். ஏப்ரல் 14,15,16,17,20,27,29,30 மே 2,5,6,7,11, 12,13 தேதிகள் சிறப்பானவை. தென்திசை அனுகூலமானது. கும்ப, மீன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மிதுனம் : (மிருகசீரிஷம் 3ஆம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3ஆம் பாதம் முடிய)

11இல் உள்ள சூரியன் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துவார். உங்கள் எண்ணங்களில் ஒன்றிரண்டு இப்போது நிறைவேறும். எடுத்த காரியம் வெற்றி பெறும். துணிச்சலுடனும், தன்னம்பிக்கையுடனும் காரியமாற்றுவீர்கள். உடன்பிறந்தவர்களால் அனுகூலம் உண்டாகும். அரசுப்பணிகள் ஆக்கம் தரும். உயர் பதவிகள் கிடைக்கப் பெறவும் வாய்ப்புக் கூடிவரும். மருத்துவர்கள் நற்பெயர் பெறுவார்கள். ஜன்மத்தில் கேதுவும், 8இல் சனியும் உலவுவதால அலைச்சலும், மன அமைதிக் குறைவும் உண்டாகும். கடுமையாகப் பாடுபடவேண்டியும் வரலாம். 7இல் ராகு இருந்தாலும் குரு அவரைப் பார்ப்பதாலும், சுக்கிரபலம் கூடியிருப்பதாலும் கணவன், மனைவியிடையே சீரான நிலைமை இருந்துவரும். 27ஆம் தேதிக்குப் பிறகு நற்பணிகளில் ஈடுபடுகிற வாய்ப்புக் கனிந்துவரும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்பான பாதையைக் காண்பார்கள். செய்துவரும் தொழிலில் முன்னேற்றம் உண்டு

ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்கள் அளவோடு லாபம் தரும். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் உற்சாகம் காண்பார்கள். மக்களால் ஓரிரு நன்மைகள் உண்டாகும். எதிரிகள் அகலுவார்கள். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்கைக் காண்பீர்கள். கடன் உபத்திரவம் ஓரளவு குறையும். தொழிலாளர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் சிறுசிறு பிரச்னைகள் அவ்வப்போது ஏற்படும். மே 7ஆம் தேதி முதல் உடல்நலம் சீர்பெறும். வியாபாரிகள் இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வருவார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆதாயம் கொண்டுவரும். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச்சொத்துகளின் சேர்க்கையோ, ஏற்படும். பெரியவர்களின் நல்லாசிகளைப் பெற்று எக்காரியத்திலும் ஈடுபடுவது நல்லது. தெய்வப்பணிகளில் தொடர்ந்து ஈடுபடுவதன் மூலம் நலம் உண்டாகும். ஏப்ரல் 14,15,16,17,20,23,29,30 மே 2,5,6,7,11,12,13 தேதிகள் சிறப்பானவை. கீழ்த்திசை நலம் தரும். மீன, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கடகம் : (புனர்பூசம் 4ஆம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)

குரு, சூரியன், சுக்கிரன் ஆகியோரது பலம் காரணமாக உங்கள் அறிவாற்றலும், நிர்வாகத் திறமையும், பேச்சுவன்மையும், வசீகரச் சக்தியும் பளிச்சென்று பிரகாசிக்கும். பொருளாதார நிலையில் ஏற்றம் காண்பீர்கள். செய்துவரும் தொழில் வளர்ச்சி பெறும். எதிர்ப்புகள் என்பவை கட்டுக்குள் அடங்கியிருக்கும். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மேடைப்பிரசங்கிகள், மருத்துவர்கள், இரசாயனத் துறைகளைச் சேர்ந்தவர்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் விசேடமான வளர்ச்சியைக் காண்பார்கள். அலுவலகங்களில் பணியாற்றுபவர்கள் பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவற்றைப் பெறுவார்கள். பிறரால் உங்களுக்கும், உங்களால் பிறருக்கும் அனுகூலங்கள் உண்டாகும். பிற மொழி, மதங்களைச் சேர்ந்தவர்கள் உதவ முன்வருவார்கள். முக்கியஸ்தர்களின் தொடர்பு ஆக்கம் தரும். ரேடியோ, வீடியோ, டி.வி., போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும்.

சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். 26ஆம் தேதி முதல் விழிப்புடன் காரியமாற்றுவது நல்லது. 27ஆம் தேதி முதல் பொறியியல் துறையாளர்கள் பிரச்னைகளிலிருந்து மீளுவார்கள். நற்பணிகளில் ஈடுபடும் வாய்ப்புக் கனிந்துவரும். மக்களால் பெற்றோருக்கும், பெற்றோரால் மக்களுக்கும் அனுகூலங்கள் உண்டாகும். 30ஆம் தேதி முதல் குரு வக்கிர நிவர்த்தி பெறுவதால் நற்பலன்களின் அளவு கூடும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழவும் அடிகோலப்படும். மே 7ஆம் தேதி முதல் வியாபாரிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் உற்சாகம் கூடப் பெறுவார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆக்கம் தரும். ஏப்ரல் 14,15,16,17,20,23,24,30 மே 2,5,6,7,11,12,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்குத் திசை அனுகூலமானது சிம்ம, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,4 எண்கள் அதிர்ஷ்டமானவை.

ஐம்புலன்களையும் அடக்கி மனதை ஒரு நிலைநிறுத்தி பரம்பொருள்பால் ஏகாக்ரக நாட்டம் கொள்வீர்!

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் 9இல் இருந்தாலும் பலம் பெற்றிருப்பதால் உங்கள் நிர்வாகத்திறமை கூடும். 6இல் உள்ள சனியும், 11இல் உள்ள கேதுவும் எதிர்ப்புகளைச் சமாளிக்கக்கூடிய ஆற்றலை வழங்குவார்கள். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் மாமூலான வளர்ச்சி பாதிக்கப்படாது. புதிய ஆடை, அணிமணிகளின் சேர்க்கை நிகழும். சமூக நலப் பணியாளர்கள் நற்பெயர் பெறுவார்கள். அரசு விவகாரங்களில் அனுகூலமான போக்குத் தென்படும். அரசியல்வாதிகள் புதிய கொள்கைகளை வெளியிட இந்த நேரம் ஏற்புடையதாகும். தெய்வப்பணிகளை நிறைவேற்றிக் கொள்ளச் சந்தர்ப்பம் கனிந்துவரும். மக்கள்நலம் சீராக இருந்து வரும். கணவன், மனைவியிடையே சிறுசிறு சலசலப்புகள் ஏற்படுமானாலும் அவற்றைச் சமாளித்துவிடுவீர்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை உதயமாகும்.

பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மனத் தெளிவு பெறுவார்கள். 27ஆம் தேதி முதல் பொறியியல் துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கும் ஓரிரு சங்கடங்கள் உண்டாகும். வியாபாரிகள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். ஜன்மத்தில் குரு உலவுவதால் அவ்வப்போது மன அமைதிக் குறைவு உண்டாகும். அலைச்சலால் சோர்வு ஏற்படவும் கூடும். உத்தியோகஸ்தர்கள் பொறுப்புணர்ந்து காரியமாற்றுவது அவசியம். பொருளாதார நிலையில் விசேடமான அபிவிருத்திக்கு இடமிராது. நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச்சொத்துக்கள் விஷயத்தில் விழிப்புடன் ஈடுபடுவது அவசியமாகும். குரு, செவ்வாய் பிரீதியான காரியங்களில் ஈடுபட்டு வருவது நல்லது. ஏப்ரல் 14,15,16,17,20,23,24,27 ஏப்ரல் 2,5,6,7,11,12,13 தேதிகள் சிறப்பானவை. மேற்குத் திசை அனுகூலமானது. மேஷ, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,7,8 எண்கள் நலம் தரும்.

கன்னி : (உத்திரம் 2ஆம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2ஆம் பாதம் முடிய)

6,10 ஆம் இடங்களில் உள்ள கிரகங்கள் உங்கள் பராக்கிரமத்தை வெளிப்படுத்துவார்கள். எதிர்ப்புகளை முறியடித்து வெற்றிப்பாதையில் முன்னேற்றம் காண்பீர்கள். இயந்திரப்பணிகள் ஆக்கம் தரும். இஞ்சினீயர்கள் சுபிட்சம் காண்பார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் சீராக வளர்ச்சி இருந்துவரும். நூதன நண்பர்கள் ஓரிருவர் உதவ முன்வருவார்கள். நிலம், மனை, வீடு, வாகனங்களால் ஓரளவு நலம் உண்டாகும். வாழ்க்கைத்துணை நலனில் அக்கறை செலுத்தி வருவது அவசியமாகும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றம் காண அரும்பாடுபட வேண்டிவரும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் சுமுகமாகப் பழகிவந்தால் நலம் பெற வாய்ப்புண்டாகும். மக்கள் நலம் ஒருநாள் போல் மறுநாளிராது. ஸ்பெகுலேஷன், கொடுக்கல் வாங்கல் இனங்களில் ஈடுபடவேண்டாம்.

குடும்பநலம் சீராக இருந்துவரும். உடன் பிறந்தவர்களால் ஓரிரு தொல்லைகள் விளையும். உற்றார், உறவினர் சேர்க்கையால் மனத்தில் மகிழ்ச்சி உண்டாகும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல திருப்பத்தை எதிர்பார்க்கலாம். 26ஆம் தேதி முதல் கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வருவார்கள். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழவும் அடிகோலப்படும். 27ஆம் தேதி முதல் எக்காரியத்திலும் விழிப்புடன் ஈடுபடுவது அவசியமாகும். பயணத்தின்போதும், இயந்திரங்களில் பணியாற்றும்போதும் பாதுகாப்பு தேவை. கணவன், மனைவியிடையே கருத்து மாறுபாடு உண்டாகவும் காரணமுண்டு. மே 7ஆம் தேதி முதல் வியாபாரம், எழுத்து, கணிதம், விஞ்ஞானம், பத்திரிகை ஆகிய துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெளிச்சம் தெரியவரும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்களால் ஆக்கம் உண்டாகும். நல்லவர்களின் தொடர்பை வலுப்படுத்திக் கொள்வது நல்லது. ஏப்ரல் 14,15,16,17,20,23,24,27,29,30 மே 5,6,7,11,12,13 தேதிகள் அனுகூலமானவை. வடமேற்குத் திசை நலம் தரும். மகர, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6,7,8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

துலாம் : (சித்திரை 3ஆம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் 6இல் அமர்ந்திருப்பதாலும், ராசிநாதனுக்கு 6இல் குரு அமர்ந்திருப்பதாலும் உங்கள் தேக ஆரோக்கியம் பாதிக்கப்படும். மனத்தில் சலனம் குடிகொள்ளும். பெண்களால் உபத்திரவத்திற்கு ஆட்பட நேரும். கணவன், மனைவியிடையே பிரச்னைகள் எழும். பொறுமையோடும், பக்குவத்தோடும் நிலைமையைச் சமாளிப்பது அவசியமாகும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் அகலக்கால் வைக்கவேண்டாம். 4இல் உள்ள சனி அலைச்சலையும், உழைப்பையும் கூட்டுவார். தாய், தந்தையர் நலம் கவனிக்கப்பட வேண்டிவரும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் எதிர்பார்த்த அனுகூலத்தைப் பெறத் தடையேற்படும். பயணத்தால் அனுகூலம் உண்டு எனினும் பாதுகாப்பும் தேவைப்படும். மக்களால் அனுகூலம் பெறுவீர்கள். குடும்பநலனில் அக்கறை செலுத்தினால் அமைதி காணமுடியும். உடன்பிறந்தவர்கள் அளவோடு உதவுவார்கள். நண்பர்கள், உற்றார், உறவினர்களால் அதிகம் நன்மையை எதிர்பார்க்கவேண்டாம்.

ஐம்புலன்களை அடக்க முயற்சி எடுக்காது
ஐந்து வேளை பூஜை செய்தும் நற்பயனிராது!

உத்தியோகஸ்தர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். மருத்துவம், இரசாயனம், ஆன்மிகம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் தகுதிக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். வேற்றுமொழி, மதங்களைச் சார்ந்தவர்களால் நலம் பெறுவீர்கள். 26ஆம் தேதி முதல் ஓரிரு எண்ணங்கள் நிறைவேற வாய்ப்புக் கூடிவரும். 27ஆம் தேதி முதல் பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். எதிர்ப்புகள் என்பவை குறைவடையும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்கை எதிர்பார்க்கலாம். 30ஆம் தேதி முதல் குரு வக்கிர நிவர்த்தி பெறுவதால் மனச்சலனங்கள் என்பவை குறைவடையும். மே 7ஆம் தேதி முதல் நிறுவன, நிர்வாகத்துறைகளைச்சேர்ந்தவர்களுக்கும், நவீன விஞ்ஞானததுறைகளைச் சேர்ந்தவர்களுக்கும் உற்சாகமான சூழ்நிலை உருவாகும். நற்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பும் உதயமாகும். ஏப்ரல் 14,15,16, 17,20,23,24,27,29,30 மே 2,6,7,11,12,13 தேதிகள் சிறப்பானவை. தென்திசை நலம் தரும். தனுசு, கும்ப ராசிக்காரர்கள் உதவுவர். 3,4 எண்கள் அனுகூலமானவை.

விருச்சிகம் : (விசாகம் 4ஆம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

சூரிய பலம் கூடியிருப்பதால் உங்கள் பராக்கிரமம் வெளிப்படும். செய்து வரும் தொழில் அபிவிருத்தி அடையும். நிர்வாகத்திறமை பளிச்சென்று பிரகாசிக்கும். புதிய பொறுப்புகள் வந்துசேருவதற்கும் வாய்ப்புண்டு. எதிரிகள் அடங்கிப் போவார்கள். அரசியல்வாதிகள், அரசுப்பணியாளாகள், பொதுநலப்பணியாளர்கள் ஆகியோருக்கெல்லாம் மதிப்பும், அந்தஸ்தும், செல்வாக்கும் உயரும். அரசாங்கத்தாரால் எதிர்பார்த்த காரியங்கள் ஈடேறவும் சந்தர்ப்பம் கனிந்துவரும். குடும்பநலனில் அக்கறை செலுத்தினால் அமைதி காணமுடியும். நண்பர்கள் ஒருவர் உதவ முன்வருவார்கள். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்குத் தென்படும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் அதிர்ஷ்ட வாய்ப்புகளைப் பெறுவார்கள். கணவன், மனைவியிடையே அன்னியோன்யம் கூடும். இரும்பு சம்பந்தப்பட்ட இனங்கள் ஆக்கம் தரும். தோட்டங்கள், சுரங்கங்கள், ஆலைகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பணியாற்றுபவர்கள் எண்ணம் ஈடேறப் பெறுவார்கள்.

வியாபாரிகளுக்கும், எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் திறமைக்குரிய வரவேற்பு இருந்துவரும். 26ஆம் தேதி முதல் வாழ்க்கைத் துணை நலனில் அக்கறை தேவைப்படும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டிவரும். 27ஆம் தேதி முதல் மனத்திற்கினிய சம்பவங்கள் ஒன்றிரண்டு நிகழும். 2இல் ராகுவும், 8இல் கேதுவும் சஞ்சரிப்பதால் அவ்வப்போது சிறுசிறு பிரச்னைகள் உருவாகும். பேச்சில் நிதானம் தேவை. பிறமொழி, மதக்காரர்களிடம் நெருக்கம் வேண்டாம். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு அவசியம். பயணத்தின்போதும், இயந்திரங்களில் பணியாற்றும்போதும் பாதுகாப்புத் தேவை. மே 7ஆம் தேதி முதல் வியாபாரிகள் மந்தநிலை விலகப் பெறுவார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆக்கம் தரும். நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு உற்சாகம் கூடும். ஏப்ரல் 14,15,16, 17,20,23,24,27,29,30 மே 2,11,12,13 தேதிகள் சிறப்பானவை. கீழ்த் திசை நலம் தரும். மகர, மேஷ ராசிக்காரர்கள் உதவுவர் 1,8 எண்கள் அனுகூலம்

தனுசு : (மூலம்,பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்முடிய)

பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிப்பதால் உங்கள் அபிலாஷைகள் ஒவ்வொன்றாகப் பூர்த்தி அடைந்துவரும். தெய்வப் பணிகளிலும், தருமப்பணிகளிலும் ஈடுபாடு கொள்வீர்கள். துணிவோடும், தன்னம்பிக்கையோடும் காரியமாற்றி அதில் வெற்றி பெறுவீர்கள். புகழ், அந்தஸ்து, செல்வாக்கு, வாழ்க்கை வசதிகள் யாவும் கூடும். மக்கட்பேறு அல்லது மக்களால் பாக்கியம் உண்டாகும். மாணவர்கள் சுபிட்சம் காண்பார்கள். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச்சொத்துகளின் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ பெற வாய்ப்புண்டாகும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் சேர்க்கை மனத்திற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். பெற்றோரால் அனுகூலத்திற்கு இடம் உண்டு. குடும்பநலம் கவனிப்பின் பேரில் சீராக இருந்துவரும். பொருளாதார நிலையில் ஏற்றம் உண்டாகும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் – வாங்கல் இனங்கள் ஆக்கம் தரும்.

அலுவலகங்களில் பணி புரிபவர்கள் உற்சாகமான சூழ்நிலையைக் காண்பார்கள். பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவை கிடைக்கப் பெறவும் சந்தர்ப்பம் கனிந்துவரும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் வரவேற்பு கூடும். அரசியல்வாதிகள் மதிப்பு உயரப் பெறுவார்கள். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் எண்ணம் ஈடேறப் பெறுவார்கள். கலைத்துறையாளர்களுக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடிவரும். 27ஆம் தேதி முதல் இயந்திரப்பணியாளர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. பயணத்தின்போதும் பாதுகாப்பு அவசியம். மே 7ஆம் தேதி முதல் வியாபாரிகள் அடக்கத்தோடு இருப்பது நல்லது. ஏப்ரல் 14,15,16,17,20,23, 24,27,29,30 மே 2,5,6,11,12,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. மேஷ, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,6 எண்கள் அதிர்ஷ்டம் தரும்.

மகரம் : (உத்திராடம் 2ஆம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2ஆம் பாதம் முடிய)

பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் உங்கள் தேக ஆரோக்கியம் பாதிக்கப்படும். மனத்தில் சலனம் குடிகொள்ளும். எடுத்த காரியத்தை நிறைவேற்ற அரும்பாடுபட வேண்டிவரும். பிறர் மனம் புண்படும்படியான வார்த்தைகளை உதிர்த்துவிடுவீர்களெனத் தெரிவதால் பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. வீண் சண்டை, சச்சரவுகளில் ஈடுபட வேண்டாம். எதிர்ப்புகளின் கரம் வலுத்திருக்கும் நேரமிது என்பதால் யாரிடத்திலும் வெளிப்படையாகப் பழகாமல் இருப்பது அவசியம். அலைச்சலும் உழைப்பும் கூடும். அதற்கான வருவாயிராது. நல்லவர்களின் அதிருப்திக்கு ஆளாக வேண்டிவரும். குடும்பநலனில் அக்கறை செலுத்துவது நல்லது. பொருளாதார நிலை சீராக இராது. எதிர்பாராத செலவுகள் அவ்வப்போது ஏற்படும். வியாபாரிகள், உழைப்பாளர்கள், உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் தங்கள் பொறுப்புகளைச் சரிவர ஆற்றிவருவது அவசியமாகும்.

விரும்பத்தகாத இடமாற்றமோ, நிலைமாற்றமோ கூட ஏற்படலாம். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்கைக் காண்பது அரிது. நூதனமான காரியங்களில் ஈடுபட இந்த நேரம் விசேடம் உடையதாகாது. நிலம், மனை, வீடு, வாகனங்களால் அளவோடு ஆதாயம் கிடைத்துவரும். அரசியல்வாதிகளும், அரசுப்பணியாளர்களும் எச்சரிக்கையுடன் செயற்பட்டால் மோசமான நிலையேற்படாதவாறு தங்களைக் காத்துக் கொள்ளலாம். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மாமூலான வரவேற்பு இருந்துவரும். வியாபாரிகள் முன்னேற்றம் காண அரும்பாடுபட வேண்டிவரும். 26ஆம் தேதி முதல் ஓரிரு நண்பர்கள் உதவ முன்வருவார்கள். கேளிக்கை, உல்லாசங்களில் பங்கேற்கவும் சந்தர்ப்பம் கனிந்துவரும். 27ஆம் தேதி முதல் மனத்தில் துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். எதிர்ப்புகளைச் சமாளிக்கும் சக்தி பிறக்கும். பொறியியல் துறையாளர்களுக்கு வெற்றி வாய்ப்புகள் கூடும். மே 7ஆம் தேதி முதல் வியாபாரிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், விஞ்ஞானிகள் ஆகியோருக்கெல்லாம் வெளிச்சம் தெரியவரும். தெய்வப்பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டுவருவது நல்லது. ஏப்ரல் 16,17,20,23,24,27,29,30 மே 2,5,6,7,13 தேதிகள் ஓரளவு சிறப்பானவை. தென்கிழக்குத் திசை நலம் தரும். மீன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6 ஆம் எண் அதிர்ஷ்டமானது.

கும்பம் : (அவிட்டம் 3ஆம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3ஆம் பாதம் முடிய)

ஜன்ம ராசியில் செவ்வாயும், விரயத்தில் சனியும் உலவுவதால் உங்கள் தேக ஆரோக்கியம், கௌரவம், செல்வாக்கு, அந்தஸ்து, புகழ், வாழ்க்கை வசதிகள் யாவும் சாதாரணமாகவே இருந்துவரும். உடலில் காயங்கள் பட நேரும். வீண்செலவுகள் ஏற்படவும், பொருள் காணாமல்போவதற்கும்கூடச் சந்தர்ப்பம் உண்டு. கைப்பொருளைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்வது நல்லது. 5இல் உள்ள கேது ஓரிரு சலனங்களை உண்டுபண்ணுவார். ஏனைய கிரகங்களின் சஞ்சாரம் திருப்திகரமாக இருப்பதால் சங்கடங்களை எல்லாம் கடந்து, வாழ்க்கைப்பாதையில் முன்னேற்றம் காண்பீர்கள். நல்லோர் தொடர்பால் நலம் பெறுவீர்கள். பிறமொழி, மதக்காரர்கள் உதவ முன்வருவார்கள். கணவனால் மனைவிக்கும், மனைவியால் கணவனுக்கும் அனுகூலங்கள் உண்டாகும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். ரியல் எஸ்டேட் இனங்கள் லாபம் தரும். பெற்றோரால் மக்களுக்கும், மக்களால் பெற்றோருக்கும் நலமேற்படும்.

பேச்சுவன்மை கூடும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிகழும். அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள், சமூக நலப்பணியாளர்கள் ஆகியோர் தங்கள் மதிப்பு உயரப் பெறுவார்கள். பொருள்வரவு திருப்திகரமாக இருந்துவரும். கூட்டுத் தொழில் ஏற்றம் தரும். ஆடை, அணிமணிகள், அலங்காரப் பொருட்களின் சேர்க்கையோ, அல்லது அவற்றால் ஆதாயமோ உண்டாகும். வியாபாரிகள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் புகழ் கூடும். தெய்வப்பணிகளிலும், தருமப்பணிகளிலும் ஈடுபாடு உண்டாகும். ஏற்றுமதி, இறக்குமதி இனங்கள் ஆதாயம் கொண்டுவரும். 27ஆம் தேதி முதல் தொழிலில் வளர்ச்சி கூடும். உடன்பிறந்தவர்கள் மூலமாக ஓரிரு நன்மைகளை எதிர்பார்க்கலாம். மே 7ஆம் தேதி முதல் கணிதம், விஞ்ஞானம், வியாபாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. ஏப்ரல் 17,20,23,24,27,29,30 மே 2,5,6,7,11 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. மீன, மேஷ, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,4,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மீனம் : (பூரட்டாதி 4ஆம் பாதம் முதல் உத்திரட்டாதி, ரேவதி முடிய)

சுக்கிரனும், புதனும் உங்கள் ஜன்ம ராசியில் வீற்றிருப்பதால் அறிவாற்றலும், தோற்றப் பொலிவும் கூடப் பெறுவீர்கள். கலைத்துறை ஆதாயம் கொண்டு வரும். வியாபாரம், கணிதம், விஞ்ஞானம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். தொழிலாளர்களுக்கும் சமூக நலப்பணியாளர்களுக்கும் உற்சாகமான சூழ்நிலை உருவாகும். நூதன நண்பர்கள் உதவுவார்கள். கணவன்,



நடராசா... நீயே என் தெய்வம்!

பால. இரமணி

நடக்கும்
வித்தைகளில்
நிஜத்தைக் காட்டும்
நடராசரே!
நீயே என்
தெய்வம்!

சசல்கள்
கொட்டுகிறபோதும்
பூசல்கள்
முட்டுகிற போதும்
சனாய்
வந்தெனைக்
காக்கின்ற
நடராசா!
நீயே என்
தெய்வம்!

என் பூசனை
புரியாமல்
மறுதலிக்கிறபோதும்
பரிதவிக்கிறபோதும்
மனந்தளராமல்
உன்பேர் சொல்லும்
பக்தன் நான்!

உன்னை
நேசித்து நேசித்து
உன்னையே
யோசித்து யோசித்து
உன்னுள்
நானாய்
ஆகிறேன்... உண்மை!

தில்லையை நீ
நம்புவதைப்
போலே
என் சொல்லையும்
நம்பிட வேண்டும்!

உனைச் சுற்றிச்
சதிராடும்
போலிகளுக்கு
இடையே
உனைச் சுற்றிய
வேலிதான் நான்!

எனை நீ
புரிந்து கொள்கிறபோது
புளகாங்கிதம்
அடைகிறேன்!
எனை நீ
எரிந்து விழுகிறபோதும்
புது கர்வம்
கொள்கிறேன்!

ஓ! சூரியனே –
நீ காட்டுகிற
திசைக்குப்
பூச்சூட்டுகிற
புயல் நான்!

உன்
நடன லயத்தில்
உயிர்ப்பை
உணர்கிறேன்!

அது
உனக்குப்
புரியாமல்
போனாலும்...
நடராசா!
நீயே என்
தெய்வம்!

...னைவியிடையே களிப்புறவு கூடும். பிறர் மனம் ...ண்படும்படியான வார்த்தைகளை உதிர்க்காமல் ...ருப்பது நல்லது. குடும்பத்தில் சிறுசிறு சச்சர...கள் அவ்வப்போது ஏற்படும். பொருளாதார ...லையில் சிக்கல் உண்டாகும். ஸ்பெகுலேஷன், ...காடுக்கல்-வாங்கல் இனங்களில் ஈடுபட வேண்...ாம். வீண் சண்டை, சச்சரவுகளில் பிரவேசிக்க ...ாகாது. வழக்கு, வியாஜ்ஜியங்களில் சாதாரண...ான நிலைமையே இருந்துவரும்.

நண்பர்கள், உற்றார் உறவினர்களால் அதிகம் ...ன்மையை எதிர்பார்க்க வேண்டாம். பொறியியல், ...ட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் ...சர்ந்தவர்கள் விழிப்புடன் காரியமாற்றுவது நல்லது. ...லுவலகங்களில் பணிபுரிபவர்கள், ஆசிரியர்கள், ...பராசிரியர்கள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள் ...திியோர் பிரச்னைகளைச் சந்திக்க வேண்டி வரும். நிலம், மனை, வீடு, வாகனங்கள் போன்ற ஸ்திரச் சொத்துகளால் அனுகூலமிராது. புதிய துறைகளில் பிரவேசிக்க இந்த நேரம் சிறப்புடையதாகாது. பெரியவர்களின் அபவாதத்திற்கு ஆட்படாமல் இருப்பது அவசியம். பயணத்தின்போதும், இயந்திரங்களில் பணியாற்றும்போதும் பாதுகாப்புத் தேவை. மே 7ஆம் தேதி முதல் எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர், வியாபாரம், எழுத்து, கணிதம், நிர்வாகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். மாணவர்களது மந்த நிலை அகலும். தெய்வப்பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதன் மூலம் நலம் பெற வாய்ப்புண்டாகும். ஏப்ரல் 14,15, 16,17,20,23,24,27,29,30 மே 2,5,6,7,11,12,13 தேதிகள் சிறப்பானவை. மேற்குத்திசை அனுகூலமானது. தனுசு, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4,6,8 எண்கள் நலம் தரும்.

சென்னை - 2 உள்ள ஆர்.ஜே. ப்ராசஸ் ஆப்செட் அச்சகத்தில் அச்சிட்டவர் : ஆர். ஜனார்த்தனன்.
...ீராம் டிரஸ்ட், சென்னை - 600 001 சார்பில் வெளியிட்டவர் : ஏ.வி. எஸ். ராஜா, ஆசிரியர் - விக்கிரமன்,
...ிர்வாக அலுவலகம், த.பெ.எண். 5043, 145, லிங்கிச் செட்டி தெரு, சென்னை - 600 001.
தொலைபேசி : 528545. அண்டுச்சந்தா ரூ. 60